# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-10 அக்டோபர்-2024 ரபியுலவ்வல்-ரப்யுலானி 1446







புதிய சட்டங்கள்...

## மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை பாய்ச்சும் சட்டங்கள்

மதுரை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் லஜபதி ராய்



## இஸ்லாமும் இந்திய சமயங்களும்

ஜஸ்டிஸ் எம்.எம். இஸ்மாயில்

## பாலஸ்தீன மீட்புப் போரில்... இஸ்லாமிய ஊடகங்களின் சாதனைகள்!-2



بسم الله الرحمن الرحيم


# வைகறை வெளிச்சம்

அக்டோபர்-2024 ■ ரபியுலவ்வல்-ரப்யுஸானி 1446

■ தனிஇதழ் - ரூ. 40

■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480

■ வெளிநாடு - ரூ. 5000




மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!




**மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை பாய்ச்சும் சட்டங்கள்** 4
மூத்த வழக்கறிஞர் லஜபதி ராய்



**இஸ்லாமும் இந்திய சமயங்களும்**
ஜஸ்டிஸ் எம்.எம். இஸ்மாயில் 10



**பாலஸ்தீன மீட்புப் போரில்.... இஸ்லாமிய ஊடகங்களின் சாதனைகள்!-2** 29

| | |
|---|---|
| தலைமை நீதிபதி வீட்டில் பிரதமர் பூஜை செய்த பிரச்சினை | - 9 |
| சிலுவைப் போர் 2.0 | - 33 |
| இந்தியாவில் முஸ்லிம்கள் - ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு | 37 - 42 |
| பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் | - 46 |
| மகளிர் மன்றம் | - 52 |
| குழந்தை வளர்ப்பு | - 56 |
| ஆரோக்கியம் | - 59 |
| தலையங்கம் | - 62 |

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only




## புதிய சட்டங்கள்...

# மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை பாய்ச்சும் சட்டங்கள்

**நாகர்கோவிலில் தாருல் இஸ்லாம் சார்பில் நீதி அமைத்திக்கான மக்கள் இயக்கம் நடத்திய நிகழ்ச்சியில் இந்திய புதிய குற்றவியல் சட்டம் ஏன் திரும்ப பெற வேண்டும் என்ற தலைப்பில் மதுரை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் லஜபதி ராய் அவர்கள் உரையாற்றிய உரையின் சுருக்கம்**

**மெக்காலே** காலத்தில் உருவாக்கிய சட்டம் தான் இதற்கு முன்பாக இருந்த IPC, CRPC போன்ற சட்டங்கள் இந்த மெக்காலே ஒரு abolishment முறை பின்பற்றும் மனிதர். அடிமை முறையை எதிர்த்தவராக இருந்தார். இந்த மூன்று சட்டங்களுமே காலனிய சட்டங்கள், தற்போது கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய சட்டங்கள் இந்த காலனியாவாத சட்டத்திற்கு எதிரானதாக சொல்லப்பட்டு கொண்டு வரப்பட்டது. அதன்படி பார்த்தால் இதற்கு முன்பு வரைக்கும் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் என்னவாக இருந்தது என்பதை நாம் கவனமாக பார்க்க வேண்டும்.

நாம் இங்கே அமர்ந்து கொண்டிருக்க கூடிய நாகர்கோவில் தெற்கு திருவிதாங்கூரில் முதல் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது இந்த நாகர்கோவிலில் தான். அதனால்தான் மிஷனரி பள்ளியில் அதிகம் படித்தவர்கள் திவான்களாக இருந்தார்கள். அப்படி ஒரு இடத்தில் நாம் அமர்ந்து இந்த உரையை ஆற்றுவது மிக சிறப்பான ஒன்று.

நாகர்கோயிலில் முதல் நீதிமன்றம் பத்மநாபபுரம் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. செக்குலர் என்ற சொல்லுக்கு மாற்றமாக நாகர்கோவிலில் இருந்து வந்த நீதிமன்றங்கள் எல்லோருடைய அதிகாரிகளும் கையில் இருந்தது குறிப்பாக எக்ஸிக்யூட்டிவ், ஜூடிஷியல், அட்மினிஸ்ட்ரேடிவ் மூன்றுமே ஒருவருடைய கைகளில் இருந்தது. இதில் திப்பு சுல்தானுக்கு மிகப்பெரிய பங்கு இருந்தது.

இந்த நாகர்கோயிலுடைய நீதிமன்ற முறையில் ஆரல்வாய்மொழிகோட்டை பகுதியில் கன்னியாகுமாரியில் தொடங்கி நிறைய கோட்டைகள் கிட்டத்தட்ட 100 மீட்டருக்கு ஒரு கோட்டை என்ற அளவில் நிறைய கோட்டைகள் இருந்தது. திப்பு சுல்தான் பிரிட்டிஷுக்கு எதிராக போர் தொடுத்து நுழையும்போது இரு ஒப்பந்தம் வெள்ளையர்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள். 1795இல் திருவிதாங்கூருக்கு உதவியாக பிரிட்டிஷ் இருக்கும் என்றது முதல் ஒப்பந்தம். அதேபோல் இரண்டாவது போரில் 1805 முழு


vaigarai velicham official



சந்தை பொறுப்பு பெப்பர், நல்ல மிளகு முழுக்க கிழக்கிந்திய கையில் சென்றது. புகையிலை வர்த்தகம் முழுவதையும் கிழக்கிந்திய கம்பெனியே கையாண்டது. இந்த கிழக்கிந்திய கம்பெனி பாதுகாப்புக்காக போடப்பட்ட இரண்டு ஒப்பந்தமே தமிழிலும் இல்லை மலையாளத்திலும் இல்லை ஆங்கிலத்திலும் இல்லை இந்த இரண்டு ஒப்பந்தமும் பெரிசியன் மொழியில் இடம் பெற்றிருந்தது. ஏனென்றால் அதுதான் நீதிமன்றத்தின் மொழியாக அன்று இருந்தது. இன்றும் கூட பெரிசிய மொழிக்கலப்பு என்பது நீதிமன்றத்தில் தவிர்க்க முடியாதது ஒன்று. நாங்கள் தினசரி உபயோகப்படுத்தும் ஷெரஸ்டார் போன்ற வார்த்தைகள் அதிகமாக பெர்சிய மொழியை சேர்ந்தது.

சரி, இங்கே பிரச்சனை என்னவென்றால் திருவிதாங்கூர் அரசாங்கத்தை பொறுத்தவரை குறிப்பாக சோழர்களைப் பொறுத்தவரை இராஜராஜ சோழன் தான் முக்கிய மன்னராக கருதப்படுவார். அதேபோல் திருவராங்கூரை பொறுத்தவரை மார்த்தாண்ட வர்மா, அவர்தான் முக்கிய மன்னராக இங்கு கருதப்படுவார். அவர் அனந்த பத்மநாபர் கோவிலுக்கு கோவிலில் உள்ள பெருமாளுக்கு தன்னுடைய ஆட்சியை ஒப்படைத்துதான் அவருடைய பிரதிநிதி யாக ஆட்சி செய்வதாக கூறினார். அவர் சொன்னது, மனுநீதி தான் இங்கு சட்டம் என்று இந்த ஆட்சியை கொண்டு வந்தார். அந்த சட்டம் 64 அடி 34 அடி 12 அடி அதாவது பிராமணனுக்கும் சூத்திரனுக்கும் இடையே 64 அடி தொலைவு இருக்க வேண்டும் என்ற சட்டம். இதிலும் புலையர் சமூகம் போன்ற முக்கியமான சில சமூகங்களை பார்க்கவே கூடாது என்ற சட்டங்கள் இருந்தது. அவர்களை unseeable community என்று குறிப்பிட்டார்கள் அதேபோல் புதர் வன்னார் என்று அம்பேத்கர் குறிப்பிடுவார். அதுபோல நிறைய கம்யூனிட்டி சாதிய பிரிவுகள் இங்க இருந்தது.

அப்போது மார்த்தாண்ட வர்மா மனுநீதி சட்டத்தை நடைமுறைப்படுதினார். எந்த அளவுக்கு பிராமணருக்கு சாதகமாக இருந்தது என்றால், பிராமணர் தவறு செய்தால் அவருக்கு மரணதண்டனை கிடையாது அதிகபட்ச தண்டனை அவருக்கு நாடு கடத்தல் போன்ற தண்டனைதான். மற்ற தண்டனையை பொறுத்தவரையில் கூட சாதி ரீதியான தண்டனை முறை தான் பின்பற்றப்பட்டது.

அதேபோல் நீதிமன்றத்திற்கு உள்ளே சாட்சி சொல்வதற்கு தனிப்பணியாளர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள் குறிப்பாக நாடார், ஈழவர் பறையர் போன்ற அனைத்து சமூக மக்களும் சாட்சி சொல்வதற்காக நீதிமன்றங்களுக்குள் உள்ளே நுழைய முடியாத நிலைமை இருந்தது. இதற்காக ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒரு பணியாளர் இருப்பார் அந்த பணியாளர் நீதிமன்றத்திற்கு வெளியே வந்து இவரிடம்






சாட்சியங்களை கேட்டுக்கொண்டு அவர் உள்ளே சென்று மாவட்ட நீதிபதி அவரிடம் சொல்வார். அதை வைத்து அந்த தீர்ப்பை வழங்குவார் நீதிபதி. இந்த சட்ட நடைமுறையை 1860 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் மாற்றியது. அதுதான் நாம் செக்குலர் என்று சொல்கிறோம். இந்த சட்டம் இன்று அரசியல் அமைப்பு வழங்கி இருக்கும் Article 14 அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்துவதாக இருந்தது. ஆனால் அதற்கு முன்பாக இப்படி ஒன்று நடைமுறையில் இல்லை.

இப்போது மாற்றப்பட்ட சட்டங்களை BNS, BNSS, BSA என்று மூன்று சட்டங்களாக மாற்றி இருக்கிறார்கள். இதில் சாக்சிய அதிநியம் என்ற வார்த்தை சாங்கியல் சட்டம் என்றும் பாரதிய நாகரிக் சுரக்ஸ் தா சன்கீதா அதனை நாம் சட்டங்களின் கோர்வை என்றும் சொல்லலாம். இந்த மூன்று சட்டங்களை கொண்டு வரும்போது நம்முடைய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் இதனை delcolonoize அதாவது காலனிய நீக்கம் அப்படி என்று குறிப்பிட்டார். ஆனால் இது அடிப்படையே தவறான ஒன்று என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இங்கு அவர் சொல்லப்பட்டதுபோல காலனிய நீக்கம் செய்யப்படவில்லை என்பதற்கு நல்ல உதாரணம் இங்கு கொண்டுவரப்பட்ட கூடிய BSA அதாவது பழைய சாங்கியல் சட்டம் அதில் 167 பிரிவுகள் பழைய சட்டத்திலும் 170 புதிய சட்டத்திலும் இடம் பெற்றிருக்கிறது. அதில் சொல்லப்படும் போது "This applies to whole India" என்றது பழைய சட்டத்திலிருந்து புதிய சட்டத்தில் இல்லை.

நம் நாட்டில் பழைய முறைகளில் நீதிமன்றங்களில் ஜூரி முறை பின்பற்றப்பட்டது. தற்போது நடைமுறையில் இல்லை. அந்த ஜூரி முறையை பொறுத்தவரையில் ஒரு நடுவர் அமர்ந்து தீர்ப்பு கூறுவார் அதற்கு கீழே ஜூரிகள் அமர்ந்திருப்பார்கள். இதில் இந்த ஜூரிகள் பெரும்பான்மையாக அந்த தீர்ப்பை ஏற்றுக்கொண்டால் மட்டும்தான் அந்த தீர்ப்பு அமலுக்கு வரும். ஜூரிகள் ஒருவேளை அந்த சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அந்த தீர்ப்பு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதுதான் முன்பு இருந்த சட்டமாக இருந்தது. இப்படி நிறைய அதிகார சட்டங்கள் பலமுறை மாற்றப்பட்டு இன்று நாம் கொண்டாடப்பட்டு கூடிய 1870 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது இந்திய தண்டனைச் சட்டம்.

இதில் காலனிய நீக்கம் என்பது தவறான கருத்து. இதில் காலனிய நீக்கம் செய்யப்படவில்லை என்பதை குறிப்பிடும் முறையில் நிறைய உதாரணங்கள் இருக்கிறது.

124A, Sedition அதாவது ராஜ துரோகம் என்ற வழக்கு இதனுடைய புகழ்பெற்ற வழக்கு பால கங்காதரதிலக் வழக்கு இவரை இரண்டு முறை Sedition ராஜ துரோகம் வழக்கில் 1917, 1908 Pormoting dissaggection என்று சிறையில் அடைத்தனர். அப்போது பிளேக் நோய் புனேவில் பயங்கரமாக பரவிக்கொண்டிருந்த கால கட்டம். அப்போது அங்கிருந்து பிரிட்டிஷ் ஐபிஎஸ் அதிகாரி புனேவில் பிளேக் நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகளை செய்து கொண்டிருந்தார். அதற்காக ஒவ்வொரு

வீடுகளுக்கும் நுழைந்து அந்த மருத்துவ சிகிச்சை கொடுத்துக் கொண்டிருந்தார். இதனை பாலங்காதர திலக் கடுமையாக எதிர்த்தார். எந்த அளவுக்கு எதிர்த்தார் என்றால் ஒரு கட்டத்தில் சிவாஜி அப்சல் கானை கொன்றது போல் இவர் கொலை செய்யப்பட வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்து பேசினார். அதன் விளைவாக ஐபிஎஸ் அதிகாரியை மூவர் சேர்ந்து சுட்டுக் கொள்கிறார்கள். அந்த காலத்தில் பிளேக் நோய்க்கு எதிராக அவர் மேற்கொண்ட முயற்சிக்கு எதிராக திலக் பேசியதால் அது மட்டும் இல்லாமல் இவர் பேசிய பேச்சு அரசுக்கு எதிராக இருந்ததால் இவர்மீது 124 பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இவருக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. 1908ல் வழக்கில் ஆறு வருடம் தண்டனை கொடுக்கப்படுகிறது.

அந்த வழக்கை பொறுத்தவரை அதில் வந்து நாடு கடத்தப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்படுகிறது. கீழ் நீதிமன்றங்களில் இந்த வழக்கை திலக் அவர்களே எடுத்து நடத்து கிறார். இந்த வழக்கை பொறுத்தவரை நிறைய வழக்கறிஞர்கள் இவருக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். ஆனால் இந்த வழக்கில் தோல்வி அடைந்து இவருக்கு நாடு கடத்தக் கூடிய தண்டனை கொடுக்கப்படுகிறது. ஆறு வருடம் தண்டனை கொடுக்கப்படுகிறது. அடுத்து மேல்முறையீடு செய்கிறார். மேல்முறையீட்டில் வெற்றி கிடைக்கிறது. அதில் விடுதலை ஆகிறார். குறிப்பாக இந்த வழக்கை நடத்தி யவர் வழக்கறிஞர் ஜின்னா அவர்கள். இதனை ஏசி.சாவ்லா பாம்பே முதல் தலைமை நீதிபதியாக இருந்தவர் புத்தகமாக எழுதி இருக்கிறார். அதில் இந்த தகவலை குறிப்பிடுகிறார். அதேபோல புதிய சட்டத்தில் இந்த 124 என்பது இல்லை அதற்கு பதிலாக 113 என்ற பிரிவில் தீவிரவாத சட்டமாக இது உட்படுத்தப்பட்டிருக்கிறது.

இதுவே 124 பழைய சட்டம் என்னவாக இருந்தது என்றால் அந்த சட்டம் ஆயுள் தண்டனையாக இருந்தது. இப்போது புதிய சட்டம் அதற்கு மரண தன்னை தருகிறது. இந்த புதிய சட்டத்தின் படி பார்த்தால் திலக் அவர்களுக்கு அன்றே கீழ் நீதிமன்றத்தில் மரண தன்னை வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பழைய சட்டத்தின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டது. புனே பகுதியில் மொத்தம் பிளேக் நோயில் 37,000 பாதிக்கப் பட்டு இறந்தார்கள். ஆனால் புனேவில் மொத்த மக்கள் தொகையே ஒரு லட்சத்து 69 ஆயிரம் தான். இவ்வளவு நெருக்கடி சூழலிலும் ஒருவரின் உதவியை எதிர்த்து அதற்கு எதிராக சிறைக்கு சென்றவர்தான் திலக் அவர்கள்

இங்கு இருக்கக்கூடிய பல சட்டங்கள் காலனிய ஆதிக்கம் கொண்ட சட்டங்களாக நிறைய சட்டங்கள் இருக்கிறது. ஆனால் அதனை அதிகமாக காவல் துறைகள் தற்போது பயன் படுத்துவது கிடையாது. குறிப்பாக 508 IPC தெய்வ நிந்தனை குற்றம் என்று சொல்லப் படக்கூடிய சட்டம். இது எதற்காக பயன்படுத் தப்பட்டது என்றால் பிரிட்டிஷ் காலகட்டங் களில் நிறைய தொழிற்சாலை அவர்கள் கைகளில் இருந்தது. அப்போது நிறைய தர்ணாக்கள் தொழிற்சாலைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு எதிராக ஒரு பிரிவு புகுத்தப்பட வேண்டும் என்ற காரணத்தினால் இந்த தெய்வ நிந்தனை என்ற குற்றம் வந்து சட்டத்தில் சேர்க்கப்பட்டது. ஆனால் அதுவும் பிற்காலத்தில் பெரிதாக பயன்படுத்தப்படவில்லை. இது தற்போது இந்த புதிய சட்டத்திலும் பிரிவு 354 இது இருக்கிறது. அதனால் இது காலனிய ஆதிக்கத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்ட சட்டம் என்பது பொருத்தமானது கிடையாது.

தனிமை சிறை, கைவிலங்கு சட்டம் அந்தஸ்து எல்லாம் ஏற்கனவே இருந்த சட்டங் களிலே நடைமுறையாக இருந்தது. ஆனாலும் தற்போது இதுசட்ட அந்தஸ்து பெற்று இருக்கிறது. முன்னால் இருந்த நடைமுறையை பொறுத்தவரை அதற்கு நீதிமன்ற முன் நீதிபதி வாங்கப்பட வேண்டும். தற்போது அதுவெல்லாம் தேவையில்லை என்ற வழங்கப் பட்டிருக்கிறது.

சமூகப் பணி தண்டனை, இந்த புதிய தண்டனை சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக் கிறது. இது ஒருவித சாதிய நடைமுறையாகவே கருதப்படுகிறது. குறிப்பாக 5000 ரூபாய்க்கு குறைவான திருட்டு போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு இந்த சமூகப்பணி தண்டனை கொடுக்கப்படலாம் என்று புதிய சட்டம் குறிப்பிடுகிறது. பிரிட்டிஷ்க்கு முந்திய காலத்தில், ஊழியம் என்ற பெயர் குறிப்பாக தற்போது கிறிஸ்தவர்கள் பயன்படுத்துகிறார்கள் அடிமை முறை இருந்தது.

இந்த அடிமை முறையை பொறுத்தவரைக்கும்



1755 வரை திருவிதாங்கூரில் அடிமை முறை இருந்தது. அரசாங்க அடிமையாக மட்டும் ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேர் இருந்ததாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அப்படி ஒரு அடிமை முறை ஏற்கனவே இருந்தது. அதைப்போல ஊழியம் ஒரு சமூகப் பணி தண்டனை என்ற ஒரு சட்டத்தை தற்போது புதிய தண்டனை சட்டத்தில் சேர்த்திருக் கிறார்கள்.

பிணை வழங்கும் முறையில் பாதிப்பு இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக முன்பெல்லாம் முந்தைய சட்டங்களில் 15 நாட்களுக்குள் மட்டும்தான் காவல்துறை கஸ்டடி எடுக்க முடியும். ஆனால் தற்போது 60 நாட்களுக்குள் முடிக்கக்கூடிய குற்றங்களாக இருந்தால் 40 நாட்களுக்கு எப்போது வேண்டு மானாலும் கஸ்டடி எடுத்துக் கொள்ளலாம். அதேபோல் 90 நாட்களுக்குள் முடியக்கூடிய குற்றமாக இருக்கும் பட்சத்தில் கொலை குற்றம் போன்ற குற்றங்களுக்கு 60 நாட்கள் வரை கஸ்டடி எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்படுகிறது.

அதேபோல் BNS பிரிவு 113 பயங்கரவா தத்திற்கு எதிரான சட்டம் யாரை வேண்டு மானாலும் இந்த சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கலாம், குற்றம் சாட்டப்படலாம் என்ற ஒரு அச்சுறுத்தலை தருகிறது. இது எப்படி பயன் படுத்தப்பட்ட போகிறது என்பதை இன்னும் வரும் காலங்களில் நாம் தெரிந்துகொள்ள முடியும்

அதேபோல நீக்கப்பட்ட சட்டங்களில் ‘Thug’ சட்டம் நீக்கப்பட்டிருக்கிறது, Adultery சட்டங்கள் நீக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டம் பிரிட்டிஷ் காலகட்டங்களில் நடைமுறையில் இருந்தது. கிட்டத்தட்ட கடந்த 10 ஆண்டுகளில் ‘Thug’ என்ற பெயரில் எந்தெந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. இந்த சட்டம், குறிப்பாக பிரிட்டிஷ் காலங்களில் திருடர்கள் ஒரு பெரும் கூட்டங்களுக்கு ஏதாவது சுப காரியங்களுக்காக செல்வது, புனித பயங்கர பயணங்களுக்காக நெடுந்தோறும் செல்வது இதுபோலான கூட்டங்களில் கூத்துக் கலைஞர்களாக சில பேர் வந்து இந்த கூட்டங்களுடன் சேர்ந்து கொள்வார்கள். சேர்ந்துகொண்டு அவர்கள் நம்பிக்கை தன்மையை பெற்று அவர்கள் நம்பிக்கை தன்மையை பெற்றதன் காரணமாக அவர்கள் முன்னிலையில் ஓய்வெடுக்கும் போது கூட்டத்தினர் அனைவரையும் கொன்றுவிட்டு இவர்கள் கொள்ளையடித்து செல்வார்கள். இவர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட இந்த சட்டம் தற்போது நீக்கப்பட்டிருக்கிறது.

2022ல் கொண்டுவரப்பட்ட ஜன் விஸ்வாஸ் சட்டம் மிக முக்கியமான சட்டமாக பார்க்கப் பட வேண்டியது. ஆனால் இது பெரும்பாலும் யாருடைய கவனத்தையும் ஈர்க்கவில்லை. காரணம் இந்த சட்டங்கள் பெரிதாக இங்கு விவாதத்துக்கு உட்படுத்தப்படவில்லை. அதில் நிறைய சட்டங்கள் கிட்டத்தட்ட 42 தண்டனைகள் நீக்கப்பட்டிருக்கிறது. உதாரணத் திற்கு சேகர் ரெட்டி பண மதிப்பிழப்பின் போது நமக்கு தெரியும் அவருடைய வீட்டி லிருந்து பல லட்சக்கணக்கான 2000 ரூபாய் நோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த பணமதிப்பிழப்பின்போது யாரேனும் பிடிபட் டால் அவர்களுக்கு மூன்று வருட காலம் வரை சிறைதண்டனை கொடுக்கப்படுவது சட்டமாக இருந்தது. ஆனால் 2022ல் கொண்டு வரப்பட்ட சட்டம் இதற்கு கைது நடவடிக்கையை தவிர்த்து தண்டனையாக அபராதம் வழங்கக்கூடிய முறையை கொண்டு வந்தது.

இதன் காரணமாக சேகர் ரெட்டி போன்ற வர்கள் இந்த சட்டத்திலிருந்து அபராதம் வழியாக தப்பித்துக் கொள்ளக்கூடிய வழி வகையை கொடுத்தது. இப்படி உயர் பொருளா தார அந்தஸ்து உள்ளவர்களுக்கு ஆதரவாகவே சட்டம் வடிவமைக்கப்படுகிறது. இப்படி இந்த காலணிய சட்டங்களை எந்தவிதமான மாற்றத்திற்கும் உட்படுத்தாமல் வெறும் மேலோட்டமான சில மாற்றங்களை கொண்டு பேரை மாற்றி வைத்து காவல்துறைக்கு அதிகாரத்தை கொடுத்து புதிய கிரிமினல் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கிறது.



# தலைமை நீதிபதி வீட்டில் பிரதமர் பூஜை செய்த பிரச்சினை



## வழக்குரைஞர் இந்திரா ஜெய்சிங்கின் ஆறு கேள்விகள்?

**புதுடில்லி,** உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் வீட்டில் நடைபெற்ற விநாயகன் சதுர்த்தி விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றதும் அதை பா.ஜ.க.வினரே ஒளிப்படம் மற்றும் காணொலி எடுத்துப் பரப்பியதும் இப்போது விமர்சனத்துக்கு ஆளாகியிருக்கிறது. அதைப்பற்றி மூத்த வழக்குரைஞர் இந்திரா ஜெய்சிங் எழுதியுள்ள கட்டுரையில் எழுப்பியுள்ள 6 கேள்விகள் முக்கிய மானவையாகும்.

1. யாருடைய அழைப்பின் பேரில் பிரதமர் தலைமை நீதிபதியின் இல்லத்திற்குச் சென்றார்?

2. குடியரசுத் தலைவர் உள்ளிட்ட மற்ற அரசமைப்புச் சட்ட நிர்வாகிகள் ஏன் வரவில்லை? அவர்கள் அழைக்கப்பட்டார்களா?

3. தலைமை நீதிபதியின் இரண்டாண்டு பதவிக் காலத்தில், சமூக மற்றும் மத நிகழ்ச்சிகளுக்காக அவர் எத்தனை முறை பிரதமரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்துள்ளார்?

4. தனிப்பட்ட அந்த மதச் சடங்கு ஏன் ஒளிப்படம் எடுப்பதற்கான வாய்ப்பாகப் பயன் படுத்தப்பட்டது?

5. மகாராஷ்ட்டிரா மாநிலத் தேர்தல் வர விருக்கும் நிலையில், மகாராஷ்ட்டிர சின்னமான தொப்பி அணிவதற்குத் தலைமை நீதிபதி விட்டுக் கொடுத்தாரா?


6. ஹிந்து சின்னங்கள், பாடல்கள் மற்றும் சடங்குகளின் இந்த வெளிப்படையான காட்சிப் படுத்துதலைக் கருத்தில் கொண்டு பார்த்தால், ஹிந்து அல்லாத வழக்காடிகள் தலைமை நீதிபதியிடமிருந்து இனி பாரபட்சமற்ற நீதியை எதிர்பார்க்க முடியுமா?

இந்த ஆறு கேள்விகளுக்கும் பிரதமரும், தலைமை நீதிபதியும் பதில் சொல்லக் கடமைப் பட்டவர்கள்.

இந்தக் கேள்விகள் மதச்சார்பின்மையை உயர்த்திப் பிடிக்க வேண்டிய மக்கள் பிரதி நிதிகள் அனைவருக்குமே பொருந்தக் கூடியவை.

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ஆங்கிலப் பதிப்பின் சுருக்கம் (13.09.2024)

# இஸ்லாமும் இந்திய சமயங்களும்



ஜஸ்டிஸ் எம்.எம். இஸ்மாயில்

வகுப்பு ஒற்றுமைக்கு இணையற்ற எடுத்துக் காட்டாக விளங்கும் புண்ணியத்தலமான நாகூரில் 8-2-1921ல் பிறந்த இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் பி. ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றபின் சென்னை சட்டக் கல்லூரியின் பி. எல். பட்டம் பெற்று வழக்கறிஞராகப் பதிவு பெற்றார். அட்வகேட் ஜெனரல்களான திரு கே. ராஜா ஐயர், திரு.வி.கே.திருவேங்கடாச்சாரி, சட்ட நிபுணர்களான திரு.எம். சுப்பராய ஐயர், திரு.வி.வி. ராகவன் ஆகியோருடன் சேர்ந்து தொழில் புரிந்திருக்கிறார்.

அடிஷனல் கவர்ன்மெண்ட் பிளீடர் ஆகவும், ரயில்வேஸ், வக்பு போர்ட் சட்ட ஆலோசகராகவும், விவேகானந்தா கல்லூரி, சென்னை சட்டக் கல்லூரி ஆகியவைகளில் பகுதிநேர சட்ட விரிவுரையாளராகவும் பணி யாற்றியுள்ள இவர், மாநில பார்கவுன்சில், மாநில பார் பெடரேஷன் ஆகியவற்றில் முக்கிய அங்கம் வகித்துச் சேவை செய்துள்ளார். 1962 முதல் 1965 வரை சென்னைப் பல்கலைக் கழக செனட் சபை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

சட்டத்துறைகள் எல்லாவற்றிலும் பொது வாகவும் அரசியல் சட்டத்துறை, முஸ்லிம் சட்டம் ஆகியவைகளில் சிறப்பாகவும் நிபுணத் துவம் பெற்ற இவர் 1967 பிப்ரவரியில் டெல்லி ஹைக்கோர்ட் நீதிபதியாக நியமிக்கப் பெற்றார். 1967 நவம்பரில் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு மாற்றலாகி வந்து சேர்ந்தது முதல் அங்கேயே நீதிபதியாகப் பணியாற்றி வருகிறார்.

சென்னையிலுள்ள சமூக கல்வி தர்ம ஸ்தாபனங்கள் பலவற்றுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள இவர் சென்னை புதுக் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டிருந்திருக்கிறார்.

பள்ளிக்கூட நாட்களிலிருந்தே மகாத்மா காந்தியின் தேச விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நாவன்மை மிக்க சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றி மாணவர்கள், மக்கள் மத்தியில் எழுச்சியூட்டி நாட்டிற்குச் சிறப்பான சேவை செய்துள்ளார்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைத் தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்ட இவரின் பேச்சு, செயல் அனைத்துமே அதனை மேலும் வளர்ப்பதாக அமைவதைக் காணலாம். தமிழ் இலக்கியத்திலும் சமயங்கள் அனைத் திலும் இவருக்கு இருக்கும் ஆழிய ஞானம் மாறுபட்ட கருத்துக்களுக்கிடையே சமரசத்தைத் தோற்றுவித்து சமுதாய ஒற்றுமையை வலியுறுத்து வதாகவே அமைவதைக் காணலாம்.

தமிழில் இதுவரை அவரின் நூல்கள் நான்கு வெளிவந்துள்ளன. சட்டக்கல்லூரியில் பயிலும் காலத்திலேயே மொலாகு அபுல்கலாம் ஆஸாதின் வாழ்க்கை வரலாற்றை எழுதி ராஜாஜியின் முகவுரையையும் பெற்று வெளியிட்டார். திரு வி,க, அவர்களின் அணிந்துரையோடு கூடிய "உலகப்போக்கு" என்னும் அவரின் கட்டுரைத் தொகுப்பு 1981-இல் வெளிவந்தது. டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் முன்னுரையோடு கூடிய அவருடைய "செவிநுகர் கனிகள்" 1974-லும், "கம்பன் கண்ட இராமன்' 1975-லும் வெளிவந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளன. அவரின் தமிழ்த் தொண்டைப் பாராட்டி கோவை நன்னெறிக்கழகம் அவருக்கு "தமிழ் அறிஞர்" என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தது.

சிங்கப்பூர், மலேசியா, வியட்நாம், தாய்லாந்து, ஹாங்காங், ஜப்பான் ஆகிய



vaigarai velicham official

**சென்னைப்** பல்கலைக்கழகம்! அதில் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பெயரால் வழங்கும் தத்துவக்கலையின் விரிவான ஆய்வுப் பிரிவு (The Dr. Radhakrishnan Institute for Advanced study in Philosophy - University of Madras)

இந்த ஆய்வுப் பிரிவின் பொன்விழா மலர் Golden Jubilee Publication.

இஸ்லாம், இந்திய மதங்கள் மற்றும் தமிழ் கலாச்சாரம் என்ற தலைப்பில் பல ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன.

இஸ்லாத்தையும் இந்திய மதங்கள், இந்தியப் பண்பாடுகள், தமிழ் கலாச்சாரம் இவற்றையும் ஒப்பிட்ட ஓர் ஆய்வை காலஞ்சென்ற நீதிபதி எம்.எம். இஸ்மாயீல் அவர்களும், பிரசித்திப் பெற்ற இந்திய ஆட்சிப்பணி, எஸ்.எம்.சுலைமான் ஐ.ஏ.எஸ். அவர்களும் ஆற்றிய ஆய்வுரையை தொகுத்துத் தந்துள்ளார்.

அதில் நீதிபதி எம்.எம். இஸ்மாயீல் அவர்களின் உரையை, வைகறை வெளிச்சம் இந்த இதழில் இடம்பெறச் செய்கின்றோம்.

இந்த ஆய்வுரைகள் 1977இல் வெளியிடப் பட்டவை. அவை தூர்ந்துபோகும் நிலையில் உள்ளன. ஆகவே அவற்றைப் பதிப்பது சிறந்தது.

எதிர்காலத் தலைமுறையினருக்கும் பயன்படும் என இங்கே தருகின்றோம்.

இந்த திசையில் முஸ்லிம் ஆய்வாளர்கள் மேலும் ஆய்வுகளைத் தருவார்கள் என்றால் இன்றைய நிலையில் சமுதாயங்களுக்கிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும்.

இன்று சமுதாயங்களைப் பிளந்துபோட்டு வாழ்பவர்களின் சூழ்ச்சியை முறியடிக்கப் பெரிதும் உதவும் இது.

பாசிசத்தைப் பயங்கரப் படுகொலைகள் குண்டு வெடிப்புகள் இவற்றில் இந்தியாவில் ஆட்சியைப் பிடித்துக்கொண்டவர்களின் கொட்டங்களை அடக்கும்.

ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்கும். எஸ்.எம்.சுலைமான் ஐ.ஏ.எஸ். அவர்களின் ஆய்வு இன்ஷாஅல்லாஹ் அடுத்த இதழில் இடம்பெறும்.

நன்றி - The Golden Jubilee Publication of the Dr. Radhakrishnan Institute for Advanced study in Philosophy - University of Madras

இவண்,
**மு.குலாம் முஹம்மத்**
ஆசிரியர் - வைகறை வெளிச்சம்

**குறிப்பு - யாரேனும் இந்த ஆய்வுகளை மேற்கொள் வார்கள் என்றால் அதற்குப் பக்கத் துணையாக "சேது முதல் சிந்து வரை, பூர்வ மனித இன ஆய்வு ஆசிரியர் எம்.கே.ஈ.மவ்லானா" என்ற நூலும் பெரிய அளவில் பயன்பயக்கும். - MGM**

கீழ்த்திசை நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கே இந்திய இலக்கிய, வரலாற்றுச் செய்திகள் பற்றி உரையாற்றியுள்ளார். 1974-ல் சேலம் விஜயராகவாச்சாரியார் கினைவு நூலக ஆதரவில், "ஐஸ்டிஸ் சுந்தரம் செட்டியார் நினைவுச் சொற்பொழிவுகள்" வரிசையில் President and Governors in the Indian Constitution (இந்திய அரசியல் சட்டத்தில் ஜனாதிபதியும் மாநில ஆளுநர்களும்) என்ற தலைப்பில் அவர் ஆற்றிய பேருரை பலரையும் கவர்ந்தது. அது ஓரியண்ட் லாங்மன்ஸ் கம்பெனியால் இப்போது நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை கம்பன் கழகத்தின் தலைவராக அதன் தோற்றம் முதல் இருந்து வருகிறார். 1975, 1976, 1977 ஆண்டுகளில் சும்பன் விழாவை மிகச் சிறந்த முறையில் நடத்திவைத்த கம்பன் கழகம், இவரின் தலைமையில் கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமைந்த "கம்ப ராமாயணத்தின் அழகான, அபூர்வமான புதிய பதிப்பொன்றை வெளியிட்டுள்ளது,

சுருங்கச் சொல்வதாயின், இவருடைய வாழ்க் கையே ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை என்னும் உயர் இலட்சியத்திற்கொரு முன் மாதிரியாக, எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.

மாறுபட்ட கருத்துகள், சிந்தனைகளினூடே, எண்ண ஒருமைப்பாட்டையும் பல்வேறு மதப் பிரிவினர்களுக்கு மத்தியில் சமரச மனப்பான்மை யையும் தோற்றுவிக்கவும், தமிழ்மொழி, இலக்கியத்தில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த

பற்றினால் பாதிக்கப்படாமல், பல்வேறு மொழி களையும் மதக் கருத்துக்களையும் கற்கவும் ஆராயவும் பாராட்டவும் அவருடைய பரந்த உள்ளம் அவருக்கு உதவி புரிந்து வருகிறது.

* * *

**ஒவ்வொரு** சமயத்தின் கருத்துக்களும், கோட்பாடுகளும் தத்துவங்களும் அதற்கு முன்னிருந்த சமயங்களின் கருத்துக்களாலும், கோட்பாடுகளாலும், தத்துவங்களாலும் பாதிக்கப்பட்டேயிருக்கின்றன. இதுபோலவே, ஒரு நாட்டில் தோன்றிய சமயம், வேறொரு நாட்டில் தோன்றி, அங்கே வந்த சமயத்தால் பாதிக்கப் படுகிறது. இது எல்லா நாடுகளுக்கும் எல்லா சமயங்களுக்கும் பொருந்தும். இரு வேறு சமயங்கள் நெருக்கமாக ஒன்றுக்கொன்று நேராக எதிர்ப்படும்போது இரண்டு விதமான விளைவுகள் உண்டாகக்கூடும். முதலாவது, ஒன்று மற்றதை ஒழித்துவிட்டு, தான் மாத்திரம் நிலை பெற்றுவிடுவது. இரண்டாவது ஒன்றிலுள்ள சில அம்சங்களை மற்றொன்று கிரகித்துக்கொண்டு, அவற்றைத் தன்னுடையதாக ஆக்கிக்கொண்டு, தான் ஒழிந்தோ, அழிந்தோ போகாமல், நிலையாக இருந்துகொண்டே இருப்பது. சமயத்தைப் பற்றிச் சொன்ன இக்கருத்து, கலாச்சாரத்துக்கும் பொருந்தும். இந்தியாவினுடைய சமயங் களுக்கும் கலாச்சாரத்துக்கும் இப்பொது நியதி சிறப்பாகப் பொருந்தும். ஹிந்து மதமும், ஹிந்து கலாச்சாரமும், அவற்றினுடைய சரித்திரத்தில் இந்நாட்டிலே தோன்றியவையோ, வெளியி லிருந்து வந்தவையோவான பல மதங்களையும், கலாச்சாரங்களையும் எதிர்ப்பட்டிருக்கின்றன, மோதவும் செய்திருக்கின்றன. அத்தகைய எதிர்ப்பாட்டின் காரணமாகவும், மோதலின் காரணமாகவும், அவை ஒழிந்துபோய்விடவோ, அழிந்துபடவோ இல்லை. அதற்கு மாறாக, தம்மை வெற்றிகொள்ளக்கூடியவை என்று கருதத்தக்க அம்சங்கள் என்னென்ன புதிதாக உள்ள சமயத்திலோ, கலாச்சாரத்திலோ, உண்டோ, அவற்றைத் தமதாக்கிக் கொண்டு, தாம் வளைந்துகொடுத்து, தம்மையே மாற்றிக் கொண்டு வாழ்ந்துகொண்டே இருக்கின்றன. இதைத்தான், ஆங்கிலத்தில் absorption அல்லது assimilation என்று சொல்வார்கள். இதுதான் இந்தியாவின் genius அல்லது தனித்தன்மை. இத்தகைய தன்மையைக் குறைபாடு என்று சொல்லமுடியாது. அதற்கு நேர் மாறாக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் மிக அத்தியாவசியத் தேவை என்றே சொல்லக்கூடும். ஏனெனில் மாற்றமில்லாத விடத்து, வளர்ச்சியில்லை, தேக்கமே இருக்கும். வளர்ச்சி இல்லாத விடத்து வாழ்வு இல்லை.

இங்கு, இந்தியாவுக்கு வந்த இஸ்லாம், இந்நாட்டு சமய தத்துவங்களில், குறிப்பாகத் தென்னாட்டில் என்னென்ன மாற்றங்களுக்குக் காரணமாக இருந்தது; அதுபோலவே இங்கு வாழ்ந்த முஸ்லிம்களுடைய கருத்திலோ, கோட்பாடுகளிலோ மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டனவா என்பது விவாதிக்கப்படுகிறது. இது அறிஞர் ஆராய்ச்சியாளர், தத்துவமேதை பலருடைய எழுத்துக்களின் ஆதாரத்தில் செய்யப் படுகிறது. இதில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமைக்கு இடமிருக்கிறது. ஏனெனில், ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிய ஒருவருடைய முடிவு அவர் அதை அணுகும் முறையைப் பொருத்ததாகவே இருக்கும். மேலும் சில சரித்திர நிகழ்ச்சிகளிலிருந்தும், சில சரித்திர உண்மைகளிலிருந்தும், நாம் சில முடிவுகளுக்கு வருகிறோம். ஆங்கிலத்தில் சொல்லப்போனால், We draw certain inferences or some conclusions from established historical facts. இதிலும்கூட கருத்து வேற்றுமைக்கு இடமிருக்கக்கூடும். ஆகையால், இதில் கூறப்படும் கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களைக்கொண்ட வாசகர்களை, இந்த பொது உண்மைகளை மனத்திற்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் இலக்கியம், குறிப்பாக தமிழில் உள்ள சமய, தத்துவ இலக்கியங்கள் எந்த அளவுக்கு இஸ்லாமியத் தத்துவக் கருத்தினால் பாதிக்கப் பட்டது; அதுபோலவே முஸ்லிம்களால் ஆக்கப்பட்ட தமிழ் சமய, பக்தி நூல்கள் எந்த அளவுக்கு தமிழ்நாட்டில் இஸ்லாத்துக்கு முன்னாள் இருந்த சமய, பக்தி கருத்துக்களால் பாதிக்கப்பட்டன என்பதைக் காண்பதற்குமுன் இரண்டு முக்கியமான உண்மைகன் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒன்று இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை என்ன; அதிலிருந்து என்னென்ன தத்துவக் கருத்துக்கள் தோன்றின என்பது மற்றொன்று இஸ்லாம் இந்திய நாட்டை, குறிப்பாக தென்னிந்தியாவை, வந்து அடைந்தபோது இங்கே நிலவியிருந்த தத்துவக்


vaigarai velicham official

கருத்துக்கள், சமயக் கருத்துக்கள் யாவை என்பது.

முதலாவதாகச் சொன்னதை இப்பொழுது காண்போம். இஸ்லாத்தினுடைய அடிப்படைக் கொள்கைகள் மிக எளிமையானவை. "இந்திய கலாச்சாரத்தில் இஸ்லாத்தின் செல்வாக்கு" என்று டாக்டர் தாராசந்த் அவர்கள் எழுதிய நூலில் அடியிர் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"அவர் (முஹம்மது) போதித்த சமயம் மிக எளிமையானது. அதன்படி சடங்குகளும் கோட்பாடுகளும் மிகக் குறைவானவை. ஏனெனில் குர்ஆன்படி இறைவன் மனிதனுடைய சுமையை எளிதாக்கவும் இலகுவாக்கவும் விரும்பினான். அவருடைய (முஹம்மதுடைய) அடிப்படைக் கோட்பாடு ஏகத்துவமாகும்; அவருடைய மிக முக்கியமான சடங்கு தொழுகையாகும். நோன்பு, ஜகாத் எனப்படும் ஏழை வரி, ஹஜ் யாத்திரை, இறைவனுடைய தூதராக முஹம்மதுவின் மேல் நம்பிக்கை வைத்தல் ஆகியவை அந்த சமயத்தினுடைய முக்கியமான தூண்களாகும். சமூகத் துறையில் அதனுடைய கவர்ச்சிமிக்க தன்மை முஸ்லிம்களுடைய சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் வற்புறுத்துவதாகும்; அதன் காரணமாக புரோகித வர்க்கம் ஒன்று இல்லாமல் போனதாகும். ஏகத்துவக் கோட்பாடு விக்ரக ஆராதனையையும் சில்லரைக் கடவுளர்களின் வணக்கத்தையும் முழுமையாகத் தூக்கி எறிந்துவிட்டது. ஒரு முஸ்லிமுடைய சமய உணர்வானது என்றும் அருகிலும் எல்லாவற்றையும் தன்னிடத்தே அடக்கிக்கொண்டும் இருக்கும் வல்லமை பொருந்திய இறைவனையும் அவனுடைய கட்டளைக்கு மாறு செய்வதனால் உண்டாகும் பயங்கர விளைவுகளையும் அவனுக்குப் பூரணமாக தலை சாய்ப்பதையும் அவனுடைய இரக்கத்தின் மேலும், அருளின் மேலும் முழுமையாகச் சார்ந்திருப்பதையும் அதாவது மொத்தத்தில் அமைதியையும் இறைவனிடத்தே தன்னை முழுமையாக ஒப்புவித்து விடுவதையும் உணர்ந்து கொள்வதாகும்"

டாக்டர் தாராசந்த் அவர்கள் இஸ்லாத்தின் அடிப்படையை இப்படி எடுத்துக்காட்டுவதில் இருகூறுகள் இருப்பதைக் காண்கிறோம். ஒன்று, முஸ்லிம்கள் தம்முடைய அன்றாட வாழ்க்கையில் அது தனி வாழ்க்கையாக இருந்தாலும் சரி, சமுதாய வாழ்க்கையாக இருந்தாலும் சரி, என்ன செய்யவேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது. மற்றொன்று, இந்த ஒழுக்கத்துக்கு அடிப்படையாக ஏகத்துவம் என்ற இறை நம்பிக்கையும், அந்த இறை நம்பிக்கையிலிருந்து பிறந்த இறை உணர்வும், இறை கோட்பாடுகளும் ஆகும்.

முஹம்மது நபி அவர்கள் அரேபியாவில் தோன்றியது ஆறாவது நூற்றாண்டின் இறுதியில். கி.பி. 636-வது ஆண்டிலேயே இந்திய கடல் எல்லையில் முஸ்லிம் கப்பல்கள் வந்துசேர ஆரம்பித்துவிட்டன. அதாவது முஹம்மது நபி அவர்களுடைய காலத்துக்குப்பின் இரண்டாவது கலீபாவாகிய உமர் அவர்களுடைய காலத்திலேயே இது தொடங்கிவிட்டது. அவர்கள் காலத்திலேயே இந்தியாவுக்கு வரக்கூடிய தரைமார்க்கத்தைக் கண்டுபிடிப்பது பற்றிய ஆராய்ச்சி தொடங்கி கி.பி. எட்டாவது நூற்றாண்டின் துவக்கத்தில் முஹம்மது பின் காஸிமால் சிந்து கைப்பற்றப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்கிடையே முஸ்லிம்கள் கடல் மார்க்கமாக இந்தியாவுடன் வணிகத் தொடர்புகொண்டு இந்திய நாட்டில் தென்னிந்திய கடற்கரையிலும் இலங்கையிலும் குடியேற ஆரம்பித்து விட்டார்கள். "துஹ்பத்துல் முஜாஹிதீன்" என்ற நூலின் முகவுரையில் ரௌலன்ட்சன் (ROWLANDSON) அரபு நாட்டு முஸ்லிம்கள் மலபார் கடற்கரை பிரதேசங்களில் ஏழாவது நூற்றாண்டின் இறுதியில் வந்து முதன் முதலாக குடியேறினார்கள் என்று கூறுகிறார்.

Madras District Manuals வரிசையில் தெற்கு கனரா ஜில்லாவைப் பற்றிய நூலில் ஸ்டர்ரக் (Sturrock) என்பவர் அடியிற் கண்டவாறு கூறுகிறார். "ஏழாவது நூற்றாண்டிலிருந்து பாரசீக, அரபு வணிகர்கள் பெருத்த அளவில் இந்தியாவின் மேற்குக் கரையில் பல துறைமுகங்களில் வந்து குடியேறி அவ்வவ்விடத்திய பெண்களை மணந்துகொண்டார்கள் என்பதும் இந்த குடியேற்றங்கள் மலபாரில் குறிப்பாக பெரிய அளவினவையாகவும் முக்கியமானவையாகவும் இருந்தன என்பதும் பிரசித்தமானது. வணிகர்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுப்பது இந்த மலபாரின் துறைமுகங்களுடைய தொன்மையான பழக்கமாக இருந்திருக்கிறது."

தென்னிந்தியாவில் இப்படி வந்து இறங்கிய

முஸ்லிம்களில், மேற்குக் கரையாகிய கொங் கணத்தில் வந்து குடியேறியவர்கள் "நவாயத்"கள் என்றும் கன்னியாகுமரிக்கு கீழ்ப்புறமாக உள்ள கடற்கரையில் வந்து குடியேறியவர்கள் "லெப்பைகள்" என்றும் அழைக்கப்பட்டார்கள்.

இப்படி தென்னிந்தியாவில் வந்து குடியேறிய முஸ்லிம்கள் தங்களுடைய மார்க்கப்படி வாழ்ந்ததோடு அல்லாமல் தங்கள் மார்க்கத்தை பிறருக்குப் போதிக்கவும் செய்தார்கள். இந்த போதனை அவர்கள் தங்கியிருந்த இடங்களுக்கு அருகில் உள்ள மக்களை பெருமளவில் கவர்ந்தது. சேரமான் பெருமாள் என்னும் அரசன் முஸ்லிம் ஆனது இதை வற்புறுத்துவதோடு தென்னாட்டில் இஸ்லாம் பரவுவதற்கு மேலும் காரணமாகவும், உதவியாகவும் அமைந்தது. முஸ்லிம்களுடைய ஏக தெய்வக்கொள்கை, சமத்துவம், சகோதரத்துவம், இறைவன் முன்னிலையில் எல்லோரும் சமம், இறைவனுக் கும் மனிதனுக்குமிடையே ஒரு பூசாரியோ, புரோகிதனோ தேவையில்லை, தன்னுடைய தேவைகளைப் பூர்த்திசெய்து வைக்குமாறு இறைவனிடம் மனிதன் நேரிடையாகவே பிரார்த்தித்துக் கொள்ளலாம் என்பன போன்ற இஸ்லாமிய சமுதாய வாழ்க்கை அமைப்பும், தத்துவக் கருத்துக்களும் தென்னாட்டு மக்களை பெரிதும் கவர்ந்தன.


இத்தகைய இஸ்லாமியக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலை தென்னாட் டில் எப்படி ஏற்பட்டது என்பதை கவனிக்க வேண்டும். வட நாட்டில் பிரபலமாகப் பரவி இருந்தது வைதிக மதமே. அந்த மதத்துக்கு வர்ணபேதம் அடிப்படையாக இருந்தது. இவ்வுலகில் செல்வத்தையும், செல்வாக்கையும் பெறுவதற்கு வேள்விகளும், யாகங்களும் செய்யவேண்டுமென்பதுவும் அத்தகைய வேள்விகளுக்கும், யாகங்களுக்கும் உயிர்ப்பலி இன்றியமையாதது என்பதுவும் அவற்றை நிறை வேற்றுவதற்காக வேதங்களைப் படிப்பதற்கு உரிமையும் தகுதியும் பெற்றவர்கள் பிராமணர் களே என்பதுவும் அந்த மதத்தின் அடிப்படை. இந்த அடிப்படையின் காரணமாகத் தோன்றிய வர்ண பேதமும் பிறப்பின் காரணமாகத் தோன்றிய உயர்வும் தாழ்வும், பெரும்பாலான மக்களுக்கு வேதங்களைப் படிக்கும், கேட்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்ததும் பரவலான அதிருப்தியை உண்டாக்கி இருந்தன. இக்குறை களைக் களைவதற்காகத் தோன்றிய சமண மதமோ உடலை வருத்திச் செய்யும் கடுமையான தவத்தை வற்புறுத்தியது. இவ்விரண்டினுடைய குறைகளையும் நீக்குவதற் காகத் தோன்றிய பௌத்தமோ மக்களுடைய உள்ளத்தையும் உணர்ச்சியையும் ஆகர்ஷிக்கக் கூடிய கடவுள் கொள்கை ஒன்றை வற்புறுத்தா ததன் காரணமாக வைதிக மதத்தின் செல்வாக் கையும் சமண மதத்தின் பிடிப்பையும் முழுமை யாக நீக்கமுடியாமல் எங்கும் அதிருப்தி நிலவு வதற்கே உதவிற்று. இந்த நிலையில் வடநாட்டில் புதிய சமயக்கோட்பாடுகள் தோற்றுவதற்குச் சாதகமான சூழ்நிலையோ, உற்சாகமோ இல்லை.

இந்தக் கட்டத்தில்தான் தென்னிந்தியாவில் இஸ்லாம் இடம் பெறத்தொடங்கியது. இஸ்லா மியக் கொள்கைகள் தென்னிநதிய மக்களை பெருத்த அளவுக்குக் கவர்ந்தன. இந்த நிலை ஏற்பட்டவுடன் இஸ்லாமியக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு பெரும்பாலான மக்கள் முஸ்லிம் களாகாமல் தடுப்பதற்கு என்ன செய்வது என்ற சிந்தனை இந்நாட்டின் பல சமயத் தலைவர் களிடையே உண்டாயிற்று.

தொடக்கத்தில் எடுத்துக்காட்டியதுபோல, இந்திய நாட்டின் தோற்றத்திலிருந்து இந்நாட்டின் சமய சரித்திரத்துக்கு ஒரு தனித் தன்மை இருந்துகொண்டே இருந்திருக்கிறது. இந்நாட்டின் சமயக் கருத்துக்களிலும், சமயச் சடங்குகளிலும் இருக்கும் குறைகளை நீக்குவதற் கான முறையில் போட்டியாக இன்னொரு சமயமோ கலாச்சாரமோ தோன்றினால் அதில் உள்ள நல்லதைத் தன்னுடையதாக ஆக்கிக் கொள்வதே இந்தத் தனித் தன்மை. இந்தத் தனித் தன்மையின் காரணமாக இந்த நாட்டின் பழம்பெரும் சமயப் பிரிவுகளோ, கலாச்சாரமோ முழுமையாக அழிந்துபடாமல் தங்களை மாற்றிக் கொண்டு வாழ்ந்து கொண்டே வந்திருக்கின்றன.

இந்தத் தனித் தன்மை இப்போதும் செயல்படத் தொடங்கிற்று. அதாவது, இந்நாட்டின் பழம்பெரும் சமயத்தைச் சேர்ந்த வர்கள் அந்தச் சமயத்தின் வர்க்கத்திலிருந்து முழுமையாக ஒதுங்கிவிடாமல் இஸ்லாத்தின் கவர்ச்சிகரமான அடிப்படைக் கொள்கைகளை ஆதாரமாகக்கொண்ட புதிய சமயப் பிரிவு


vaigarai velicham official




களையும், கொள்கைகளையும் பிறப்பிக்கத் தொடங்கினார்கள்.

இப்படி தோன்றியவற்றில் பிரதானமாகச் சொல்லக்கூடியவை ஆதி சங்கரருடைய அத்வைதம், பசவேசருடைய வீரசைவம், சித்தர்களுடைய கோட்பாடு ஆகியவை. முன்னர் கூறப்பட்ட நூலில் டாக்டர் தாராசந்த் அவர்கள் கூறுகிறார்:

> Fawcett,[1] however, in his Notes on Some of the People of Malabar suggested that Islam was probably the needed factor. He wrote, "something may be said of the legendary story surrounding the great Sankaracharya, the apostle of the Nambutris. He was born at Kaladi near the Eluvayi river when the country was in peril. Her king had been converted to Islam, and that religion was gaining ground. Brahmanism must be revived, so Siva was re-incarnated in the child of a widow." The circumstance of his practicalexcommunication with all his family by the Brahmans, and his seeking a Nayar's aid in performing the rites of the dead on the demise of his mother, point to the same conclusion. And Barth[2] in the Religions of India argued in a similar strain. He says, "The Arabs of the Khalafat had arrived on these shores in the character of travellers and had established commercial relations and intercourse with these parts long before the Afghans, Turks, or Mongols, their co-religionists, came as conquerors. Now, it is precisely in these parts that from the ninth to the twelfth century, those great religious movements took their rise which are connected with the names of Sankara, Ramanuja, Anandatirtha and Basava, out of which the majority of the historical sects came and to which Hindustan presents nothing analogous till a much later period."
>
> It is necessary to repeat that most of the elements in the southern schools of devotion and philosophy taken singly, were derived from ancient systems; but the elements in their totality and in their peculiar emphasis betray a singular approximation to Muslim faith and therefore make the argument for Islamic influence probable. It is true that among the schools discussed so far the evidence is all circumstantial and the argument for borrowing cannot be substantiated by direct proof, philological or otherwise; but it must be remembered that the Hindus were a proud race as Alberuni remarked. They were great artists in the assimilation of foreign ideas and they did not allow their prestige to be lowered by crude imitations which could be easily detected. The history of the whole of Indian culture in the ancient period is a testimony to the correctness of these statements.

Influence of In'am on Indian Culture by
Dr. TARA CHAND-pp. 107-108.

1. Fawcett : Anthropology, Bulletin, Vol. III, No. 1, Edited by Thurson.
2. Barth: Religions of India.

'Fawcett' 'மலபாரைச் சேர்ந்த மக்கள் சிலர்' என்பது பற்றிய தம்முடைய குறிப்புகளில், 'அனேகமாக இஸ்லாம்தான் மிகவும் தேவைப் பட்டதாக இருந்தது. நம்பூதிரிகளுடைய சமயத் தலைவராகிய ஆதி கர்ண பரம்பரையான கதையை சங்கராச்சாரியாரைப் பற்றிய உண்மை என்று நம்புவதற்கு இடமிருக்கிறது. அவர் காலடியில் ஏழுவாய் நதிக்கு அருகில் பிறந்தார். நாடு அபாயத்தில் இருந்த நேரம். அந்த நாட்டின் அரசனோ முஸ்லிமாகிவிட்டான். இஸ்லாமோ

பரவிக்கொண்டிருந்தது. பிராமணீயம் மறுவாழ்வு பெறவேண்டும். ஆகவே சிவன் ஒரு 'விதவையின் குழந்தையாகப் பிறப்பெடுத்தார்!' என்று எழுதினார். அவர் குடும்பத்தோடு பிராமணர்களால் ஜாதிப் பிரஷ்டம் செய்யப் பட்டதும், மரண மடைந்துவிட்ட தம்முடைய அன்னைக்கு ஈமக்கடன்கள் செய்வதற்கு ஒரு நாயருடைய உதவியை அவர் நாடவேண்டி இருந்ததும் இந்த முடிவையே வலிவுறுத்து வனவாகும். இந்தியாவின் சமயங்கள்' என்ற தம்முடைய நூலில் Barth என்பாரும் இவ்வாறா கவே வாதிக்கிறார். அவர் சொல்கிறார், 'ஆப்கானியர்கள், துருக்கியர்கள், மங்கோலி யர்கள் அவர்களுடைய மதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இந்த நாட்டைக் கைப்பற்றுபவர்களாக வருவதற்கு வெகுகாலத்துக்கு முன்னாலேயே, கலீபாக்களுடைய காலத்து அரபியர்கள் இந்தக் கடற்கரைப் பிரதேசங்களில் வணிகர்களாக வந்து இந்த நாட்டு மக்களோடு வியாபாரத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு விட்டார்கள். 9வது நூற்றாண்டிலிருந்து 12-வது நூற்றாண்டு வரையில் இந்த பிரதேசத்தில்தான், சங்கரர், ராமானுஜர், ஆனந்ததீர்த்தர் (மத்வர்), பசவர் ஆகியவர்களுடைய பெயர்களோடு இணைக்கப் பட்டிருக்கின்ற சமய இயக்கங்கள் தோன்றின; அவற்றிலிருந்து தான் சரித்திரபூர்வமாக இந்தியாவில் காணப்படும் சமயப்பிரிவுகள் பிறந்தன ; வெகுகாலத்துக்குப் பின்னால் வரையில் இதற்கு சமமாக ஹிந்து ஸ்தானத்தில் வேறு எதும் காணப்படவில்லை.'

இங்கே ஒன்றை வற்புறுத்திக் கூறுவது அவசியமாகிறது. அதாவது தென்னிந்தியாவில் தோன்றிய தத்துவ, பக்தி இயக்கங்கள் ஆகிய வற்றில் காணப்படும் தன்மை ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பிரித்துப்பார்த்தால் ஆதிகாலத்திய சமய கோட்பாடுகளிலிருந்து பிறந்தவைதாம் அவை என்று சொல்லமுடியும். ஆனால் அந்த தன்மைகள் அனைத்தையும் மொத்தமாகப் பார்க்கும் போதும், அவைகளு டைய குறிப்பிட்ட அழுத்தத்தை நோக்கும் போதும் யாரும் காணத்தவறாத அளவுக்கு அவை இஸ்லாமியக்கோட்பாடுகளை ஒத்திருக் கின்றன. ஆகையினால் இஸ்லாத்தின் செல்வாக்கினாலேயே அவை அப்படி தோன்றின என்ற வாதத்தை ஒத்துக்கொள்ளக்கூடியதாக ஆக்குகின்றன. முன்னர் விவரிக்கப்பட்ட சமய இயக்கங்கள் அனைவற்றிலும் இந்த முடிவுக் கான சாட்சியம் நேரடியாக கடன் வாங்கியதாக சொல்ல முடியாமலும், சூழ்நிலையையும், சந்தர்ப்பத்தையும் கொண்டு முடிவு செய்யக் கூடியதாகவுமே இருக்கிறது; என்றாலும் அல்பீரூனி எழுதியதுபோல, ஹிந்துக்கள் மட்டுமீறிய தன்மதிப்புடைய வர்க்கமாவார்கள். அவர்கள் பிற கருத்துக்களை தங்களுடையதாக ஆக்கிக்கொள்வதில் தலை சிறந்த கலைஞர்களாக இருந்தார்கள். வெகு சுலபமாகக் கண்டுபிடித்து விடக்கூடிய, கலைநயமற்ற, 'காப்பி 'யடித்தலின் மூலம் தங்களுடைய கௌரவம் குறைந்து போவதற்கு அவர்கள் இடம் கொடுக்கவில்லை. இந்தியாவினுடைய கலாச்சாரத்தின் பழங்கால சரித்திரம் முழுவதும் இக்கூற்றுக்களின் உண்மைக்கு சான்று பகர்வதாகவே இருக்கிறது."

இங்கு பசவருடைய போதனைகளும் வீர சைவர்களுடைய கோட்பாடுகளும் இஸ்லாமிய வற்றோடு மிக நெருங்கி இருப்பது ஆச்சரி யத்தையே விளைவிப்பதாகும். பசவருடைய போதனைகள் ஆதியில் அன்று நிலவியிருந்த ஹிந்து கோட்பாடுகள், சடங்குகள், சமூக வழக்காறுகள் ஆகிய அனைவற்றையும் ஒருங்கே மறுப்பதாக அமைந்திருந்தது. வீர சைவர்கள் பரசிவம் என்ற பெயரில் ஒரே கடவுளை வணங்குபவர்களாக ஆனார்கள். அந்த ஒரே கடவுள் உருவமற்றவன், தனித்தவன், யாரையும் சார்ந்தவனல்லன், ஆனந்த வடிவானவன், எந்த மாற்றமும் இல்லாதவன், யாவற்றுக்கும் மேலானவன். அவன் தனிமனிதனுடைய ஆன்மாவுக்கு வழிகாட்டுவதற்காக அல்லமா பிரபு என்ற பெயருடன் உலக ஆசானாச வெளிப்படுகிறான். அவர்களுடைய கொள்கை யின்படி ஆன்மாவுடைய பிரயாணத்தில் மூன்று கட்டங்கள் இருக்கின்றன. முதற் கட்டத்தில் இறைவனிடத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை யும் விரதங்கள் அனுஷ்டிப்பதும் சில பக்தி செயல்களில் ஈடுபடுவதுமாகும். இரண்டாவது கட்டத்தில் இறைவனைப் பரிபூரணமாகச் சார்ந்து, அகந்தையை ஒழித்து அவனிடம் தன்னையே ஒப்புவித்து விடுவது. மூன்றாவது கட்டத்தில் இறைமையோடு கலந்து ஆனந்த மயமாய் ஆய்விடுவது.

The practices of the Jangamas are


vaigarai velicham official

summed up in the ashtavaranam (the eight environments), they are-(1) guru (preceptor), (2) lingam (phallus), (3) jangama (follower), (4) vibhuti (ashes), (5) rudraksa (rosary), (6) padodaka are washed), (water in which the preceptor's feet (7) prasada (sacramental food), (8) panchaksara (five- syllabled formula).[1]

(1) Bhandarkar : Vaisnavism and Saivism p. 136. Influence of Islam on Indian Culture

by Dr. TARA CHAND-p. 118.

அஷ்டவர்ணம் என்ற பெயரிலே அவர்களுடைய சமய நடைமுறைகள் எட்டு அம்சங்களைக் கொண்டவை. முதலாவது குரு, இரண்டாவது லிங்கம், மூன்றாவது ஜங்கமன் அதாவது சிஷ்யன், நாலாவது விபூதி, ஐந்தாவது ருத்ராட்சம், ஆறாவது பதோதகம் அதாவது குருவினுடைய பாதங்களை கழுவிய நீர், ஏழாவது பிரசாதம், எட்டாவது பஞ்சாட்சரம்.

இவை எல்லாவற்றையும்விட வீரசைவர்களுடைய நடைமுறைதான் இங்கு முக்கியமாக கவனிக்கத்தக்கவை ; பெண்ணின் சம்மதமின்றி திருமணம் இல்லை. விவாகரத்து அனுமதிக்கப்பட்டது. விதவைகள் எந்த விதமான அபசகுனத்தினுடையவும் அறிகுறியாய் இல்லாமல் மரியாதையுடன் நடத்தப்பட்டார்கள். அவர்களுக்கு மறுமணம் செய்துகொள்ள உரிமையுண்டு. பிரேதங்கள் எரிக்கப்படாமல் அடக்கம் செய்யப்பட்டன. சிரார்த்தம் போன்ற சடங்குகள் இல்லை. மறுபிறப்பில் நம்பிக்கையின்மை.

Marriage is voluntary, the consent of the bride before marriage is nesessary and child marriage is considered wrong. Divorce is allowed. Widows are treated with respect, and they are permitted to marry again. The dead are not cremated but buried, the dying man is given a bath, no sraddha or death ritual is prescribed. The theory of Transmigration of souls or metempsychosis is not believed in.

- Influence of Islam on Indian Culture

by Dr. TARA CHAND-pp. 118-119.

இவற்றின் காரணமாகத்தான், "லிங்காயதம் " இந்தப் பிராந்தியங்களில் வாழ்ந்த முஸ்லிம்களின் செல்வாக்கினால் தோன்றியது. என்ற முடிவு மறுக்க முடியாததாக ஆகிறது. அதனுடைய புரட்சிகரமான கோட்பாடுகளையும் பழக்கங்களையும் வேறு எந்த அடிப்படையிலும் விளக்க முடியாமலிருக்கிறது. ஹிந்துக்களிடம் ஊறிப்போன புனர்ஜன்ம நம்பிக்கை, பிணத்தை எரித்தல், சாவின்போது தீட்டை ஒழிக்கச் செய்யும் சடங்குகள், ஜாதி, ஆண்-பெண் என்ற அடிப்படையில் உண்டான ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை ஒழித்தல், விவாக சீர்திருத்தம், புனிதமான குருவின் தலைமையில் பணியாற்றும் வீர சிஷ்யர்களுடைய கூட்டம், அல்லமா என்ற பெயரில் கடவுளைக் குறிப்பிடுதல், ஆகிய அனைத்தும் எந்த மறுப்புக்கும் இடமின்றி இஸ்லாத்திலிருந்தே பிறந்தன என்பதை உணர்த்தும்'' என்று டாக்டர் தாராசந்த் கூறுகிறார்.

It is difficult to resist the inference that Lingayatism was a result of the influence which these Muslims exerted in these parts of India. No other hypothesis appears sufficient to explain the revolutionary character of its doctrines and customs. The abandonment of such a deeprooted Hindu idea as that of metempsychosis and of such customs as cremation, and purifactory death ceremonial, the abolition of inequalities of caste and sex and the reform of marriage, the conceptions of the community of brave warriors led by their sanctified preceptor, and of God (Allama) whose very name is probably of Muslim origin,[1] point unmistakably to the source of inspiration, that is Islam.

1. Brown: Telugu and English Dictionary Kittel: Kannada and English Dictionary -Influence of Islam on Indian Culture

by Dr. TARA CHAND-pp. 119-120.

இங்கு நோக்கத்தக்க இன்னொரு கருத்தும் இருக்கிறது. பிறப்பின் அடிப்படையில் வர்ணபேதம், ஜாதிபேதம் கற்பிப்பதும் அதன் காரணமாக ஏற்றத்தாழ்வு கற்பிப்பதையும் போல தனி மனிதனுடைய தன்மான உணர்ச்சியை புண்படுத்துவது வேறு எதுவும் இருக்கமுடியாது. எங்கு பிறந்தவனாயினும், எந்நிறத்தவனாயினும், எவ்வினத்தவனாயினும், எத்தரத்தவனாயினும், ஆணாயினும், பெண்ணாயினும் அவர்கள் இஸ்லாத்தைத்தழுவிய உடன் பரிபூரண சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் பெற்று

விடுகிறார்கள் என்பது இஸ்லாத்தினுடைய சக்தி வாய்ந்த தாரக மந்திரமாக இருந்தது. இது முஸ்லிம்களிடை கொள்கையளவிலே நின்றுவிடாமல் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் தொழுகை போன்ற வழிபாட்டு முறைகளிலும் திருமணம் போன்ற சமுதாய நிகழ்ச்சிகளிலும் முழுமையாக இடம் பெற்றிருந்தது ஆகவேதான் தனிமனிதனுடைய தன்மான உணர்ச்சிக்கு இதுஒரு பெரிய ஆகர்ஷண சக்தியாக இருந்தது. இந்நாட்டில் வாழ்ந்திருந்த பெரும்பான்மையான மக்களை இஸ்லாம் கவர்ந்ததற்கு இதுவே பிரதான காரணமாக ஆயிற்று.

இந்த சமத்துவ அடிப்படையே ஸ்ரீ ராமானுஜர் போன்றவர்களுடைய போதனைகளையும் ஓரளவு உருவாக்கியது. ஸ்ரீ ராமானுஜருடைய காலத்தில் முஸ்லிம்கள் சோழமண்டலக் கடற்கரை துறைமுகங்களில் வாழ்ந்து வந்தார்கள். திருச்சியில் அடக்கமாகியிருக்கும் நத்ஹர் ஒலி போன்ற முஸ்லிம் மகான்கள் மக்களிடத்தே இஸ்லாத்தைப் போதித்து அவர்களைப் பெருத்த அளவில் இஸ்லாத்தின்பால் அழைத்துக்கொண்டிருந்தார்கள். கூன் பாண்டியன் போன்ற ஹிந்து மன்னர்கள் மசூதிகள் கட்டுவதற்கு நிலம் வழங்கிக்கொண்டிருந்தார்கள். இந்தப் பின்னணியில் தான் ஸ்ரீ ராமானுஜருடைய போதனைகளைக் கூர்ந்து நோக்கவேண்டும். ஸ்ரீ ராமானுஜருடைய கோட்பாடுகள், சிறந்த நன்மையான குணங்கள் நிறைந்த ஒரு கடவுளை குறித்ததுடன் நம்பிக்கையுடனும், ஈடுபாட்டுடனும் அக்கடவுளை வழிபடுவதை வற்புறுத்தின. அதுவரையிலும் வேத மந்திரங்களை யார் கற்றுக்கொள்ளக் கூடாது, யார் கேட்கக்கூடாது, கோவில்களுக்குள் யார் நுழையக்கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்களோ அவர்களை வேதத்திடமும், தெய்வத்திடமும் அழைக்கிற ஒரு தன்மையும் அந்த போதனைகளில் இடம் பெற்றிருந்தது. இவையெல்லாம் இஸ்லாத்தினுடைய செல்வாக்கை வலியுறுத்தும். இதுபோலவே விஷ்ணு சுவாமி, மத்வாசாரியர், நிம்பார்க்கர் (பாஸ்கராச்சாரியர்) ஆகியவர்களுடைய போதனைகளும் இருந்தன.

"Ramanuja's philosophy recognised a god with good attributes and inculcates His worship with faith and devotion. He exhibits a desire to open the doors of religion to the classes which had so far been shut out of it. Love finds a place not only in the relations of man and God but also of man and man, although in the latter case the advance is timid, Visṇuswami, Nimbaraka and Madhava's metaphysical discussions regarding the nature of God and man almost recall the debates of Nazzam, Ash'ari and Ghizali."


Influence of Islam on Indian Culture by Dr. TARA CHAND-p. 112.

இத்தகைய மாற்றங்கள் தென்னிந்தியாவில் சமயாச்சாரியர்களால் செய்யப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் இஸ்லாமியத் தத்துவம் எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தது. அது எந்த அளவு இந்திய சமயக்கருத்துக்களையும் தத்துவங்களையும் பாதித்தது என்பதை சற்று விரிவாகக் காண வேண்டும்.

இஸ்லாத்தினுடைய ஏக தெய்வக்கொள்கை இஸ்லாத்தினால் முதன் முதலாக போதிக்கப் பட்டது அல்ல. இஸ்லாத்துக்கு முன்னாலேயே இந்தக்கொள்கை இருந்திருக்கிறது. காலப் போக்கில் இந்தக் கொள்கை தன்னுடைய அழுத்தத்தையும், உறுதியையும் இழந்து, மக்கள் வாழ்க்கையில் பலதெய்வ வழிபாடு இடம் பெற்றுவிட்டபோது ஏக தெய்வக்கொள்கையை மீண்டும் வலியுறுத்துவதற்காக இஸ்லாம் தோன்றியது. ஏக தெய்வக்கொள்கை சம்பந்தப் பட்ட வரையில் இஸ்லாம் எந்த விதமான மாற்றத்துக்கும் விட்டுக் கொடுத்தலுக்கும் தயாராக இல்லை. ஏக தெய்வக்கொள்கையில் நம்பிக்கையோ பிடிப்போ இல்லாதவர்க்கு இஸ்லாத்தில் இடமில்லை. எனவேதான் படித்தவர் பாமரர் என்ற எந்த வேறுபாடுமின்றி எல்லா முஸ்லிம்களுக்கும் ஏக தெய்வக் கொள்கையும் வழிபாடும் இஸ்லாத்தின் அடிப்படை அவசியமாக ஆயிற்று.

இஸ்லாத்தின் அழுத்தமான இந்த அடிப் படைக் கொள்கையோடு இந்திய நாட்டு சமயக்கொள்கையை ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமாகிறது. இந்திய நாட்டு சமயக்கொள் கையும் ஏக தெய்வ வழிபாட்டையே வற்புறுத்து வதாக அமைந்தது உபநிஷத்துக்கள் இதை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் வலியுறுத்


vaigarai velicham official




தின என்றாலும் நாளடைவில் இந்த உறுதி தளர்ந்து ஞானிகளுக்கு உருவமற்ற, எங்கும் நிறைந்திருக்கிற பரம்பொருள் வழிபாடு பொருந்துமென்றும் சாதாரண மக்களுக்கு அவரவர்கள் இஷ்டத்துக்கு ஏற்ப மூர்த்தி உபாசனை பொருந்துமென்றும் ஒரு கொள்கை இடம் பெற்றுவிட்டது. டாக்டர் S. ராதா கிருஷ்ணன் அவர்கள் தங்களுடைய Indian Philosophy என்ற நூலிலே அடியிற் கண்டவாறு கூறுகிறார்கள்:

> Amid all the confused ferment of Vedic devotions a certain principle of unity and comprehension was asserting itself. In some hymns the conception of a single central power was actually formulated. The Upanisads carry out this tendency. They recognise only one spirit-almighty, infinite, eternal, incomprehensible, self-existent, the creator, preserver and destroyer of the world. He is the light, lord and life of the universe, one without a second, and the sole object of worship and adoration. The half-gods of the Veda die and the true God arrives. How many gods are there really. O Yajna- valkya?" "One," he said. "Now answer us a further question: Agni, Vayu. Aditya. Kala (time), which is breath (Prana), Anna (food), Brahma. Rudra. Visnu. Thus do some meditate on him. some on another. Say which of these is the best for us ?" And he said to them: "These are but the chief manifestations of the highest, the immortal, the incorporeal Brahman... Brahman, indeed, is all this, and a man may meditate on, worship or discard also those which are its manifestations." The visible infinite (objective) and the invisible infinite (subjective) are taken up into the spiritual whole.

> The polytheistic conceptions were too deeply rooted in the Indian consciousness to be easily overthrown. The many gods were subordinated to the One. Without Brahman, Agni cannot burn a blade of grass, Vayu cannot blow a whisp of straw. For fear of him, fire burns, for fear of him the sun shines, and for fear of him the winds, the clouds and death perform their office." Sometimes the many gods are made parts of one whole. The five house-holders led by Uddalaka approach king Asvapathi, who asked each of them, Whom do you meditate on as the Self? The first answered heaven; the second, the sun; the third, air; the fourth, ether; the fifth, water; and the king replies that each of them worshipped only a part of the truth. Heaven is the head, the sun the eye, the air the breath, the ether the trunk, the water the bladder, and the earth the feet of the central reality, which is pictured as the world-soul. Compromise between the philosophic faith of the few and the fancied superstition of the crowds is the only possible reconciliation:

(1) Beb. Up, i 9. 1.

(2) Maitrayani Upanisad, iv. 5-6; see also Mundaka, i.I.I; Taittiriya i. 5; Brh., i.4.6; see also i.4.7; i.410.

(3) Tait. Up-

we cannot abolish the old forms, for that would be to ignore the fundamental nature of humanity, as well as the patent differences, in the moral and intellectual states of believers who were not capable of acquiring at once the highest wisdom. Another factor also determined the attitude

of the Upanisads. Their aim was not science or philosophy, but right living. They wished to liberate the spirit from the trammels of the flesh, that it might enjoy communion with God. Intellectual discipline was subsidiary to holiness of life. Besides, there was the feeling of reverence for the past. The Vedic seers were the ancients of blessed memory, whose doctrines it was impious to attack. In this way the Upanisads sought to square a growing idealistic philosophy with the dogmas of a settled theology.

Indian Philosophy by
Dr. S. RADHAKRISHNAN Vol. I, pp. 144-45.
(Muirhead Library of Philosophy.)

"வேத வழிபாட்டு முறையினால் தோன்றிய குழப்ப சூழ்நிலையிலும் ஏகம், உணர்வு என்ற தொரு உறுதியான கொள்கையும் தலை தூக்கவே செய்தது. சில பாடல்களில் ஒரு ஏக மத்திய சக்தி பற்றிய கொள்கை வெளிப்படையாகவே இடம் பெற்றிருந்தது. உபநிஷத்துக்கள் இதனை தெளிவாக்கின. அந்த உபநிஷத்துகள் ஒரே சக்தியைத்தான் ஏற்றுக்கொள்கின்றன. அதாவது சர்வ வல்லமையுள்ளது, அளவுக்குள் அடங்காதது, என்றும் உள்ளது, அறிவினால் கணிக்கமுடியாதது, சுயம்புவானது, உலகத்தை சிருஷ்டித்து காத்து அழிப்பது. அவன் ஜோதி, பிரபஞ்சத்தின் தலைவன், அதன் ஆவி, இணையற்றவன், வணக்கத்துக்கும், வந்தனைக்கும் உரிய ஒரே பொருள். வேதத்தினுடைய அரைகுறை தெய்வங்கள் மடிந்துபோக உண்மையான தெய்வம் இடம் பெறுகிறது. 'ஓ யக்ஞவல்கிய, உண்மையில் எத்தனை கடவுளர் இருக்கின்றனர்?' 'ஒன்று' என்று அவர் சொன்னார். 'மறுபடியும் எங்களுடைய இன்னொரு கேள்விக்கு பதில் அளியுங்கள் : அக்னி, வாயு, ஆதித்யன், காலம், மூச்சு ஆகிய பிராணன், அன்னம், பிரம்மன், ருத்ரன், விஷ்ணு, இப்படியாக இவர்களில் யாராவது ஒன்றைப்பற்றி சிலர் தியானிக் கிறார்கள்; இவற்றில் எங்களுக்குச் சிறந்தது எது என்பதைச் சொல்லுங்கள்?' அவர் அவர் களுக்குச் சொன்னார்: இவையெல்லாம் அமரத்துவமும் மிக்க உயர்வும் பொருந்திய உருவமற்ற பிரம்மத்தின் வெளித் தோற்றங்கள்.... உண்மையில் இது எல்லாம் பிரம்மமே, மனிதன் அந்த பிரம்மத்தின் வெளித்தோற்றங்களாக இருப்பவற்றை தியானிக்கலாம். வணங்கலாம், ஒதுக்கலாம்.' கண்ணுக்குத் தெரிகிற வரம்பிலி (சிந்தனையில் தோன்றுவது) கண்ணுக்குத் தெரியாத வரம்பிலி (உணர்வில் தோன்றுவது) ஆகிய இரண்டுமே ஆன்ம வியலான முழுமையில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இந்திய உணர்விலே பலதெய்வக் கொள்கை யானது இலகுவிலே பிடுங்கி எறிந்துவிட முடியாதவாறு வேர் ஊன்றி இருந்தது. பல கடவுள்கள் ஒரு கடவுளுக்குக் கீழானவராகக் கொள்ளப் பட்டார்கள். பிரம்மன் இல்லாமல் அக்னியினால் ஒரு சிறு புல்லையும் எரிக்க முடியாது ; வாயுவினால் ஒரு வைக்கோலையும் அசைக்க முடியாது. அவனுடைய பயத்தினா லேயே நெருப்பு எரிகிறது, அவனுடைய பயத்தினாலேயே சூரியன் பிரகாசிக்கிறது, அவனுடைய பயத்தினாலேயே காற்று, மேகம், மரணம் தம்முடைய பணியை நிறைவேற்று கின்றன.' சில சமயங்களில் இந்தப் பல தெய்வங்கள் ஒரே தெய்வத்தின் பகுதிகளாக ஆக்கப்படுகின்றன. உத்தாலகருடைய தலைமை யில் ஐந்து இல்லறவாசிகள் அஸ்வபதி என்ற அரசனை அணுகுகிறார்கள். அவன் அவர்களை "தான்" என்று எதை தியானிக்கிறீர்கள் என்று கேட்கிறான். முதலவன் ஆகாயம் என்று சொன்னான்; இரண்டாமவன் சூரியன் என்று சொன்னான் மூன்றாமவன் வாயு என்று சொன்னான்; நான்காமவன் தூய வானவெளி (Ether) என்று சொன்னான்; ஐந்தாமவன் நீர் என்று சொன்னான்: அதற்கு மன்னன் அவர்கள் ஒவ்வொருவரும் சத்தியத்தின் ஒரு பகுதியையே வணங்கினார்கள் என்று பதிலிறுத்தான். மத்திய சத்தியத்திற்கு ஆகாயம் தலையாகவும், சூரியன் கண்ணாகவும், காற்று மூச்சாகவும், தூய வானவெளி உடலாகவும், நீர் சிறுநீர்ப்பை யாகவும், பூமி அடியாகவும் இருக்கின்றன. அந்த மத்திய சத்தியம் 'உலக ஆன்மா'வாக இப்படி சித்தரிக்கப்படுகிறது. தத்துவ நம்பிக்கை கொண்ட சிலருக்கும் கற்பனை நிறைந்த மூட நம்பிக்கை கொண்ட கூட்டத்துக்கு மிடையே சமரசத்தை உண்டுபண்ணுவது இருபுற விட்டுக் கொடுப்புடன் ஏற்படும் சமாதான இணக்கமே யாகும்; பழைய உருவங்களை நம்மால் அழித்துவிடமுடியாது. அப்படி செய்வது என்பது மனிதத்தன்மையின் அடிப்படை இயற்கையை மறந்து விடுவது அல்லாமல்,


vaigarai velicham official

எடுத்த எடுப்பிலேயே மிக உயர்ந்த ஞானத்தை அடையும்சக்தியைப்பெற்றிருப்பதில், நம்பிக்கை மாத்திரம் கொண்ட மக்களிடையே, அறிவிலும் தார்மிக நிலையிலும் மிகத் தெளிவாகக் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளையும் ஒதுக்கி விடுவதாகும். உபநிஷத்துகளுடைய இந்தப் போக்கினை இன்னொன்றும் நிர்ணயித்தது. அவைகளுடைய குறிக்கோள் விஞ்ஞானமோ, தத்துவமோ அல்ல; நேர்மையான வாழ்வே. யாக்கை இடும் தளைகளிலிருந்து ஆன்மாவை விடுவித்து இறைவனோடு ஒன்றிய ஆனந்தத்தை அது பெறச் செய்வதே அவைகளின் நோக்கம். அறிவுத்துறையின் கட்டுப்பாடுகள் தூய வாழ்வுக்கு அடுத்த இடத்தையே பெற்றது. அதே சமயத்தில் கடந்த காலத்தை மதிக்கும் ஒரு உணர்வும் இருந்தது. வேதங்களைத் தொகுத்தவர்கள் கௌரவமான மரியாதையோடு எண்ணத்தக்க முன்னோர்கள் ; அவர்களுடைய கோட்பாடுகளை தாக்குவது கடவுள் பற்றில்லாத செயலாகும். இந்த விதமாக, உபநிஷத்துகள், வளர்ந்துகொண்டு போகும் ஒரு உன்னத தத்துவத்தையும் நிலைபெற்று விட்ட சில சமயக்கோட்பாடுகளையும் இணைக்க முயன்றன.'

(Indian Philosophy By Dr. Radhakrishnan Vol. I. Pages 144 & 145.)

இந்திய சமயக்கொள்கையின் இந்த நிலையில் தான் இஸ்லாமிய சமயக் கொள்கை ஊடுருவிற்று. ஏகத்துவத்தில் இஸ்லாம் விட்டுக் கொடுக்கவே இல்லை. ஆனால் ஹிந்துக்களின் கொள்கையோ ஏகத்துவத்தை அறிந்தும் உணர்ந்துமிருந்த போதிலும் அதற்கு விட்டுக்கொடுத்து பலதெய்வ வழிபாட்டிற்கு இடம் கொடுத்தது. இஸ்லாத்தின் ஏகதெய்வக் கொள்கையின் வேகத்தைத் தடுக்க வேண்டுமானால் ஹிந்துக் களிடையே இருந்த இந்த விட்டுக் கொடுக்கும் தன்மையைத் தளர்த்தி ஏகத்துவக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதைத் தான் தமிழ்நாட்டு சித்தர்கள் செய்தார்கள். அவர்கள் அதைச் செய்வதற்கு இரண்டு அம்சங்கள் துணை நின்றன. ஒன்று, முஸ்லிம் சூபிகளுடைய வாழ்க்கை, இவர்கள் வாழ விரும்பிய வாழ்வோடு ஒத்திருந்தது. மற்றொன்று அடிப்படை சைவதத்துவம் இந்த ஏகத்துவக் கொள்கையோடு இணைந்திருந்தது.

இனி முஸ்லிம்களிடையே சூபிகள் எப்படி தோன்றினார்கள் என்பதைக் காணவேண்டும். நம்பிக்கையளவில் இறைவன் ஒருவனே என்று கொண்டு, அவனுடைய கட்டளைகளுக்குத் தலை சாய்த்து அவனிடம் பரிபூரணமாக அடைக்கலம் தேடிக்கொள்வது என்ற அடிப் படையில் முஸ்லிம்களுக்கிடையே எந்த வேறுபாடும் என்றும் இருந்ததேயில்லை. ஆனால் இறைவனுடைய கருணையையும் அருளையும் சௌலப்பியத்தையும், மன்னிக்கும் தன்மையை யும், திருப்பித் திருப்பி எண்ணிப்பார்த்த பலர் இறைவனிடத்து 'இஷ்க்' என்னும் காதலைக் கொண்டுவிட்டார்கள். படைப்பினம் அனைத்தின் லட்சியமும் படைத்த இறைவனை அடைந்து விடுவது என்று இருக்கும் நிலையில், அந்த இறைவனை அடையும் முயற்சியில் உண்டான மனோபாவமே இந்த சூபிகளை சாதாரண முஸ்லிம்களிலிருந்து பிரித்துக் காட்டுவதாக இருக்கிறது. தங்களுடைய தவறு களையும் பிழைகளையும் மன்னித்து தங்களை இறைவன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற பேரவாவின் காரணமாக தங்களுடைய சுக துக்கங்கள் அனைவற்றையும் மறந்துவிட்டு இறைவனுடைய நினைவிலேயே தங்களை மூழ்கடித்துக்கொண்டு விட்டார்கள். சூபி என்ற சொல் கம்பளி என்று பொருள்படும் 'சூஃப்' என்ற சொல்லிருந்து பிறந்தது என்றும் இந்த மனப்பாங்கில் இருந்தவர்கள் கம்பளியினால் ஆன உடைகளைப் போர்வையாகக் கொண்டி ருந்ததால் அவர்களுக்கு இப்பெயர் வந்தது என்றும் சொல்லுவது உண்டு. சூபிகள் முஹம்மது நபி அவர்களுடைய நேரடியான வழித்தோன்றல்கள் என்றும், சூபித்துவத்தைப் பொறுத்த வரையில் அதன் கொள்கைகளின் ஆரம்பத்திற்குக் காரணமாயிருந்தவர் நபிகள் பெருமானார் அவர்களின் தோழர்களுள் கி.பி. 648-ல் மாயமாய் மறைந்த உவைசுல் கரனீ என்றும் சொல்வது உண்டு. ஆரம்பகாலத்தில் இந்த சூபிகள் கூபா, பஸரா என்ற இரண்டு இடங்களிலும்தான் தொடங்கினார்கள். முதன் முதலாக சூபி என்று அழைக்கப்பட்டவர் கி.பி. 778ல் காலமான கூபாவைச் சார்ந்த அபூஹாஷிம் என்பவர்தாம். என்றபோதிலும் அன்னாருக்கு முன்னர் வாழ்ந்த பலரையும் சூபிகளே என்று பின்னர் வந்தவர்கள் சொல்கிறார்கள். கி.பி. 728ல் மறைந்த ஹஸன் அல் பஸரீ, 753ல்

மறைந்த ராபியத்துல் அதவிய்யா, 765ல் மறைந்த இமாம் ஜஃபருஸ் ஸாதிக், 768ல் மறைந்த இமாம் அபூ ஹனீபா, 777ல் மறைந்த இப்ராஹீம் இப்னு அத்ஹம், 781ல் மறைந்த தாவூத் அத் தாயி, 803-ல் மறைந்த புலைல் இப்னு இயால், 810-ல் மறைந்த ஷகீக் அல் பல்கீ ஆகியவர்கள் அனைவரும் சூபிகளாகவே கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த சூபிகளைப் பற்றி இலக்கியங்களில் அவர்களுடைய வாழ்க்கை நெறி, பழக்க வழக்கங்கள் மிக விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. இறைவனைப் பற்றிய எண்ணத்தில் தாம் செய்த தவறுகளுக்காக அவன் அளிக்கக் கூடிய தண்டனை பற்றிய பயம், அவன் இரக்க முள்ளவன், மன்னிக்கக் கூடியவன் என்பதனால் உண்டான நம்பிக்கை, அவனுடைய அருமை யான பண்புகளின் காரணமாக அவனிடத்தில் உண்டான 'இஷ்க்' என்னும் காதல் இவைகள் யாவும் மாறிமாறி அவர்களை ஆட்கொள்ள, அவர்கள் அத்தகைய எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் உட்பட்டு பைத்தியக் காரர்கள் என்று பிறர் அவர்களை எண்ணக் கூடிய அளவுக்கு அவர்களுடைய வாழ்க்கை முறைகள் அமைந்திருந்தன. ஆனால் தங்களை நேரான வழியிலே நடத்திச் செல்வதற்கு ஒரு குரு அல்லது ஆசான் கட்டாயமாக இருக்க வேண்டுமென்று அவர்கள் நம்பினார்கள். ஆகையால்தான், சூபிகள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்களுக்கு 'இஸ்னாத்' எனப்படும் ஒரு ஆன்ம வம்சாவளி இருக்கிறது.

இந்த வழியில் இறைவனை அடைய முயல்பவர்களின் பாதையில் அவர்களுக்கு, 'ஹால்' எனப்படும் அவர்கள் நிலைக்கு ஏற்ப, 'மகாமாத் எனப்படும் ஏழு தங்குமிடங்கள் உண்டு. அவைகளில் முதலாவது, 'தவ்பா' எனப்படும். அதாவது தாங்கள் செய்த பாவங் களுக்கும், தீமைகளுக்கும் மனமுருகி வருந் துதல். இரண்டாவது வரா' எனப்படும். அதாவது சுக போகங்களை வெறுத்து ஒதுக்கிக் கொள்ளுதல், மூன்றாவது 'ஜூஹ்த்', அதாவது உலக வாழ்க்கையிலிருந்து விலகிக் கொள்ளுதல். நான்காவது 'ஃபக்ரு' அதாவது ஏழ்மையை வலிய ஏற்றுக்கொள்ளுதல். ஐந்தாவது 'சப்ரு', அதாவது பொறுமை. ஆறாவது 'தவக்குல்' அதாவது நம்பிக்கை. ஏழாவது 'ரளா' அதாவது இறை திருப்தி. இந்த ஏழு தங்குமிடங்களுக்கும் ஏற்ற நிலைகளாவன : 'முராக்கபா' அதாவது தியானம், 'குர்ப்' அதாவது இறைவனுக்கு அண்மை. 'முஹப்பத்' அதாவது காதல். கவ்ப்' அதாவது பயம். 'ரிஜா' அதாவது நம்பிக்கை, 'ஷவ்க்' அதாவது ஆசை. 'உன்ஸ்' அதாவது நெருக்கம். 'இத்மீனான்' அதாவது மன அமைதி, 'முஷாஹதா' அதாவது சிந்தனை, 'யக்கீன்' அதாவது நிச்சயம் அல்லது தெளிவு.

இந்த சூபிகளிடையே அப்துல்காதர் ஜீலானி போன்ற மாபெரும் ஞானிகளும் மேதைகளும் இருந்திருக்கிறார்கள். இத்தகைய சூபிகள் பெரும்பாலும் சேர்ந்தே வாழ்ந்திருந்தார்கள். அவர்களிடையே மிகக் கடினமான தவ நிலையோடு ஆடல் பாடல், திக்ரு என்னும் தியானம் ஆகிய பழக்கங்களும் இருந்தன. இவை யனைத்தும் இறைவனிடத்துக் கொண்டிருந்த அளவு கடந்த அன்பினாலும் அந்த இறைவனை அடைய வேண்டுமென்ற உத்வேகத்தினாலும், ஆவேசத்தினாலும் உண்டானவை. இறைவனி டத்துக் கொண்ட அளவற்ற காதல், அவனுக்கும் தனக்குமிடையே ஒரு நெருங்கிய உறவை மனத்திடையே கொள்ளச் செய்து, அதை சொல்லாலும் வெளியிடச் செய்தது. நாயக, நாயகி பாவம் போன்றது இந்த மனோபாவத்தி லிருந்து தோன்றியதுதான். இந்த நிலையிலும், எந்த நிலையிலும் இறைவன் ஒருவனே, அவன் உருவமற்றவன், எங்கும் நிறைந்தவன் என்பதி னின்றும் அவர்கள் சிறிதும் பிறழ்ந்ததில்லை. இதனை வற்புறுத்த வேண்டியதற்கு ஒரு அவசியமிருக்கிறது. இப்படியாக நெருங்கின உறவின் அடிப்படையில் பல பாவங்களை ஹிந்துக்களும் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பாவனைகளின்போது அவர்களுக்கு உதவியாக இருந்தது மூர்த்தி உபாசனை யாகும். உதாரணமாக ஆண்டாளுடைய பாசுரங்கள் நாயக நாயகி பாவத்தைப் பாடும்பொழுது கண்ணன் நாயகன் இடத்தைப் பெற்றுவிடுகின்றான். கிருஷ்ணாவதாரம் அதற்கு இடம் கொடுத்து விடுகிறது. பிற ஆழ்வார்கள் கண்ணனுடைய குழந்தைப் பருவ விளையாட்டுகளைப் பாடும்பொழுது தங்களை யசோதையின் இடத்திலே வைத்துக்கொள் கிறார்கள். இதற்கும் திருமாலின் கிருஷ்ணா வதாரம் இடம் கொடுக்கிறது. ஆக அவதாரம் பற்றிய கதைகள், சிவபெருமான் பார்வதியை


vaigarai velicham official

மணந்து திருமாலின் கொண்ட நிகழ்ச்சிகள், முப்புரம் எரித்தது, பாற்கடலை கடைந்தபோது வெளியான விஷத்தை உண்டது, முருகன், தேவானை, வள்ளி ஆகியவர்களை மணந்து கொண்டது, சூரபத்மனை வென்றது ஆகிய புராணக்கதைகள் இந்த பாவங்களுக்கு ஆதாரமாக அமைகின்றன. ஆனால் சூபிகள் சம்பந்தப்பட்டவரையில் அவர்களுடைய மனோ பாவங்களுக்கு ஆதாரமாக அமைவது எந்த அவதார புருஷனுடைய வீரச் செயல்களோ அருட்செயல்களோ அல்ல; எந்த கடவுளர்களுடைய போர் வெற்றியோ, திருமண நிகழ்ச்சியோ அல்ல; அதற்கு மாறாக உருவமற்ற எங்கும் நிறைந்திருக்கிற ஏகனாக இருக்கிற பரம் பொருளின் எல்லையற்ற வல்லமை, அளவற்ற கருணை, நிகரற்ற அருள், அளப்பரும் இரக்கம், எதையும் மன்னிக்கும் சுபாவம் எத்தகைய பாவிக்கும் ஈடேற்றமளிக்கும் வண்மை ஆகிய அழகிய பண்புகளேயாகும். பாவங்கள் ஒன்றாக இருந்தபோதிலும் அந்த பாவங்களை வெளிப்படுத்தும் சொற்கள் ஒன்றாக இருந்தபோதிலும் இந்த அடிப்படை வேற்றுமையை மறப்பதற்கில்லை.

தமிழ்நாட்டில் தவக்கோலம் பூண்ட ஹிந்துத் துறவிகளுக்கும், சூபிகளுக்கும் இவ்விதமாக பெருத்த அளவில் ஒற்றுமை இருக்கிறது. ஹிந்து ஞானிகளும், வேதாந்திகளும் துறவறத்தை மேற்கொண்டு, தவக்கோலம் பூண்டு, ஏழ்மையை வலிய ஏற்றுக்கொண்டு, இறைவனுடைய நினைவிலே இறைவனுக்காகவே வாழ்ந்தார்கள். பிறர் இடும் பிச்சைதான் அவர்களுக்கு உணவாயிற்று. தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறவேண்டுமென்று இறைவனைத் துதித்துப் பாடிக் கொண்டு பரதேசியாக ஊர் ஊராகச் சென்று கொண்டிருந்தார்கள். இறைவனிடத்து மக்களிடையே பக்தி வளர்வதற்கு இது பெருத்த அளவிலே உதவிற்று. அவர்களுடைய பக்திப் பாடல்கள் மக்களின் உள்ளத்தைத் தொடுவனவாயிருந்தன.

அப்படி இருப்பினும் ஸூபிகளோடு நெருக்கமான நிலையில் இருந்தவர்கள் தமிழ்நாட்டுச் சித்தர்களே. ஸூபிகளைப் போலவே அவர்கள் வெளியலங்காரங்களையும், பகட்டுகளையும் வெறுத்தார்கள். ஸூபிகளைப் போலவே அவர்கள் பொதுமக்களிடமிருந்து பிரிந்து தனியாக காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்தார்கள். காய்,கனி, ஆகியவற்றையே உண்டார்கள். இறைவனிடத்துக் கொண்டிருந்த காதல் அல்லது போதை என்ற நிலையிலேயே இருந்தார்கள். மூர்த்தி உபாசனையோ விக்ரக ஆராதனையோ அவர்களிடத்து இல்லை. எல்லையற்ற ஜோதி வடிவான பரம் பொருளே அவர்கள் கொண்ட தெய்வம்.

இத்தகைய சித்தர்கள் பெரும்பாலும் சைவர்களாகவே இருந்தார்கள். சைவசித்தாந்த அடிப்படைகள், இவர்களுடைய வாழ்வும் ஸூபிகளுடைய வாழ்வோடு ஒத்திருப்பதற்கு உதவிற்று.

> But, whatever the metaphysics of Saiva Siddhanta, the practical religion was that of love and devotion. Its chief elements were: (1) faith in Siva and his grace : (2) unquestioned belief in the teacher; (3) loving devotion and worship; (4) discipline of Yoga demanding concentration and accompanied with song, dance and ecstatic rapture; (5) toleration of all creeds; (6) protest against the externalia of religion, ritual and idol worship; and (7) religious equality of all irrespective of caste or sect or worldly position.
>
> Influence of Islam on Indian Culture by Dr. TARA CHAND-P. 104.


சைவ சித்தாந்தத்தினுடைய முக்கியமான கோட்பாடுகளாவன. (1) சிவனிடத்திலும் அவனுடைய அருளிலும் நம்பிக்கை (2) குரு அல்லது ஆசிரியர் இடத்து, அவர் சொல்லும் எதையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஈடுபாடு (3) அன்புடனும் ஈடுபாட்டுடனும் கூடிய வணக்கம். (4) மனத்தை ஒருமனப்படுத்துவதற்காக யோகப் பயிற்சி (5) எல்லா கோட்பாடுகளிடத்தும் மரியாதை வைத்தல் (6) சமயத்தின் வெளித் தோற்றங்களையும் விக்ரக ஆராதனையையும் சடங்குகளையும் ஒதுக்குதல் (7) ஜாதி சமூக அந்தஸ்து, சமய உட்பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில் எந்த வேற்றுமையும் இல்லாத சமய சமத்துவம். (டாக்டர் தாராசந்த் ப: 104). இந்தக் கோட்பாடுகள் அனுஷ்டானத்துக்கு வரும்பொழுது இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளை வெகுவாக அணுகுவதைக் கண்டு கொள்ள முடியும்.



சிவ வாக்கியர்



குணங்குடி மஸ்தான் சாஹிபு



கம்பன்

இப்படியாக ஸூபிகளும், தமிழ்சித்தர்களும் ஒருவரோடு ஒருவர் கலந்தபோது ஒரு புதிய பக்தி ஞான இலக்கியம் தமிழில் உருவாயிற்று. இருவருமே தமிழ் மக்களுக்காகத்தான் தங்கள் இலக்கியங்களைப் படைத்தார்கள். ஆகவே தமிழ் மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய சொற்களை கையாளவேண்டிய அவசியம் தானாகவே ஏற்பட்டுவிட்டது. இதன் முடிவு என்னவென்றால், தமிழ் மொழியின் உடையைப் போர்த்திய இஸ்லாமியத் தத்துவக் கொள்கைகள் குணங்குடி மஸ்தான் சாஹிபு, பீர்முகம்மது அப்பா போன்றவர்களுடைய ஞானப்பாடல்கள் ஒரு புறமும், அதேசமயத்தில் அதே தமிழ் மொழியின் உடையில் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மிக நெருக்கமாக வந்துவிட்ட இந்த கொள்கைகளை வெளிப்படுத்திய சித்தர் பாடல்கள், பட்டினத்தார், தாயுமானவர் ஆகியோர்களுடைய பாடல்கள் ஒருபுறமும் பிறந்ததுதான். இந்த இருவகை இலக்கியங்களுக்கிடையே ஏற்பட்டுவிட்ட ஒற்றுமைக்கு, பீர் முஹம்மது அப்பா அவர்களுடைய 'ஞான ரத்தினக் குறவஞ்சி," ஞானக் கோவை" என வழங்கும் சித்தர் பாடல்களில் இடம் பெற்றிருப்பதை விடச் சிறந்த சான்று காணமுடியாது. இங்கு இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். சாஹிபு, பீர்முகம்மது அப்பா போன்றவர்களுடைய சமய ஞானம் குணங்குடி மஸ்தான் அரபி மூலநூல்களிலிருந்தும், அரபி மொழியைப் பேசி அந்த மொழியில் வெளிப்படுத்தப்பட தோன்றியது. அந்த மொழியிலுள்ள சில சொற்கள் அவற்றுக்கான கருத்துக்களிலிருந்தும் தனிப் பொருள்களைக் கொண்டிருந்தன. பொருளையும் உணர்த்துவதற்கு அதற்கான அரபிச் சொற்களையே அந்த கருத்தினையும் ஆளவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

எனவே மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இருதரத் தாரும் ஒரேவிதமான தமிழ்ச் சொற்களை ஆள்வது தெரியும். ஆனால் அந்த சொற்கள் இருதரத்தாருடைய அடிப்படைக் கொள்கைகள் உணர்த்தும் வகையில் ஆளப்பட்டிருக்கின்றனவேயன்றி இரண்டும் ஒன்றையே உணர்த்துகின்றன என்று மயக்கம் கொள்ளும் வகையில் அல்ல. உதாரணமாக குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களுடைய மனோன் மணிக் கண்ணியின் கடைசியில் அடியிற்கண்ட பாடல் காணப்படுகிறது :

ஆதிஅந்தம் கடந்தடமை யாள்தன் பாதம்
அகண்டபரி பூரணமாம் ஐயர் பாதம்
சோதி அந்தம் கடந்தகண பதியின் பாதம்
தொழுதிறைஞ்சிக் கரம்குவித்துப் போற்றி செய்து
வாதிஅந்தம் கடந்தாந்தி பாதம் என்றும்
வாலைமனோன் மணிஅம்மை பாதம் என்றும்
ஓதி அந்தம் கடந்தண்டம் இரண்ட தாக
ஒன்றும்அறி யாவறிஞன் உரைசெய் தானே

என்று அமைந்திருக்கிறது. இந்தப் பாடலில் உமையாள், கணபதி, நந்தி, வாலை மனோன்மணி ஆகிய சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. அப்படி இடம் பெற்றிருப்பதோடல்லாமல் அச்சொற்கள் உணர்த்துபவர்களுடைய பாதங்களை ஓதுவதாகவும் காணப்படுகிறது. அப்படியானால் ஹிந்துக்கள் கருத்தின்படி சிவபெருமானுடைய மனைவியாகிய உமையாள், அவர்களின் பிள்ளையாகிய கணபதி ஆகியவர்களின் பாதங்களைப் போற்றுவதாகவும், புகழ்வ


vaigarai velicham official

தாகவும் குணங்குடி மஸ்தான் சொல்லுகிறாரா? அப்படிச் சொன்னால் அவருடைய இஸ்லாமிய ஏகத்துவம் என்னவாயிற்று? என்ற கேள்விகள் நியாயமாகவே எழக்கூடும். தமிழ்நாட்டு மக்களிடையே பழக்கமாகியிருந்த உமையாள், கணபதி, நந்தி, ஆகிய சொற்களைத்தாம் அவர் பயன்படுத்துகிறார் என்பதையும் மறுப்பதற்கில்லை. அதேசமயத்தில் அச்சொற்களுக்கு வலிந்துரை கொள்ளத் தேவையுமில்லை ஒரு சாதாரண உண்மையை மனத்தில் இருத்திக் கொண்டால் இதில் மயக்கம் கொள்வதற்கு இடமில்லை. ஹிந்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் தங்களுடைய குலதெய்வம் அல்லது இஷ்டதெய்வம், தில்லை நடராஜர், பழனி முருகன், திருப்பதி வெங்கடாசலபதி, ஸ்ரீரங்கத்து அரங்கன் என்று சொன்ன போதிலும் அவர்கள் அந்த இஷ்ட தெய்வத்தைப் பரம்பொருளினின்று வேறானதாகக் கொள்ளாமல் அந்தப் பரம்பொருளின் தன்மையை அதன்மேல் ஏற்றியே வணங்குகிறார்கள், வாழ்த்துகிறார்கள். மேலும் பார்ப்போமானால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சிவன் கோயில் இருக்கிறது. ஒவ்வொரு கோயிலிலும் வெவ்வேறான பெயருடன் ஒரு மூர்த்தி எழுந்தருளியிருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். அதே சமயத்தில் அத்தனை மூர்த்திகளும் சிவனே என்றும் நம்புகிறார்கள். அதுபோலவே அம்மன் சந்நிதி, தாயார் சந்நிதி என்று கோவில்களுக்குச் சென்று வழிபடும்போதும் அம்மன், தாயார் என்று யாரை வணங்குகிறார்களோ அவர்களிடத்தும் பரம்பொருளின் தன்மையையே முழுமையாக ஏற்றிவிடுகிறார்கள். இராமாயணக் கருத்தின்படி இராமன் திருமாலின் அவதாரம் என்றபோதிலும் இராமகாதையில் இராமனைத் துதிக்கும் அனைவரும் அவனைப் பரம்பொருளாகவே துதிக்கிறார்கள். கவந்தன் வாயிலாக கம்பன் இராமனை,

'மூன்று கவடு ஆய் முளைத்து எழுந்த மூலமோ?'
'ஆண்பாலோ? பெண்பாலோ? அப்பாலோ? எப்பாலோ"
ஆதிப் பிரமனும் நீ? ஆதிப் பரமனும் கீ!
ஆதி எனும் பொருளுக்கு அப்பால் உண்டாகிலும் நீ.!"
'சோதிச் சுடர்ப் பிழம்பு நீ?'

என்று துதிக்கச் செய்வான். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது சிவன், விஷ்ணு, உமை, மனோன்மணி, கணபதி, நந்தி, இராமன், கிருஷ்ணன் ஆகிய சொற்கள் யாவும் தமிழில் பரம் பொருளையே குறிப்பவையாகும் என்று கொள்வதில் தவறு இல்லை. அதே கருத்தில்தான் குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்கள் இந்த சொற்களை இந்தப் பாடலில் ஆண்டிருக்கிறார்கள் என்று கொள்ள வேண்டும். இல்லாவிட்டால்,

மஹ்லியத் தானதாத்துல் கிபுரி யாவில்
மறைந்தகன் சுல்மகுபி யாம்
மஸ்கூத்து அன்ஹூல் கதீமுல் அமாவான
மவுஜூ தெனும் சிருபுலே
அஹதியத் உஹதாகி வாஹிதிய் யத்தான
ஆலம்அறு வாஹா னதில்
ஆலம்மி தாலாகி ஆலம்அஜ் சாம்ஆன
ஆலம் இன் சான்ஆ னபின்
பகுதியத் தில்லா ஜலாலொடு ஜமாலும்
பதீஉல்க மாலும் ஆகி
பஉதுகபுல் அற்றலா ஹூத்துஜப றூத்தில்
பகாவான ஹுவியத் தினால்
நகுசியத் அற்றும்உன் தாளின்நிழல் பெற்றடிமை
நான்நினைவும் அற்றுய் வனோ
நற்குணம் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

என்பது போன்ற அதே மஸ்தான் சாஹிபுடைய பாடல் பொருளற்றுப் போய்விடும்.

(மேற்கண்ட பாடலின் பொருள் பின்வருமாறு:

உயர்ந்த குணத்தில் வாழுகின்ற மாமன்னராகிய குருநாதரான முகியித்தீனே, கலப்பற்ற பாலைப்போல தெளிவான சுய வடிவின்கண் மறைவாகிய புதைபொருளாம் அதைத்தொட்டும் வாய் மூடிப் பூர்வீகமென்னும் இருளாகிநின்று எவைக்கும் உடைத்தான பொருளிலே குறிப்பற்ற ஒருமையாகி, ஒன்றாம் குறிப்பாகி, இரண்டாம் குறிப்பான ஒருமையில் நின்றும் ஆத்மலோகம் ஆகி, பின் பல உலகங்களையும் கொண்ட மாதிரிஉலகம் ஆகி சடலோகம் ஆகி, பிறவியைக் கொண்ட மானிட உலகத்தளவில் வந்தபின் மட்டில்லாத சூட்டோடு குளிரும் சேர்ந்து வினோதமாகி, பரபூரணம் ஆகி, முன், பின் இல்லாத "லாஹூத்" என்னும் சூபிப் பயணத்தின் இறுதிக்கட்டத்திலும், "ஜபரூத்" என்னும் வல்லமையைப் பெறும் கட்டத்திலும் தரிபாடான உண்மைப் பெயரினால், கேடளவில் சாருதல் இல்லாத உமது திருவடிகளின் நிழலைப் பெற்றுக்கொண்ட அடிமையாகிய



தக்கலை பீர் முஹம்மது அப்பா



திரு மூலர்

நான் உமது நினைப்பை விட்டால் ஈடேறுவது எங்ஙனம்?' என்பதாகும். ஆண்டவனை அறிய முயலும் ஸூபித்துவ வழியின் பிரயாணத்தில் உள்ள பல்வேறு கட்டடங்களையே இந்த ஆசிரிய விருத்தம் எடுத்துக்காட்டுகிறது.)

இவ்வாறாகவே,

"நட்டகல்லைத் தெய்வம்என்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லுமந்திரம் ஏதடா!
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ ?"

என்ற சிவ வாக்கியர் பாடலுக்கும் வலிந்துரை கொள்ளக்கூடாது. ஏனென்றால்,

"ஓசை உள்ள கல்லைநீர் உடைத்து இரண்டாய் செய்துமே
வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு உகந்தகல் எந்தக்கல்லு சொல்லுமே?"

என்று அவரே கேட்கிறார், பட்டினத்தடிகளும்,

"சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலு மாசற்ற ஆகாயம் தன்னிலும் ஆய்ந்துவிட்டோர்
இல்லிலும் அன்பர் இடத்திலும் ஈசன் இருக்குமிடம்
கல்லிலும் செய்பிலு மோஇருப் பானெங்கள் கண்ணுதலே"

என்று பாடுகிறார். திரு மூலரும்,

"உள்ளம் பெருங்கோயில் ஊண் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே"

என்று பாடுவார். இவைகள் அனைத்தும் வலிந்துரை கொடுத்து ஒதுக்கிவிடக் கூடியவை அல்ல. இப்பாடல்களில் ஒரு மத்திய கருத்து தெற்றென விளங்குகிறது. அதுதான் இறைவன் உருவமற்றவன், அவன் எங்கும் நிறைந்தவன், அவனை உள்ளத்திருத்தி உணர்வு பூர்வமாக வழி படமுடியுமே தவிர வெறும் வெளிச் சடங்குகளால் முடியாது என்பதாகும். இங்கு இன்னொன்றையும் காணவேண்டும். சிவன், சிவம், சுத்த சிவம் என்ற மூன்று சொற்கள் தமிழில் இடம் பெறுகின்றன. சிவன்என்றசொல்பிரம்மன், விஷ்ணு, சிவன்என்ற மும்மூர்த்திகளில் ஒருவரைக் குறிக்கும். சில சமயங்களில் சிவம் என்ற சொல்லுக்கு நன்மை, முக்தி என்ற பொருள்களோடு பரம் பொருள் என்ற பொருளும் உண்டு. சுத்த சிவம் என்ற சொல்லோ உருவமற்ற பரம்பொருளைத் தான் குறிக்கும். சைவசித்தாந்தப் பெரியோர்கள் அது நிட்கள பரசிவத்தைக் குறிப்பதாகச் சொல் வார்கள். ஆகவே சிவம் என்ற சொல்லையோ சுத்த சிவம் என்ற சொல்லையோ ஒரு ஸூபி தமிழில் ஆள்வாரேயானால் சைவர்கள் கோயிலில் வணங்குகிற விக்ரகத்தைத்தான் அது குறிக்கிறது என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது.

உதாரணமாக தக்கலை பீர் முஹம்மது அப்பா அவர்களுடைய ஒரு பாடலைப் பார்க்கலாம். அதாவது

"முத்தொடு பவளம் பச்சை முதலொளி புவனுங் கூட்டிச்
சத்தியாய்ச் சிவனா யிந்தத் தாரணி தன்னிலாக்கிப்
பத்தியா யெனை வளர்த்த பரமனே யுனையான் பாட
இத்திசை யனைத்தும் போற்றும் இறைவனே துணைசெய்வாயே"

இந்தப் பாடலில் சக்தி, சிவன் என்ற இரண்டு சொற்களுமே இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் இந்தச் சொற்கள் பரமசிவன் பார்வதி என்ற பொருளில் ஆளப்படவில்லை என்பது தெளிவு.

இத்தகைய கருத்துக்கள் பல இத்தகைய இலக்கியங்கள் அனைத்திலும் இடம் பெற்றிருக் கின்றன. குணங்குடி மஸ்தான் சாஹிபு



vaigarai velicham official

*அவர்கள்*

ஊனாகி ஊனில்உயிர் ஆகிஎவ் வுலகுமாய்
ஒன்றாய் இரண்டும் ஆகி
உள்ளாகி வெளியாகி ஒளியாகி இருளாகி
ஊருடன் பேரும் ஆகிக்
கானாகி மலையாகி வளைகடலும் ஆகிமலை
கானக விலங்கும் ஆகிக்
கங்குல்பகல் ஆகிமதி யாகிரவி யாகிவெளி
கண்டபொருள் எவையும் ஆகி
நானாகி நீயாகி அவனாகி அவளாகி
நாதமொடு பூத மாகி
நாடும்ஒளி புரிய அடி யேனும்உமை நம்பினேன்
நன்மைசெய் தாளு தற்கே
வானோரும் அடிபணிதல் உள்ளநீர் பின்றொடர
வள்ளல்இற சூல்வ ருகவே
வளரும்அருள் நிறைகுணங் குடிவாழும்
எண்ணிருகண் மணியே முகியித் தீனே.

*என்று பாடுகிறார்கள். இதே கருத்து பிற ஞானிகளின் பாடல்களிலும் இருக்கின்றன. ஷாஹ் மௌலா முஹம்மது கௌஸ் ஸாஹிப் என்னும் பெரியார்,*

ஆதியே அவ்வலுமாய் ஆகிறும் ளாஹிருமாய்
நீதியே பாத்தினுமாய் நிற்பதால்- கோதி
அவனை யவனறிந்து மவனையவன் கண்டும்
அவனாய்நிற் கின்றா னவன்

*என்று பாடுகிறார்கள். இதில் 'அவ்வல்' என்ற சொல்லுக்கு தொடக்கம் அல்லது மூலம் என்று பொருள். 'ஆகிறு' என்ற சொல்லுக்கு ஈறு அல்லது முடிவு என்று பொருள். ளாஹிர்' 'பாதின்' என்ற சொல்லுக்கு உள், புறம் என்று பொருள். ஆக இறைவனே எல்லாமாக இருக்கிறான் என்பது இப்பாடலின் பொருள். இத்தகைய கருத்துக்களை வெளிப்படையாக ஓர் அளவுக்குத்தான் எடுத்துக்காட்ட முடியும். இல்லாவிட்டால் பாமரமக்களிடையே சமயம் பற்றியும், இறைவனுடைய தன்மைப்பற்றியும், தவறான கருத்துக்கள் உண்டாவதற்கு இடமாகி விடும். ஆகையால் தான்,*

"அன்னையிலி யத்தனிலி யாருமினி நீயே
அழிவுபல காலமணு காதவனு நீயே
முன்னையுரு வற்றொளிமு ழங்குமிறை நீயே
முச்சுடரி லச்சமற நிற்பவனு நீயே
மன்னையொரு முத்தினில்வ குத்தபெரி யோனே
வருத்தமறிந் தெனக்குதவி செய்தருளு வாயே
உன்னையென் மனத்தினி லுதித்தக லாமல்
உடையோனே யானுன் னடைக்கலம தானேன்"

*என்று பாடிய பீர்முகம்மது அப்பா அவர்களே,*

"அவ்வ லஹதாக நின்றமரம்
ஆகி றஹூமதாய்ப் பூத்துப் பூத்து
வவ்வற் கொடியாகப் படர்ந்து காய்த்து
பகுது அஹதாகக் காலியாமே
சொல்லத் தகுமல்ல இப்பொருளை
சுருட்டி மறைக்கிறேன் சறகுக்காக
எல்லை யறிந்துன்னை வணங்க வல்லார்க்
கிரங்கி யிருப்போனே துணை செய்வாயே!"

*என்ற பாடலில் தனக்குத்தானே ஒரு எச்சரிக் கையை விடுத்துக்கொண்டு இறைவனின் உண்மைத் தன்மையை சுருட்டி மறைத்திருப்ப தாகச் சொல்கிறார்கள். சறகு என்ற சொல்லுக்கு சமய ஒழுக்க முறை என்று பொருள்.*

*பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த கம்பன் தன்னுடைய ராம காதையில் பிரகலாதன் மூலமாக இறைத்தன்மையை,*

"தன்னுளே உலகங்கள் எவையும் தந்து அவை -
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்,
பின்இலன் முன்இலன், ஒருவன்; பேர்கிலன்;
தொல்நிலை ஒருவரால் துணியற் பாலதோ!''

"மூவகை உலகும்ஆய், குணங்கள் மூன்றும்ஆய்,
யாவையும் எவரும்ஆய், எண்இல் வேறுபட்டு,
ஓவல்இல் ஒருநிலை ஒருவன் செய்வினை
தேவரும் முனிவரும் உணரத் தேயுமோ?"

"உள்ளுற உணர்வுஇனிது உணர்ந்த ஓசைஓர்
தெள் விளி யாழிடைத் தெரியும் செய்கையின்
உள்உளன்; புறத்துஉளன்; ஒன்றும் நண்ணலான்;
தள்ள அரு மறைகளும் மருளும் தன்மையான்"

*என்று தெளிவாகவும், அழகாகவும் உணர்த்துவான்.*

*சிவ வாக்கியரும்,*

"உருவும் அல்ல வெளியும் அல்ல ஒன்றைமேவி நின்றதல்ல
மருவும் அல்ல காதம் அல்ல மற்றதல்ல அற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசும் ஆவி தானும் அல்ல
அரியதாகி நின்ற நேர்மை யாவர்காண வல்லரே"

*என்று பாடியிருக்கிறார்.*

*குணங்குடி மஸ்தான் சாஹிபின் ஆசிரியரான கீழக்கரை காமில் ஒலி ஹலரத் ஷெய்க் அப்துல்காதர் தைக்கா சாஹிப் அவர்கள்*

"நாட்டம் நீயாகும் நாடுவோனும்
நாடப் பட்டோனும் நீயேயாகும்
தேட்டம் நீயாகும் தேடுவோனும்
தேடப்பட்டோனும் நீயேயாகும்

வாட்டம் நீயாகும் மகிழ்ச்சிகளும்
வணக்கங் கள் தானும் நீயேயாகும்
ஆட்டம் நீயாகும் ஆடுதலும்
அடங்க லுனையன்றி வேறில்லையே"

என்று பாடுகிறார்கள். கம்பன் தன்னுடைய காப்பியத்தில் இறை வனுடைய தன்மையை பிரகலாதன் வாயிலாக,

"காலமும் கருவியும் இடனும் ஆய், கடைப்
பால் அமை பயனும் ஆய், பயன் துய்ப்பானும் ஆய்,
சீலமும் அவை தரும் திருவும் ஆய், உளன் -
ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான்

என்று இறைத்தன்மையை உணர்த்துவான்.

பரம் பொருளின் எங்கும் பரந்த தன்மையை பட்டினத்தடிகள்,

"எட்டுத் திசையும் பதினறு கோளமும் எங்கும் ஒன்றாய்

முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடடில்லாம்.

சுட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைப்பர் கருத்தில் வைபார்

பட்டப் பகுலை யிரவென்று கூறிடும் பாதகரே!!

என்றும்,

"அண்டபிண்ட மெல்லா மணுவுக் கணுவாய்
கொண்ட வடிவின் குறிப்பறியேன் யாணயே

என்றும் பாடுகிறார்.

குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள்,

"கல்லிலோ மண்ணிலோ விண்ணிலோ அடிமைஇரு
கண்ணிலோ கண்ணீ ரிலோ
கரையிலோ கடலிலோ உடலிலோ உயிரிலோ
கதியான பூமி தனிலோ
அல்லிலோ பகலிலோ நல்லபத இல்லிலோ
அருவிலோ வுரும் திலோ
அறிவிலோ அறியொளு மறையிலோ மறைகண்முதல்
ஆகம புராணத் திலோ
செல்வமிகு துரைராஜ ரேதேவ நீர்க்குநிலை
திவ்விய குணங்குடி யிலோ
தெரியாமல் இடையும்அடி யேனும்உமை நம் னேன்
சேர்ந்து அணைந் தாளு தற்கே
மல்லிகை மலர்க்கந்த முள்ளநீர் பின்தொடர
வள்ளல்இற சூல்வரு கவே
வளரும் அருள் நிறைகுணங் குடிவாழும் என் இருகண்
மணியே முகியித் தீனே"

என்றும்,

"பார்க்கப் பலவிதமாய்ப் பல்லுயிருக் குள்ளிருந்தும்
ஆர்க்குந் தெரியாம லானாய் பராபரமே"

என்றும் பாடுகிறார்கள்.

குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களு டைய சொல்லாட்சிகள் பல தாயுமான சுவாமி களுடைய சொல்லாட்சியை அடியொற்றிய தாகக் காணப்படும். தாயுமான சுவாமிகள்

"அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி"

என்று பாடுவார். குணங்குடி மஸ்தான் சாஹிபோ

"அங்கிங் கெனவொண்ணா அகண்டபரி பூரணமாய்
எங்கும் நிறைந்த இறையே நிராமயமே"

என்று பாடுவார். தாயுமானவர்,

"பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே"

என்று பாடுவார். குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களோ,

"பார்க்குமிட மெல்லாம் பரிபூ ரணமாக
ஏற்கையுடன் நின்ற இயல்பே நிராமயமே"

என்று பாடுகிறார்.

இப்படியாக இஸ்லாத்தினுடைய ஆணித்தர மான ஏகதெய்வக் கொள்கையும், சற்றும் குறையாமல் அனுஷ்டானத்தில் வந்துவிட்ட சமத்துவமும் சகோதரத்துவமும், இந்நாட்டு மக்களைப் பெரிதும் கவர்ந்தன. இந்த கவர்ச்சியின் காரணமாக ஹிந்துக்களிடையே நிலவி வந்த பலதெய்வக் கொள்கை பெருத்த அளவில் பாதிக்கப்பட்டு ஏக தெய்வக் கொள்கை யையும் மக்களிடையே சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வற்புறுத்தும் சமய சீர்திருத்தவாதிகளும் ஞானிகளும் தோன்றினர். இத்தகையவர்களுடைய பணியின் காரணமாக இந்நாட்டைச் சேர்ந்தவர்களுடைய சமய இலக்கியங்களில் மேற்கூறப்பட்ட இஸ்லாமியக் கொள்கைகள் இடம் பெற்றன. முஸ்லிம் ஞானி களுடைய படைப்புகளிலும், பாடல்களிலும் இஸ்லாமியக் கருத்துக்களை உணர்த்துவதற்கு இந்நாட்டு மக்களிடையே பழக்கத்திலிருந்த சொற்கள் பல எடுத்தாளப்பட்டன. இப்படி யாகத் தோன்றிய ஒரு இணக்கம் இந்நாட்டின் சமயக் கருத்துக்களையும் கலாச்சாரத்தையும் இணைந்தபண்பு ஒன்றை உடையவையாக ஆக்கிவிட்டது.


vaigarai velicham official



தொடர்-2

# பாலஸ்தீன மீட்புப் போரில்....
# இஸ்லாமிய ஊடகங்களின் சாதனைகள்!

டாக்டர் யூசுப்ஃப் அல்கர்ளாவி அவர்கள், அல் இஹ்வானுன் அல் முஸ்லிமூன் இயக்கத்தின் தளகர்த்தர்களில் ஒருவர்.

அவர் கத்தர் வந்தார். ஒரு ஆசிரியராக அவர்களுடைய மாணவர்களை உலகெங்கும் நடக்கும் இஸ்லாமோஃபோபியா-வுக்கு எதிராகத் தயார் செய்தார்.

இந்த இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரத்தில் முக்கியமாக இடத்தைப் பிடிப்பது, ஊடகங்கள். குறிப்பாக மேலைநாட்டு ஊடகங்கள். இந்த ஊடகங்கள் பல மில்லியன் டாலர்கள் முதலீட்டில் இஸ்லாமிய வெறுப்புப் பிரச்சாரத்தை செய்து கொண்டிருந்தன.



## வந்தது அல்ஜெசீரா

பாலஸ்தீனை பொறுத்தவரை இந்த மேலை நாட்டு ஊடகங்கள் சொல்லுகின்ற பொய்கள் தாம் உலக மக்களுக்குச் செய்தி.

இந்த ஊடகங்கள் இஸ்ரேல் என்ற ஆக்கிரமிப்பு நாட்டை, ஒரு பெரும் பரிதாபத்திற்குரிய நாடு என்றும், அது அரபு நாடுகளின் ஆக்கிரமிப்பில் சதா சர்வகாலமும் ஆளாகிக்கொண்டிருக்கின்றது என்றொரு பிரம்மையை ஏற்படுத்தி வந்தன.

ஆனால் இஸ்ரேல் என்ற ஆக்கிரமிப்பு நாடு சதா சர்வகாலமும் இஸ்ரேலுக்கு உள்ளேயும், அதற்கு வெளியேயும் பொய்களையே விற்பனைச் செய்தது.

இதனால் அரபுலக மக்கள் இஸ்ரேல் மீது ஒரு பரிதாபத்தை வளர்த்துக்கொண்டார்கள், அரபுக்கள் மேல் குறிப்பாக பாலஸ்தீன முஸ்லிம்களின் மேல் வெறுப்பை வளர்க்கப் பழகிக்கொண்டார்கள். அதனால் பாலஸ்தீன முஸ்லிம்கள் கூட்டுப்படுகொலைகளுக்குப் பலியாகிடும்போதும், எல்லாம் அவர்கள் தங்கள் கைகளாலேயே தருவித்துக் கொண்டது என்றே எண்ணிக் கொண்டார்கள்.



இன்றளவும் இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிக்காமலிருந்த அரபு நாடுகள் அதனை அங்கீகரிக்கத் தொடங்கின. ஒப்பந்தங்களைப் போட்டுக்கொண்டன. இராஜாங்க உறவுகளை வளர்த்துக் கொண்டன.

ஆனால் இஸ்ரேல் சந்தடி இல்லாமல், அகண்ட இஸ்ரேலை நோக்கி நகர்ந்தது. இந்தத் திசையில் அது மேற்குகரை என்ற "West Bank"-ஐ தன்வயப்படுத்தியது. இந்த மேற்குகரை, ஜெரூசலம், ஜோர்டான் வேலி இவையெல்லாம் ஐக்கிய நாடுகள் சபையில் தனி பாலஸ்தீன பகுதிகள் என அறிவிக்கப் பட்டவை.

ஆனால் இவற்றை இஸ்ரேல் வசப்படுத்தி தன் கையில் வைத்துக்கொண்டு, அங்கே தனக்குக் கீழ் இயக்கக்கூடிய பாலஸ்தீனை அதாரிட்டிக்கு சில சில்லரை முனிசிபாலிட்டி அதிகாரத்தை வழங்கியது. இந்த பாலஸ்தீன அதாரிட்டி இப்போது முஹம்மது பத்தா அப்பாஸ்-இன் கீழ் இயங்குகின்றது.

எல்லா வரிகளையும் பாலஸ்தீன முஸ்லிம் களிடம் குறிப்பாக இந்தப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களிடம் இஸ்ரேலே நேரடியாக வசூலிக்கும், சில்லரைகளை இந்தப் பாலஸ்தீன அதாரிட்டிக்கு வழங்கும். அதை வைத்துக் கொண்டு அவர்கள் ஜீவிக்க வேண்டும் என்ற நிலை. இஸ்ரேல் விரும்பாதபோது சல்லிக் காசைகூட வழங்காது. இதனால் பாலஸ்தீன அதாரிட்டி எப்போதும் இஸ்ரேலின் தோட்டத்துத் தொழும்பனாகவே வாழ்ந்திட வேண்டிய நிலை.

அத்தோடு நயவஞ்சகத்தையும் செய்திட வேண்டிய நிலை. அதாவது ஏதேனும் பாலஸ்தீன முஸ்லிம்கள் அணி சேர்ந்தால் அதைப் பற்றியத் தகவல்களையும் தந்திட வேண்டிய நிலை. இப்படித்தான் இன்றளவும் நடந்துக் கொண்டிருக்கின்றது.

இஸ்ரேல் இந்த அரபுநாடுகளின் அறியாமை யையும், பாலஸ்தீன அதாரிட்டியின் கையலா கத்தனத்தையும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது.

பாலஸ்தீனின் எல்லா பகுதிகளையும், தன் ஆக்கிரமிப்பின்கீழ் கொண்டுவந்தது.

## டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி

இந்நிலையில்தான் டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி அவர்கள், ஓர் ஆசிரியராக 1977இல் கத்தர் வந்தார்கள்.

அங்கே ஷரீஆவும் - இஸ்லாமிய ஆய்வும் Faculty of Shariya and Islamic Studies என்றொரு கத்தர் பல்கலைக்கழகத்தில் தோற்றுவித்தார். இந்த ஆய்வுக் கலைப் பிரிவின் தலைவராகவு

மானார்.

அங்கே ஊடகங்களின் தேவைகளை எடுத்துரைத்தார். அந்த வகுப்புகளில் கத்தர் நாட்டின் இளவரசர் ஷேஹ் ஹமாத் பின் தாமிர் அல்தானி அவர்களும் கலந்துகொண்டார்கள்.

இருவரும் இயைந்து தொடங்கியதே 'அல் ஜெசீரா' இது நவம்பர்-1,1996 இல் தனது ஒலிபரப்பைத் துவங்கியது.

உடனேயே அலறியது அமெரிக்கா!

அரபு மக்களை அல் ஜெசீரா உண்மைச் செய்திகளால் பாடம் புகட்டுகின்றது. இதனால் அரபுமக்கள்உண்மையைஅறிந்துகொள்வார்கள். நமது இரட்டை வேடம் கலையும்! இஸ்ரேல் அநியாயங்கள் - அப்பாவி பாலஸ்தீனர்கள் மீது அது கட்டவிழ்த்துக்கொண்டிருக்கும் அக்கிர மங்கள் அநியாயங்கள் இவையெல்லாம் வெளிச்சத்திற்கு வரும்.

அரபு மக்கள் நம்மையும் (அமெரிக்கா வையும்) இஸ்ரவேலர்களையும் வெறுப்பார்கள். ஆக, நாம் இதற்குமேலும் அரபு மக்களை ஏமாற்றிட இயலாது என்ற நிலைக்கு வந்தார்கள். உடனேயே அவர்களும் அரபு மொழி தொலைக் காட்சிகளைத் தொடங்கினார்கள்.

ஒரு நியாயமான பத்திரிகை தன்னுடைய நிருபர்களை எல்லாத் தளங்களிலும் நிறுத்தி செய்திகளை சேகரிக்கும். மக்களுக்குத் தரும்.

இதன்படி அல்ஜெசீராவின் நிருபர்கள் இஸ்ரேலின் எல்லா பகுதிகளிலும் நிறுத்தப் பட்டார்கள். இதனால் இஸ்ரேலைப் பற்றிய First Head Information சுட, சுட களத்திலிருந்து உண்மைகள் வெளிவந்தன. அரபுமொழி பேசும் மக்களை வந்தடைந்தது.

இதனால் மெல்ல, மெல்ல மாறியது அரபு மக்களின் மனநிலை.

நெருக்கடி காலங்களிலும் போர்க் காலங் களிலும், இஸ்ரேல் வாங்கும் அடி, இஸ்ரேல் சந்திக்கும் அழிவுகள் இவற்றைப் பற்றி இஸ்ரேல் மறைக்கும் உண்மைகள், இவையெல்லாம் மக்கள் மன்றத்தில் நேரடிப் பதிவுகளாக காட்சிக்குத் தரப்பட்டது.

இஸ்ரேல் செய்யும் படுகொலைகள் அரபு மக்களுக்குத் தெரிந்திட வந்தன. இஸ்ரேல் மறைத்துக் கொண்டிருந்த தோல்விகள் மக்கள் மன்றத்தில் வைக்கப்பட்டன.

யாராலும் வெற்றிகொள்ள முடியாத சக்தி இஸ்ரேல் என்ற பிரம்மை அழிக்கப்பட்டது.

இன்றைக்கு இஸ்ரேலின் அனைத்து கூட்டுப் படுகொலைகளும் உலக மக்கள் அனைவருக்கும் சென்று சேருகின்றன என்றால் அதற்கு அல்ஜெசீரா-வின் பங்கு அலாதியானது. அதன் ஆங்கிலப் பதிவின் தாக்கம் அகிலத்தைத் திருப்பியது.

இன்று உலகில் அதிமாகக் கவனிக்கப்படு கின்ற ஒரு செய்தி நிறுவனம் அல்ஜெசீரா.

ஒரு பத்திரிகைக்குத் தேவையானது நம்பகத் தன்மை. அதை அனைத்துத் தரப்பு மக்களிடமும் பெற்ற ஒரு நிறுவனம் அல்ஜெசீரா செய்தி நிறுவனம்.

அல்ஜெசீரா, காய்தல் உவத்தலின்றி செய்திகளை வெளியிடும் ஒரு செய்தி நிறுவனம். ஆனாலும், அஃதோர் ஜூதைய நிறுவனம் என்றே பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவும், அதன் அடிவருடியான மேலை நாடுகளும், இஸ்ரேலும், அதன் அலுவலகங்களைக் குண்டுபோட்டு அழித்திருக் கின்றன. இன்றளவும் 1400 செய்தியாளர்கள் ஷஹீதாக்கப்பட்டுள்ளனர்.

உண்மையை ஊரறியச் செய்ததே ஒரேக் காரணம். இப்போது நடைபெற்றுக் கொண்டி ருக்கும் காஸா போரில் மட்டும் இதுவரை 175 அல்ஜெசீராவைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அதன் அலுவலகங்கள் பலமுறை சோதனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளன. பல சீல் வைக்கப்பட்டுள்ளன.

அத்தனையும் கடந்து உலக மக்களை, உண்மைச் செய்திகளை கொண்டுசென்று திரட்டிவிட்டது.

இன்று உலகெங்கும் பாலஸ்தீனத்திற்கு விடுதலை பாலஸ்தீன மக்களுக்குத் தனிநாடு, எல்லா நிலைகளிலும் நாங்கள் பாலஸ்தீன மக்களோடு நிற்போம் என்று சனிக்கிழமை தவறாமல் போராட்டங்கள் நடக்கின்றன என்றால் அவை அல்ஜெசீரா உள்ளிட்ட இஸ்லாமிய ஊடகங்கள் சாதனை என்றாலம் அது மிகையல்ல.

இந்த இமாலய சாதனை அதன் நம்பகத் தன்மையிலிருந்து பெறப்படுவதே!

அத்தோடு ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தங்கள் நாட்டு அரசிடம், கூட்டுப்படு கொலைகளைச் செய்யும் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்காதே என்று கோரிக்கையை வைக்கின்றார்கள். அவற்றை செயல்படவும் செய்கின்றார்கள். இஸ்ரேலுக்கு ஆயுதங்களை தயாரித்திடும் ஆலைகளை முற்றுகை இடுகின்றார்கள்.

ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றார்கள்.

சிலபல வேலைகளில் அவற்றை ஏற்றிட இருந்த கப்பல்களை தடுத்திருக்கின்றார்கள்.

இப்படி உலக மக்களை விழிப்படையச் செய்து, வீதிக்கு வந்து பாலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுக்க வைத்திருக்கின்றன என்றால் அவை இஸ்லாமிய ஊடகங்கள் செய்திருக்கும் மிகப்பெரிய சாதனைகள்.

இந்த இஸ்லாமிய ஊடகங்கள் இல்லை யென்றால் இன்று காஸாவிலும், லெபனானிலும் இஸ்ரேலிய ஜியோனிஸ்ட்டுகள் கொலை செய்யப்பட்டிருக்கும். ஐம்பதாயிரம் மக்களைப் பற்றிய செய்திகள் அவர்களது ஜனாசாக்களோடு புதைந்து போயிருக்கும்.

(அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக! சுவர்க்கத்தை வழங்கிடுவானாக)

இவற்றிற்கெல்லாம் மேலாக, மேலை நாட்டு ஊடகங்களின் தகிடுத்தத்தங்களையும், வெளிச்சத்திற்கு கொண்டுவந்திட்டன. இன்றைய இஸ்லாமிய ஊடகங்கள்.

இந்த மேலைநாட்டுச் செய்தி நிறுவனங்கள், உலக மக்கள் எதைப் பார்க்க வேண்டும், எதைக் கேட்க வேண்டும் என்பதைத் தங்கள் கிடுக்கிப் பிடிக்குள் வைத்திருந்தவை.

இப்படி செய்திகளைத் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டு அவற்றில் திரித்தும், மறித்தும், சித்தரித்து, மக்கள் எப்படிச் சிந்திக்க வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டிருந் தார்கள்.

அதன்மூலம், உலக மக்கள் யாரை வெறுக்க வேண்டும், யாரை விரும்ப வேண்டும் வேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயித்துக்





கொண்டிருந்தார்கள்.

இதனை இதழியல் 'New Imperialism' செய்தி ஆதிக்கம் என்பார்கள்.

அதனை உடைத்தெறிந்து உண்மையை மக்களுக்கு எடுத்துச்சொல்லி மக்களை உண்மையின் பக்கம் நிற்க வைத்திருக்கின்றன.

பாலஸ்தீன போராளிகளுக்கு உலகில் இதுவரை கிடைக்காத ஆதரவும் இன்று கிடைத்திருக்கின்றது.

இந்தச் சாதனைகளில் அல்ஜெசீராவும், இதர ஊடகங்களும் என்று நாம் குறிப்பிட்டது.

அல்மஸாதீன்


அல் மனார்

மிட்டில் ஈஸ்ட் மானிட்டர் (அ) மிட்டில் ஈஸ்ட் அப்ரசர் ஆகியவையும் அடங்கும்.

**தமிழில் – வைகறை வெளிச்சம்.**

இவற்றைப் பற்றிய குறிப்புகள் இன்ஷா அல்லாஹ் விரைவில் உங்களை வந்தடையும்.

ஆங்கிலம் : JOHN FEFFER
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




## அறிமுகம்

பாலஸ்தீன பெருநிலத்தில் (காஸாவில்) இன்றளவும் 45,000 அப்பாவி முஸ்லிம்கள், அப்பட்டமான இஸ்ரேலின் குண்டு வீச்சுகளால் இறந்திருக்கின்றார்கள். இவர்களில் 75% விழுக்காடுகள் பெண்களும், குழந்தைகளும். 51,000 குழந்தைகள் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை அவர்களுக்கு கல்விக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை. கல்விக் கூடங்கள் உட்பட எல்லா கட்டடங்களும் இடிக்கப்பட்டுவிட்டன.

இந்தப் படுகொலைகள் அனைத்தும் அமெரிக்காவின் ஆயுதங்களால் நடத்தப்படுபவை.

அப்பாவிகளைக் கொலை செய்யும் குண்டுகளையும், விமானத்தையும், அதற்குச் செலவாகும் பணத்தையும் அமெரிக்காவே தருகின்றது. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி போன்ற நாடுகளும் துணை நிற்கின்றன. இந்தப் படுகொலைகள் தினம் தினம் நடக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகள், செயலற்றவையாக ஆக்கப்பட்டு விட்டன.

இவையெல்லாம் எப்படி நடக்கின்றன? ஏன் நடக்கின்றன? போன்ற பின்னணிகளைப் பெரிதும் புரிந்துகொள்ள உதவுகின்றன இந்தத் தொடர்கள் படியுங்கள்... - MGM

**ஜான் பெஃப்பர் மேலும் கூறுகின்றார்...**

**இஸ்லாத்தை** வெறுப்பவர்கள். அதாவது, (இஸ்லாமோஃபோபிஸ்ட்) ஓர் அணியாக அமர்ந்து அமெரிக்காவின் ஆட்சிப் பீடத்தை ஆட்கொண்டு வருகின்றார்கள்.

இவர்கள்தாம் மேலை நாடுகளை வழி நடத்துபவர்களாக இருக்கின்றார்கள். அதனால் மேலை நாடுகளிலும், ஆட்சியில் அமர்த்தப்படுபவர்கள், இஸ்லாத்தை வெறுப்பவர்களாக இருக்கின்றார்கள்.

இஃதல்லாமல் மேலை நாடுகளிலும் அதாவது ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் அரசு இயந்திரத்தை இயக்குபவர்கள் இஸ்லாத்தை வெறுப்பவர்களாக இருக்கின்றார்கள்.





இந்த இஸ்லாத்தை வெறுப்பவர்கள் அணியில் டொனால்டு ரம்ஸ் ஃபீல்டு, டேவிட் ஹேரோவிச்பில். ரெய்லி, பாமிலாகெல்லர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றார்கள்.

இவர்கள் பல பயிலரங்கங்களை நடத்தி இளைய தலைமுறையினருக்கு இஸ்லாத்தை வெறுக்கக் கற்றுக் கொடுக்கின்றார்கள்.

இவர்கள்தாம், இஸ்லாம், நவீன கம்யூனிசம் என அடிக்கடிப் பீற்றிக் கொள் கின்றார்கள். இவர்கள் கணிப்பில் கம்யூனிசம் ஓர் குறிப்பிட்ட வட்டத்திற்குள் நின்றுவிட் டது. ஆனால், இஸ்லாம் உலகெங்கும் பரவி நிற்கின்றது. இதனால் கம்யூனிசத்தைவிட இஸ்லாம்தான் மிகப்பெரிய எதிரி.

இவர்களின் கணிப்பில் அரபு நாடுகள் எல்லாம் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தாம். அவர்கள் தங்கள் அடிப்படை வாதத்தை மறைத்துவிட்டு தங்களை மிதவாதிகள் போலவும் நவீன வாதிகளைப் போலவும் காட்டிக்கொள்கின்றார்கள்.

இவர்கள் பார்வையில் அரபு நாடுகள் சிரியா, எகிப்து, சவூதி, அரேபியா இவை யெல்லாம் இஸ்லாமியப் பயங்கரவாதி களுடன் கைக்கோர்த்துக்கொண்டு வேலை செய்பவை.

இவர்கள் இப்படிக் கண்ணை மூடிக் கொண்டு முஸ்லிம் நாடுகளைத் தூற்றிடும் போது பல உண்மைகளை மறந்து விடுகின் றார்கள்.

அது இதில் பல நாடுகள் அவற்றை அரபுநாடுகள் என்று வைத்தக்கொண்டாலும் அல்லது முஸ்லிம் நாடுகள் என எடுத்துக் கொண்டாலும் அவை இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரானவை.

இந்த நாடுகள் இஸ்லாமியவாதிகளை சிறைப்பிடித்தும் சித்திரவதைச் செய்தும் கொலை செய்துமிருக்கின்றார்கள். இஸ்லாத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு இஸ்லாத்தையும் அதன் வழிகாட்டு தல்களையும் தங்கள் நாட்டில் வாழும் மக்களிடம் பிரச்சாரம் செய்தவர்களை, அதாவது இஸ்லாமிஸ்டுகளை அப்பட்ட மாகக் கொலை செய்திருக்கின்றன. காரணமே சொல்லாமல் கொலை செய்திருக்கின்றன.

மேலே நாம் குறிப்பிட்ட நாடுகளில் எகிப்து, இஸ்லாமிய அறிஞர்களை மட்டுந் தான் தூக்கிலிட்டது என்றில்லை. மாறாக


vaigarai velicham official

அவர்களைப் பின்பற்றி இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த தொண்டர்களையும், பாமரர்களையும், பெண்களையும்கூட தூக்கிலேப் போட்டது. ஏன் அவர்களின் வாரிசுகளையும் தூக்கிலேப் போட்டது.

மேலே நாம் சுட்டிக்காட்டிய நாடுகள் அதாவது சிரியா - எகிப்து - சவூதி அரேபியா - ஜோர்டான் - ஐக்கிய அமீரகம் - இவை யெல்லாம் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள், அதன் அரசியல் கொள்கை, இவற்றிற்கு அந்நியமானவை. இவை இஸ்லாத்தின் கட்டுக்கோப்புகளுக்கு அப்பால் நின்று தங்கள் மன்னராட்சியையும், தங்கள் வம்சா வழி ஆட்சியையும் தக்க வைத்துக்கொண்டி ருப்பவை. இஸ்லாத்தின் அடிப்படையில் சிந்திப்பவர்கள், தங்கள் மன்னராட்சிக்கும் வம்சாவழி ஆட்சிக்கும் வேட்டு வைப் பவர்கள் என எண்ணுகின்றவை. அதனால் அவர்களை முளையிலேயே கெல்லி எறிந்திட வேண்டும் என சிந்திப்பவை. சதா சர்வகாலமும் தங்கள் மக்களை துருவி, துருவி வேவுபார்த்துக் கொண்டிப்பவை.

இஸ்லாமிய வாதிகளை வேரறுக்க இந்த ஆட்சியாளர்கள் யாரோடு வேண்டுமானாலும் கைக்கோர்ப்பார்கள். இதனால் அமெரிக் காவின் தலைமையிலான மேலைநாடுகளுக்கு அடிமைகளாக வாழ்பவர்கள். இஸ்லாத்தின் எதிரிகளான மேலை நாட்டவர்களின் கண் அசைப்பைத் தங்கள் தலைமேல் இட்ட ஆணையாக ஏற்றுச் செயல்படுத்துபவர்கள்.

இந்த யதார்த்தங்களையெல்லாம் மறந்துவிட்டு நாம் மேலே குறிப்பிட்டுக் காட்டிய இஸ்லாமோ ஃபோபிஸ்ட்டுகள், இஸ்லாத்தை வெறுப்பவர்கள், எல்லோ ரையும் ஒரே கண்கொண்டு பார்க்கின்றார்கள். என்னே அறிவீனம்!

இவர்களின் பார்வையில், தாலிபான் களுக்கும், ஈரானுக்கும் இடையே உள்ள நேர் எதிரான கருத்துக்கள் கூடவில்லை.

சகோதரர்களுக்கெதிராக அதாவது நித்தம் நித்தம் ஜியோனிஸ்ட்டுகளின் கைகளில் மரணத்தைச் சந்திக்கும் பாலஸ்தீனர்களுக்கு எதிராக நிற்கும் ஜோர்டானை இவர்கள் கண்டுகொள்ளவே இல்லை. இன்னும் ஒருபடி மேலே போய் இந்த ஜோர்டான், இஸ்ரேலோடு கைக்கோர்த்துக் கொண்டு, பாலஸ்தீன முஸ்லிம்களை கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும் உட்படுத்துவதை இவர்கள் கண்டுகொள்ளவே இல்லை.


அதேபோல் ஈராக்-ஐ சன்னி முஸ்லிம் களுக்கும், ஷியா முஸ்லிம்களுக்குமிடையே







உள்ள வேறுபாட்டை இவர்கள் கண்டு கொள்ளவில்லை. இந்த வேறுபாட்டை ஊதி பெரியதாக்கி, இருதரப்பாருக்கும் ஆயுதங்களை அள்ளி வழங்கி, அமெரிக் காவும் அதின் எடுபிடிக்கும் குவித்த முஸ்லிம் களின் பிணங்களுக்கு அளவே இல்லை.




இந்த கபளீகரமும், இவர்களின் சூழ்ச்சி களும் இந்த இஸ்லாமிய வெறுப்பாளர்களின் கண்களுக்குத் தெரியவில்லை. இதனிடையே "குருது" இனவாதத்தை வளர்த்து அவர்களை யும் பல அணிகளாகப் பிரித்து இவர்கள் - அதாவது இந்த இஸ்லாமிய வெறுப்பாளர்கள் போட்ட ஆட்டங்களுக்கு அளவே இல்லை.

இதையும் இஸ்லாத்தை வெறுப்பவர்கள் கண்டுகொள்ளவில்லை. எல்லோரையும் - எல்லா முஸ்லிம் நாடுகளையும் ஒன்றாக மூட்டைக்கட்டி இஸ்லாமிய அடிப்படை வாதிகள் எனக்காட்டுகின்றனர். அதன்வழி வெறுப்பையும், எதிர்ப்பையும் காட்டு கின்றனர்.

இவர்கள் கம்யூனிசத்தை வெறுத்தக் காலங்களில், கம்யூனிச பழமைவாதி அல்லது அடிப்படை வாதி லியோனிட் பிர்ஷ்னேவ்வுக்கும், கம்யூனிசத்தை புனர மைத்த மிக்கேல் கோர்பசவ்வுக்கும் இடையே உள்ள வேற்றுமையைக் கண்டுகொள்ள வில்லை.

அதேபோல்தான் இஸ்லாமிய உலகுக் கெதிராகவும் நடந்துகொள்கின்றார்கள். இவர்களின் வலதுசாரி தீவிரவாதம் அலாதியானது.

**- இன்ஷாஅல்லாஹ் தொடரும்.**

# இந்திய முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்.!

- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

**எல்லா** சமூகங்களுக்கும் அதன் இருப்பை நிலை பெறச் செய்வதற்கான, அதன் திறமைகளை பயன்படுத்தி, மறைமுகமான ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான அதனை விழிப்பு நிலையில் இருக்கத் தூண்டும் பல்வேறு பிரச்சனைகளும் சோதனைகளும் நிச்சயம் இருக்கும்.

சவால்களை சந்திக்காத சமூகம் முன்னேற்றத்திற்கான தூண்டுதல்களை இழக்கின்றன. அந்த சமூகம் தன்னம்பிக்கையை இழந்து தேக்க நிலையை அடைந்து கோழைச் சமூகமாக உருவெடுக்கின்றன.

இந்திய இஸ்லாமிய சமூகம் சந்திக்கும் நிறைய பிரச்சனைகள் உள்ளன. அதனை தீர்க்கவும் சமாளிக்கவும் முயற்சி செய்கிறது. பிரச்சனைகளின் காரணம் சில பொழுது அவர்களது தவறுகள், இன்னும் சில கடந்த காலத்தின் தோல்வியினால் ஏற்பட்டவை, இன்னும் சில, பிற்போக்கு சிந்தனை மற்றும் அரசியல் சார்ந்த பின்னடைவினால் ஏற்பட்டவை. இன்னும் சில கடந்த காலத்தில் இந்திய நாட்டில் நிகழ்ந்த நிகழ்வுகளினால் ஏற்பட்டவை.

இவ்வனைத்து பிரச்சினைகளும் தற்காலிகமானவை என்பதில் சந்தேகமில்லை. ஒருக்கால் இந்திய இஸ்லாமிய சமூகம் பொறுமையை, சகிப்புத்தன்மையை நிரூபித்து விவேகத்துடனும், நிதானத்துடனும் இந்தப் பிரச்சினைகளை கையாண்டு விவேகமான, சமநிலையான, துணிச்சல் மிகுந்த நல்ல அனுபவம் கொண்ட வழிகாட்டப்பட்ட தலைமைத்துவம் கிடைத்தால் நிச்சயம் அவை தீர்க்கப்படும்.



இங்கே முஸ்லிம் சமூகத்தின் சில பிரச்சினைகளை மட்டும் கூறுகிறோம்:

நிச்சயமாக இந்திய இஸ்லாமிய சமூகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சனை இஸ்லாமிய அழைப்பு பணியின் பிரச்சனைகள். இஸ்லாமிய மார்க்கம் ஒரு பிரச்சார மார்க்கம் என்பது அனைவரும் அறிந்ததே. இஸ்லாம் வளர்ந்து பரவியதற்குமான முக்கிய காரணம் அழைப்பு பணிதான். குறிப்பாக இந்தியாவில் மிகச்சிறந்த இஸ்லாமிய அழைப்பாளர்கள், சூஃபியாக்கள், மஷாயிகுகள் மூலமும் இன்னும் வியாபாரம் மூலமும் இஸ்லாத்தை ஏற்றவர்களது எண்ணிக்கை என்பது மிகவும் அதிகம்.

இஸ்லாமிய பாரம்பரியத்தைக் கொண்ட நாடுகளான அரபு தீபகற்பம், ஈரான், துருக்கி போன்ற நாடுகளிலிருந்து இந்தியா வந்தடைந்தவர்களது எண்ணிக்கையும் கணிசமாக உள்ளது. இவ்வாறாக இஸ்லாமிய மார்க்க பிரச்சாரம் என்பது இஸ்லாமிய மார்க்கம் என்னும் உடலுக்கு புதிய ரத்தத்தை எல்லா காலத்திலும் பாய்ச்சிக்கொண்டே உள்ளது.

இந்த இஸ்லாமிய அழைப்பு பணியின் மூலமாக இந்திய இஸ்லாமிய சமூகத்திற்கு பிற்காலத்தில் பல்வேறு மகத்தான சேவைகள் செய்த பல புதிய ஆளுமைகள் கிடைக்கப் பெற்றார்கள்.

இதனால் பாரம்பரியமிக்க உயர்ந்த குலத்தைச் சேர்ந்த குடும்பங்கள் இஸ்லாமிய குடும்பங்களோடு இணைந்துகொண்டே இருந்தன.

இந்து வம்சாவளி குடும்பத்தோடு நெருக்க மாக அல்லது தொலைவாக இணையக்கூடிய பல்வேறு இந்திய இஸ்லாமிய ஆளுமைகளை நம்மால் கூற இயலும். மௌலானா உபைதுல்லாஹ் பட்யாலவி (ரஹ்) (துஹ்ஃபதுல் ஹிந்த என்னும் நூலின் ஆசிரியர்), மௌலானா உபைதுல்லாஹ் ஸிந்தி (ரஹ்), அல்லமா முஹம்மத் இக்பால்(ரஹ்), ஷைகு ஸனா உல்லாஹ் அம்ரித்சாரி (ரஹ்), மௌலானா அஹ்மத் அலி லாஹுரி(ரஹ்) மௌலானா முஈனுத்தீன் அஜ்மீரி (ரஹ்).

இவர்கள் அனைவரும் இந்திய இஸ்லாமிய சமூகத்தின் மிக மூத்த ஆளுமைகள். ஆனால் இவர்கள் இந்து பாரம்பரியத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்ற குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்பதே முஸ்லிம்களில் சிலருக்கு தான் தெரியும்.

இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி வீழ்ச்சி அடைந்து கொண்டிருந்த தருணத்திலும், ஏன் ஆங்கிலேய ஆட்சியின் இறுதி வரைக்கும் இஸ்லாமிய பிரச்சாரப் பணி மிக வீரியத்தோடு தொடர்ந்து கொண்டிருந்தது. இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பியல்புகளான பகுத்தறிவு, தூய்மையான ஓர் இறை கோட்பாடு, சமத்துவம், சமூக நீதி, ஆகியவற்றின் காரணமாகவும் சாதி அடிப்படையிலான பாகுபாடு, தீண்டாமை இல்லாததன் காரணத்தாலும் வருடம் தோறும் மிகப்பெரிய எண்ணிக்கையில் இஸ்லாத்தை விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்.

இறைவனின் திருமறையும், நபி வழியும் இஸ்லாத்தின் இன்ன பிற போதனைகளும் புதிய இதயங்களை ஈர்த்தது. அவர்களது சிந்தனைகளை ஆட்கொண்டது. எந்த அளவிற்கு என்றால் ஒரு கால் இந்த இஸ்லாமிய பிரச்சாரப் பணி எந்தவொரு தடையும் இல்லாமல் தொடர்ந்து இருந்தால் இந்திய தீபகற்பத்தில் வலுவான மார்க்கமாக, பிறகு ஆசியா கண்டத்திலே இஸ்லாமிய மார்க்கமே மிகப்பெரிய மார்க்கமாக உருவாகியிருக்கும்.

முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் மத்தியில் கடுமையான அரசியல் பிரச்சினைகள் எழுந்தன. இறுதி காலத்தில் அது இன்னும் கடுமையானது. இரு தரப்பினரது இதயங்களும் வெறுப்பு, விரோதம், சந்தேகங்கள் ஆகியவற்றால் நிரம்பியது. கருத்து வேறுபாடுகளும் தொடர்ந்து விரிவடைந்து கொண்டே சென்றன. இதன் விளைவாக இரண்டு பிரிவுகளாக பிரிந்து, இதுவே இந்திய பிரிவினைக்கு வழி வகுத்தது. இரண்டு குடியரசுகள் உருவானது. ஒன்று இந்திய குடியரசு மற்றொன்று பாகிஸ்தான் குடியரசு இந்த விஷயத்தில் எது சரி என்று நாம் இங்கு தீர்ப்பளிக்கவில்லை.

நடந்ததை தவிர்க்க முடிந்ததா? வேறு ஏதாவது சிறந்த வழி இருந்ததா? இது நடைமுறையில் வெற்றி கண்டதா? இந்த கேள்விகளை வரலாற்றை சுதந்திரமாக, நீதமாக சார்பற்று எழுதக்கூடிய வரலாற்று ஆசிரியரிடம் விட்டு விடுவோம். இங்கே நாம் கவலைப்படும் விஷயம் என்னவென்றால் இந்தப் பிரிவினையின் விளைவாக இந்திய அரசியல் சூழல் எந்த நிலைக்கு தள்ளப்பட்டது அல்லது இந்தியா விரும்பியோ அல்லது நிர்பந்தத்தின் பேரிலோ இந்த சூழலுக்கு தள்ளப்பட்டது. இருதரப்பும் இரு தரப்பின் மதம், நம்பிக்கை, கலாச்சாரம், பண்பாடு தொடர்புடைய அனைத்தையும் சந்தேகத்துடன் வெறுப்புடன் அணுகினார்கள்.

இதுவே இஸ்லாமிய மார்க்கம் பரவுவதற்கான பிரச்சார பாதையின் மிகப்பெரிய தடைகல்லாக மாறியது.

இஸ்லாமியர்கள் என்பவர்கள் எப்போதும் பிற சமூகத்தோடு சண்டைகள், கலவரங்கள் மேற்கொள்ளக் கூடியவர்கள் என்று இஸ்லாமியர்களை குறித்து பொதுவான அபிப்பிராயம் உருவானது.

இதனால் பிறப்பால் முஸ்லிம்களாக இருந்தவரிடத்திலும், இந்துக்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகளில் வாழும் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து இஸ்லாத்தை ஏற்றவர்களிடத்திலும் ஒருவகையான பீதியும் அச்சமும் உருவானது. எந்த அளவிற்கு என்றால் சில முஸ்லிம் தலைவர்கள் இஸ்லாமிய பிரச்சாரத்தை


vaigarai velicham official

நிறுத்தி விடலாம், முஸ்லிம்களிடையே பிறப்பு விகிதாச்சாரத்தை குறைத்து விடலாம் என்றெல்லாம் சிந்தித்தார்கள்.

இதற்கு மத்தியில் இஸ்லாமிய அரசு என்று கூறிக் கொள்ளக்கூடிய முஸ்லிம் நாடுகள் துரதிஷ்டவசமாக பண்பாட்டிலும், ஒழுக்கத்திலும், அரசியலிலும் இஸ்லாத்தின் மீதான அவர்களது நம்பிக்கையை உறுதியாக வெளிப்படுத்தும் வகையில் அதன் மேன்மையை ஊக்குவிக்கும் வகையில் இவை எவற்றிலும் இஸ்லாத்தை பிரதிபலிக்கவில்லை.

இதற்கு மேலதிகமாக பாகிஸ்தானின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தின் சூழ்நிலைகள், இதுபோன்ற அடிப்படையில் எழுப்பப்படும் நாடுகள் தோல்வியைத்தான் தழுவும் என்பதை சந்தேகித்துக் கொண்டிருந்தவர்களுடைய சந்தேகத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் இருந்தது. சில சமயம் சாதாரணமாக ஒரு முஸ்லிம் செய்தித் தாள்களின் மூலம் பாகிஸ்தானின் நிலவரங்களை அறிகிறார். இஸ்லாமை குறித்து இவர் புரிந்ததற்கு முரணாக பாகிஸ்தானின் நிலவரங்கள் இருக்கின்றதால் அதிர்ச்சி அடைகிறார்.

இந்திய முஸ்லிம்களின் பிரச்சினைகளில் ஒரு பிரச்சினை இது. ஆனால் காலங்கள் கடந்த பிறகு இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் மத்தியிலான உறவு மேம்பட்டிருக்கிறது.

உணர்வுகளை அறிவு மிகைத்தால் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணலாம்.

இந்திய முஸ்லிம்கள் இஸ்லாமிய அழைப்புப் பணியை அரசியலுக்காக, பெருமைக்காக மேற்கொள்ளாமல், மாறாக மக்களுக்கு நேர்வழி காட்ட வேண்டும், மக்களுக்கு இஸ்லாமிய மார்க்கத்தை எடுத்துச்சொல்ல வேண்டும், இம்மை மற்றும் மறுமையின் எல்லா பேராபத்துகளிலிருந்து அகிலத்தார்களை பாதுகாக்க வேண்டும் என்ற கலப்பற்ற தூய எண்ணத்தோடு இஸ்லாமிய அழைப்பு பணியை மேற்கொண்டால் மீண்டும் இஸ்லாம் புத்துணர்வோடு தனது வீரிய பயணத்தை துவங்கும்.

காலம் மாறியது இஸ்லாமிய மார்க்கத்தை விளக்கி புத்தகங்கள் எழுதப்பட்டன. இந்தி மொழியிலும் இன்னும் இந்தியாவின் பல்வேறு பிராந்திய மொழிகளில் நபி (ஸல்) அவர்களது வரலாறு தற்காலத்திற்கு ஏற்ப உள்ளத்தை ஈர்க்கும் வகையில் எழுதப்பட்டது. இந்திய சமூகத்தில் முஸ்லிம்கள் மீண்டும் தங்களது மார்க்க பிரச்சாரத்தை துவக்கினார்கள்.

**முஸ்லிம் தனியார் சட்டம் :**

இது இரண்டாவது பிரச்சினை மிகவும் ஆபத்தானது. அதாவது முதலாவது பிரச்சினை இஸ்லாத்தை பரப்புவதில் தடை ஏற்படுத்தப்பட்டது. இரண்டாவது பிரச்சினை என்பது முஸ்லிம்களது மார்க்கம், கலாச்சாரம், நம்பிக்கைகளை நிலைநிறுத்துவதில் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டது.

இஸ்லாமிய தனியார் சட்டம் என்பது தலாக், நிக்காஹ், சொத்துரிமை இன்னும் இது போன்ற பல மார்க்க விவகாரங்களை உள்ளடக்கியது.

இவையனைத்தும் இஸ்லாமிய தனியார் சட்டப்படி தீர்க்கப்படும். ஆனால் இதனை தடுக்க வேண்டும் அனைவருக்கும் ஒரு பொதுவான சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்று அவ்வப்போது குரல்கள் எழுந்துகொண்டே இருக்கிறது.

ஆனால் இந்திய அரசு முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. முஸ்லிம்களாக இந்த மாற்றத்தை அரசிடம் கோராத வரை இது மாற்றப்படாது என்பதனை அரசு உறுதியும் படுத்தியது.

ஆனால் இந்திய உச்ச நீதிமன்றம் ஷஅபான் வழக்கு மற்றும் முஹம்மது அஹமது வழக்கில் வழங்கிய தீர்ப்புக்குப் பிறகு சூழல் அபாயமாக மாறியது.

இந்தத் தீர்ப்பில் இந்திய சிவில் சட்டத்தின் 125வது பிரிவின் சட்டப்படி - மனைவிக்கும் விவாகரத்து செய்யப்பட்ட மனைவிக்கும் செலவு செய்வதில் வித்தியாசம் இன்றி பிரித்துப் பார்க்காமல் - விவாகரத்து பெற்ற கணவரிடமிருந்து அவள் இறக்கும் வரை அல்லது மற்றொரு திருமணம் முடிக்கும் வரை கணவன் ஜீவானாம்சம் கொடுக்க வேண்டும்.

குர்ஆனில் உள்ள "அல் மதாஃஅ்" (المتاع) என்ற வார்த்தைக்கு தவறான விளக்கம் கொடுத்து இந்த தீர்ப்பு குர்ஆனின் சட்டத்திற்கு எதிரானது அல்ல என்றும் விவாதித்தார்கள். இதற்கு ஒருபடி மேலாக உச்ச நீதிமன்றம்

முஸ்லிம் தனியார் சட்டத்தை திருத்துவதற்கு முயற்சி செய்தது, முன்மொழிந்தது. இந்திய சட்டத்தின் 44வது பிரிவின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் முழுமையான பொதுவான பொது சிவில் சட்டம் தேவை என்பதையும் கூறியது.

ஆனால் இந்திய அரசு முஸ்லிம்களாக முஸ்லிம் தனியார் சட்டம் மாற்றி பொது சிவில் சட்டம் வேண்டும் என்று கூறாத வரை கோரிக்கை விடுக்காத வரை முஸ்லிம் தனியார் சட்டம் தொடரும் என்று திட்டவட்டமாக கூறியது.

ஆனால் இதேநேரத்தில் சில அரசு அதிகாரிகள், இஸ்லாமிய எதிர்ப்பு பிரிவுகள் இஸ்லாமிய எழுச்சி குறித்து விழிப்புணர்வு இல்லாத முஸ்லிம்களை பலிகடாவாக்கி முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றம் வேண்டும் என்று கோரிக்கை விடுக்குமாறு தூண்டினார்கள். ஆனால் முஸ்லிம்கள் எப்போதும் இதுபோன்ற முயற்சிகளை தோற்கடித்துக் கொண்டே வருகின்றார்கள்.

முஸ்லிம் தனியார் சட்டம் என்பது முஸ்லிம்கள் தங்களது மார்க்கத்தின் சாயலில் வாழ்வதற்கான ஒரே உத்தரவாதம். ஏற்கனவே நவீன கல்வி, பெருபான்மை கலாச்சாரம் முஸ்லிம்களது பெரும்பாலான தனித்துவத்தை இழக்க செய்துவிட்டது. குர்ஆன் சுன்னா கூறப்பட்ட தலாக், நிக்காஹ், சொத்துரிமை போன்ற சில சட்டங்கள் மட்டுமே முஸ்லிம்களை பிற மக்களிலிருந்து பிரித்துக் காட்டுகிறது. இந்த நிலை மாற்றப்பட்டு மதச்சார்பற்ற பொது சிவில் சட்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டால் முஸ்லிம்களை பிறரை விட்டும் தனித்துவப்படுத்தி காண்பிக்கும் அனைத்தையும் இழந்து விடுவார்கள்.

அதற்குப் பிறகு வழிபாடுகளில் நம்பிக்கை களில் என அனைத்திலும் படிப்படியாக நுழைவார்கள். தங்களது மதத்திற்கு ஏற்றார் போல இஸ்லாத்தில் அனைத்தையும் மாற்ற முயற்சி செய்வார்கள். பிறகு அனைவரும் ஒரே பெயரை வைக்க வேண்டும் என கம்யூனிச நாடுகளாக மாற்றப்பட்ட நாடுகளில் முஸ்லிம் களுக்கு ஏற்பட்ட நிலைமை உருவாகும்.

இந்திய அரசாங்கம் மதரீதியான விவகாரங் களில் தலையிட மாட்டோம் என்பதனை உறுதி செய்தாலும் முஸ்லிம்களது கவலைகள் நியாயமானவைதான். இந்து பாசிச பிரிவுகள் முஸ்லிம்களைதாய் மதம் திருப்ப வேண்டும் என்ற தங்களது சதித்திட்டத்தை மறைக்கவில்லை. அவ்வப்போது பொதுகூட்டங்களிலும், செய்தி தாள்களிலும் இந்த அறை கூவல்கள் விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதிலேயே மற்றொரு பிரிவு பழங்காலத்து மஸ்ஜிதுகள் அனைத்தும் கோயில்களாக மாற்ற வேண்டும். அவர்களது வாதம் என்னவென்றால் முஸ்லிம்களது ஆட்சியில் முஸ்லிம் மன்னர்கள் கோயில்களை இடித்து மஸ்ஜிதுகளாக மாற்றி விட்டார்கள். இதனால் மஸ்ஜிதுகளாக மாற்றப்பட்ட கோயில்களை மீட்க வேண்டும்.

இந்த நேரத்தில் இந்த இயக்கங்களை ஆதரிக்கவில்லை என்று முஸ்லிம்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அரசு இத்தகைய கோரிக்கைகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது ஒரு புறம் இருக்க அரசு அதிகாரிகள் புதிய மஸ்ஜித்கள் கட்டுவதற்கு பல கட்டுப்பாடுகளையும் விதித்தனர்.

இந்த அச்சுறுத்தல்களை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு (ஷஅபான் வழக்கு) புதுப்பித்தது எனலாம். முஸ்லிம்கள் அனைவரும் ஒரே அணியில் நின்று இந்த தீர்ப்பை எதிர்த்தனர் அரசியல் சட்டத்தில் திருத்தம் வேண்டும் எனவும், இஸ்லாமிய தனியார் சட்டத்திற்கு அதிலிருந்து வெளிப்படையாக விதிவிலக்கு அளிக்க வேண்டும், உச்ச நீதிமன்றம் இந்த தீர்ப்பை செல்லாததாக்கும் சட்டத்தை இயற்ற வேண்டும், தனியார் சட்டத்தில் அரசாங்கம் தலையிடுவதற்கான அனைத்து வாயில்களும் அடைக்கப்பட வேண்டும், மத ரீதியான அனைத்து விவகாரங்களில் அரசியல் சட்டம் உள் நுழையாமல் இருப்பதையும், மத விவகாரங்களை நீதிபதிகளின் தன்னிச்சையான விளக்கத்திலிருந்து பாதுகாப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

ஒட்டுமொத்த இந்தியாவில் இஸ்லாமிய தனியார் சட்டத்தை பாதுகாக்க முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் 1972ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் முதல் தலைவராக அஷ்ஷைகு முஹம்மத் தய்யிப் (தாருல் உலூம் தியோபந்த் முன்னாள் தலைவர்) தேர்வு செய்யப் பட்டார். இதன் தற்போதைய தலைவராக


vaigarai velicham official

இந்த நூலின் (மௌலானா அபுல்ஹஸன் அலீ நத்வீ) ஆசிரியர் உள்ளார்.

தனியார் சட்டங்களை மாற்றும் முயற்சிகளை எதிர்கொள்வதிலும் வக்ஃபு சட்டம், தத்தெடுப்பு சட்டம் விவாகரத்து பெற்றவர்களுக்கு ஜீவனாம்சம் போன்ற விவகாரங்களில் இஸ்லாமிய சட்டங்களுக்கு முரண்படும் சட்டங்களுக்கு எதிராக போராடியதிலும் இந்த முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பு உண்டு.

ஷைகு தைய்யிப் ஸாஹிப் அவர்களது மரணத்திற்குப் பிறகு இந்த வாரியத்தின் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். இந்த காலகட்டத்தில் முக்கியமான பிரச்சனை எழுந்தது. பிரதமரோடு தனிப்பட்ட முறையில் உரையாடிய பிறகும், முஸ்லிம் தனியார் சட்டத்தை பாதுகாப்பதற்கு எவ்வளவு பெரிய தியாகத்தையும் மேற்கொள்வோம் என்பதை மாபெரும் கூட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் பங்கேற்று, அதில் பங்கேற்ற முஸ்லிம்களிடம் பெறப்பட்ட எதிர்ப்பு கையெழுத்திற்கு பிறகு அரசாங்கம் முஸ்லிம்களது கோரிக்கைக்கு அடிபணிந்தது. நாட்டின் பெரும்பான்மையினரின் எதிர்ப்பையும் மீறி, அரசியல் சட்டத்தில் சிறிய மாற்றத்தை கொண்டு வந்தால் கடுமையான எதிர்ப்பு இருக்கும் நாட்டில் பெண்கள் உரிமைகள் பற்றிய வரைவுச் சட்டத்தை ஏற்றுக் கொண்டது.

இந்தப் புயல் போன்ற பிரச்சனை இந்த சட்ட மாற்றத்திற்கு பிறகு சற்று ஓய்ந்தது. ஆனாலும் அனைவருக்கும் பொதுவான பொது சிவில் சட்டம் என்ற கோரிக்கை குரல்கள் எழுந்து கொண்டேதான் இருக்கிறது. முஸ்லிம்களும் அவர்களது சதித்திட்டத்தை தவிடு பொடியாக்கி கொண்டே இருக்கிறார்கள்.

தொடரும்...

இப்பொழுது பரபரப்பான விற்பனையில்







நூலைப் பெற்றிட : 8148129887, 74012 13394

# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

தொடர்...



செப்டம்பர் மாத தொடர்ச்சி....

### 1922 - அக்ஸா மஸ்ஜித் - இந்திய முஸ்லிம்கள்!

**பாலஸ்தீனில்** யூதர்களுக்கான ஒரு நாட்டை அமைத்துத் தந்திட வேண்டும் என விரும்பிய ஆங்கிலேயர்களும், ஐரோப்பிய நாடுகளும் பாலஸ்தீனில் உள்ள இஸ்லாமிய அடையாளங்களை அழித்திடுவதில் மிகவும் கவனமாக இருந்தார்கள்.

பாலஸ்தீன் மக்கள் போராடும் போதெல் லாம் அந்தப் போராட்டங்களை அடக்கு வதைப்போல் அல்-அக்ஸா மஸ்ஜித்-ஐ சேதப் படுத்தினார்கள்.

1917, 1920 ஆகிய ஆண்டுகளில் நடந்த போராட்டங்கள் பொதுவான வேலை நிறுத்தம் இவற்றின்போதும் இந்த சதியை நிறைவேற்றினார்கள். மஸ்ஜிதுல் அக்ஸாவிலும் சில சேதங்களை ஏற்படுத்தினார்கள்.

1920களில் அந்தப் புனிதப் பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டு 1280 ஆண்டுகள் அதாவது ஏறத்தாழ 1300 ஆண்டுகள் ஆகி இருந்தன. இதனால் பாலஸ்தீன் மக்கள் அந்தப் பள்ளி வாசலை புதுப்பிக்க விரும்பினார்கள். அவர்களோ ஏழைகளாகவும் நிலையான வாழ்க்கையோ, வாழ்வாதாரமோ இல்லாதவர் களாகவும் இருந்தார்கள். இதனால் இதற்கான நிதியை உலக முஸ்லிம்களிடமிருந்து திரட்டு வது என முடிவு செய்தார்கள்.

1922இல் ஹஜ்ஜுக்கு வந்த பாலஸ்தீன முஸ்லிம்கள் அங்கே வந்து குழுமிய ஹாஜி களிடம் இதற்கான விண்ணப்பத்தை முன் வைத்தார்கள். ஹாஜி அமீன் அல் ஹுஸைன் தான் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

உலக முஸ்லிம்கள் இதற்காக (Muslim Supreme Council) உலக முஸ்லிம்களின் உச்சபட்ச குழு ஒன்றை ஏற்பாடு செய்தார்கள்.



vaigarai velicham official

செய்தியை அறிந்த இந்திய முஸ்லிம்கள் அந்த உச்சபட்சக் குழுவை இந்தியா வரும்படி அழைத்தார்கள். இந்திய முஸ்லிம்கள் இதற்கான பணத்தைத் தருவார்கள் என்றும் தேவையானால் பைத்துல் முகத்திஸிலுள்ள முஸ்லிம்களின் முதல் கிப்லாவைப் பராமரிப்பதற்கான, முழு செலவையும் இந்திய முஸ்லிம்களே ஏற்றுக் கொள்வார்கள் என்றும் அறிவித்தார்கள்.

1923ஆம் ஆண்டு ஷேஹ் முஹம்மத் முறாத் அவர்களின் தலைமையில் பாலஸ்தீன முஸ்லிம் களின் பிரதிநிதிகள் குழு ஒன்று இந்தியா நோக்கி வந்தது.

அப்போது ஆங்கிலேயே அரசின் கீழ் தான் மொத்த பாலஸ்தீனும் இருந்தது. பாலஸ்தீன முஸ்லிம்கள் ஆங்கிலேயே அரசை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார்கள். இங்கே இந்தியாவிலும் முஸ்லிம்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

தங்களுடைய பொது எதிரிகள் ஒன்றாய்ச் சேர்ந்து ஆங்கிலேய ஆதிக்கத்தை இரண்டு நிலங்களிலிருந்தும் துடைத்தெறிந்திட திட்டங் களைத் தீட்டி விடுவார்களோ என அஞ்சி னார்கள் ஆங்கிலேயர்கள்.

இதனால் பாலஸ்தீன் முஸ்லிம்களின் பிரதி நிதிகள் குழு இந்தியா வந்திடக்கூடாது என தடைகளைப் போட்டார்கள் ஆங்கிலேயர்கள்.

உடனேயே இந்திய முஸ்லிம்கள் இந்தியா விலும், பாலஸ்தீன் முஸ்லிம்கள் பாலஸ்தீனிலும் கடுமையாக ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த் தார்கள். ஆடிபோயிற்று ஆங்கில ஏகாதிபத் தியம். வேறுவழியின்றி சமரசப் பேச்சுகளுக்கு வந்தார்கள் ஆங்கிலேயர்கள்.

அப்போது பாலஸ்தீனில் ஆங்கில அதிகாரி யாக ஹெர்பர்ட் சாமுவேல் என்பவர்தான் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் இந்தியா வரவிருந்த பாலஸ்தீன் முஸ்லிம்களின் பிரதிநிதி களை அழைத்து உங்களை இந்தியா சென்றிட அனுமதிக்கின்றேன். ஆனால் நீங்கள், நாங்கள் விதிக்கும் சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்றார்.

அந்த நிபந்தனைகளில் முக்கியமானவை. நீங்கள் இந்தியாவின் அரசியலிலோ, இந்தியா முஸ்லிம்கள் பாலஸ்தீன அரசியலிலோ தலை யிடக் கூடாது. இந்தியாவில் நீங்கள் நிதி மட்டுந்தான் வசூலிக்க வேண்டும் என்பவையே!

அதேபோல் பிரிதொரு நிபந்தனை. அந்த நிபந்தனை பாலஸ்தீன முஸ்லிம்களின் பிரநிதிகள் இந்தியாவிலிருக்கும் போது இந்தியாவிலிருக்கும் ஆங்கில அரசுக்கு எந்த நெருக்கடிகளையும் தந்திடக் கூடாது.

இந்த நிபந்தனைகளை பாலஸ்தீன் முஸ்லிம்கள் ஒத்துக்கொண்டால் அந்த ஒப்புதலை லண்டன் அனுப்பி இங்கிலாந்து ராணியின் ஒப்புதலைப் பெற்று அதன்பின் பாலஸ்தீன் முஸ்லிம்களின் பிரநிதிகளை இந்தியா அனுப்புவதாகக் கூறினான் பாலஸ்தீனி லுள்ள ஆங்கிலேயே அதிகாரி ஹெர்பர்ட் சாமுவேல்.

ஆனால் பாலஸ்தீன முஸ்லிம்களின் பிரநிதிகள் ஆங்கிலேயே அரசியின் அனுமதிக்குக் காத்திருக் காமல், இந்தியாவை நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள்.

அனுமதி இல்லாமல், இந்தியா நோக்கிப் பயணம் செய்பவர்களை இந்திய முஸ்லிம்கள் வரவேற்றிடக் கூடாது என தடைவிதிக்க பணித் தான் லண்டனிலிருந்து ஆங்கில ஏகாதிபத்தி யத்தின் சார்பில் இந்திய விவகாரங்களை இயக்கிக் கொண்டிருந்த (Wokely) வேக்லி என்ற அதிகாரி.

ஆனால் அப்போது இந்தியாவிலிருந்த வைசிராய், இந்திய முஸ்லிம்களால் நாங்கள் சொல்லொண்ணா இன்னல்களையும் இடுக் கண்களையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இன்னொரு தொல்லை இப்போது வேண்டாம்.

ஆகவே "நாங்கள் பாலஸ்தீனிலிருந்து வரும் முஸ்லிம்களின் பிரதிநிதிகளுக்கும் இந்தியாவில் அவர்களை வரவேற்க தயாராக இருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நிற்பதில்லை என முடிவு செய்துவிட்டோம்" எனக் கூறிவிட்டார். (ஆதாரம்: வைசிராய் அவர்கள் 13 அக்டோபர் 1923 இல் எழுதிய கடிதம்)

(Also: Arif Al.Arif. The Commerical Press, Jerusalem 1951 Ppge 86)

1923ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் நாள் ஜமால் அல் ஹூஸைனி அவர்களின் தலைமை யிலான பாலஸ்தீன முஸ்லிம்களின் குழு இந்தியா வந்தது. பம்பாய் துறைமுகத்தில் இந்திய முஸ்லிம்கள் அவர்களுக்கு மகத்தான

வரவேற்பு ஒன்றை வழங்கினார்கள். அத்தோடு அவர்களை டெல்லிக்கும் அழைத்துச் சென்றார்கள்.

டெல்லியில் இந்தியா முழுவதும் நிதி திரட்டுவதற்கான குழு ஒன்றும் அமைக்கப் பெற்றது. பின்னர் பல துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்த குழு டெல்லி, பம்பாய், ஹைதராபாத், சூரத், இஃஜீர் ஆகிய பகுதி களுக்குச் சென்று நிதி திரட்டியது.

ஹைதராபாத் நிஜாம் மட்டும் ரூபாய் ஒரு லட்சம் நிதியாகத் தந்தார்.

## இந்திய நன்கொடைகள்

| | |
|---|---|
| ஹைதராபாத் கமிட்டி | - 500 எகிப்திய பவுண்ட் |
| போப்பால் இளவரசி | - 30,000 ரூபாய் |
| நவாப் ஜவாரா | - 5,000 ரூபாய் |
| நவாப் ஜூனாகார்க் | - 5,000 ரூபாய் |
| மௌலான முல்லா தாஹிர் செய்ஃபுதீன் | - 15,000 ரூபாய் |
| பம்பாய், டெல்லி பொதுமக்கள் | - 31,000 ரூபாய் |

(தேவைப்பட்டால் இதே போல் இன்னொரு தொகையை தருவதாக வாக்குறுதி தந்தார்கள்)

| | |
|---|---|
| இளவரசர் ஆகாகான் | - 40,000 ரூபாய் |
| நவாப் ஷஹின் | - 10,000 ரூபாய் |
| குலாம் முஹம்மத் (ஆதம்) | - 15,000 ரூபாய் |

மீண்டும் மௌலான முல்லா தாஹிர் செய்ஃபுதீன் - 85,000 ரூபாய்

(ஆதராம் : The Supreme Muslim Council Issue No.32, 1924 Page 8)

அன்றைய காலக்கட்டத்தில் இஃது மிகப் பெரியதொரு தொகை, அன்றைக்கு இந்திய முஸ்லிம்களின் பொருளதார நிலையை வைத்துப் பார்த்திடும் போது இஃது இன்னும் பெரிய தொகை.

காரணம் பிளாசி போரிலிருந்தே (1757) முஸ்லிம்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வருகின்றார்கள். அதேபோல் 1857இல் நடைபெற்ற சிப்பாய் கலகத்தை முஸ்லிம்களின் ஜிஹாத் என்று அறிவித்தார்கள் ஆங்கிலேயர்கள். இதனால் முஸ்லிம்களைத் திட்டம்போட்டு அழித்தார்கள் ஆங்கிலேயர்கள். அத்தோடு அவர்களின் பொருளாதாரங்களையும் வியாபார நிறுவனங்களையும் சதி செய்து தகர்த்தார்கள். அவர்கள் - இந்திய முஸ்லிம்கள் வறுமையில் வாடிட வேண்டும். அவர்கள் எந்த நிலையிலும் தலையெடுத்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். கண்காணித்து வந்தார்கள் ஆங்கிலேயர்கள்.

உண்மையைச் சொன்னால் 1800களுக்கும் 1925க்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் இந்திய முஸ்லிம்கள் ஓட்டாண்டிகளாக ஆக்கப்பட்டிருந்தார்கள். இந்த வறிய நிலையில் வாரி வழங்கிய நிதி தான் இந்த பெருந் தொகை.

இத்தகையதொரு பெருந்தொகையை வாரி வழங்கியதோடு 'கிலாபத் கமிட்டி' என்ற கிலாபத்-ஐ மீண்டும் கொண்டு வருவதற்கு அமைக்கப்பட்ட இயக்கத்தைச் சார்ந்த மௌலான சவ்கத் அலீ அவர்கள் பாலஸ்தீனி லிருந்து வந்த குழுவை மீண்டும் இந்தியா வந்திட வேண்டும் என்று அழைத்தார்கள்.

அத்தோடு பைத்துல் முகத்திஸ்-ஐ நிர்மானிக்கத் தேவைப்படும் முழு தொகையை யும் இந்திய முஸ்லிம்களே தந்திடத் தயாராக இருப்பார்கள் என்றும் உறுதி தந்தார்.

## 1924 பாலஸ்தீன் முப்தி அமீன் ஹுஸைனின் இந்திய வருகை!

மௌலானா சவுக்கத் அலீ அவர்களின் அழைப்பை ஏற்று பாலஸ்தீன் கமிட்டி ஒன்று 1924 ஆம் ஆண்டு ரமழான் மாதத்தில் இந்தியா வந்தது (ஹிஜ்ரி 1342).

இந்தியா முஸ்லிம்களின் நல்லாதரவுக்கு நன்றி சொல்லிடவும், அவர்களுக்கு உற்சாகம் தந்திடவும் இந்த முறை பாலஸ்தீன் முஃப்தி - (அல்-அக்ஸா மஸ்ஜித் அமைந்துள்ள ஜெரூசலத் தின் கவர்னர் - மற்றும் இமாம்) ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்களே வந்தார்கள்.

ஆங்கிலேயர்கள் ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்களை இந்தியாவிற்குள் சுதந்திரமாக சுற்றிவர அனுமதிக்கவில்லை. ஆனால் இந்த முறை இந்திய முஸ்லிம் பெண்கள் தங்களிட முள்ள அனைத்துத் தங்க நகைகளையும் அள்ளி தந்து அல்லாஹ்விடம் அளப்பரிய கூலிகளைப் பெற்றுக் கொண்டார் கள். பாலஸ்தீன் பெரும் போருக்கு தாராளமாக குவிந்தது நிதி!


vaigarai velicham official

அதேபோல் முஸ்லிம் ஆண்களும் அள்ளித் தந்தார்கள், தாங்கள் உதிரம் சிந்தி சம்பாதித்தப் பணத்தை!

இப்படி ஆண்களும், பெண்களும் பாலஸ் தீனிலுள்ள, மஸ்ஜித் அக்ஸா புனர்நிர்மானத் திற்கு அள்ளித் தந்திடுவதைக் கண்டு ஆத்திர மடைந்தார்கள் ஆங்கிலேயர்கள்.

இந்தப் பணத்தைப் பயன்படுத்தி பாலஸ்தீன் மக்கள் ஆயுதங்களை வாங்க போகின்றார்கள். யூதர்களைப் பூண்டோடு ஒழிக்கப் போகின் றார்கள் என்றே அஞ்சினார்கள் ஆங்கிலேய இந்திய அதிகாரி.

அச்சத்தின் அடுத்த கட்டமாக கடிதங்களை எழுதினார் பாலஸ்தீனிலுள்ள ஆங்கில அதிகாரிக்கு! அதில் 'வசூலிக்கப்படும் பணம், பாலஸ்தீனிலுள்ள பைத்துல் முகத்திஸ் புனர் நிர்மானத்திற்கு மட்டுமே பயன்படுகின்றது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அதைக் கண்காணிக்கும் படியும் பணித்தான்.'

பாலஸ்தீன முஸ்லிம்கள் பிரதிநிதிகளின் குழு இந்தியாவை விட்டுச் சென்றபின்பும் இந்தியாவிலிருந்து செல்லும் நன்கொடைகள் தொடர்ந்து கொண்டேதான் இருந்தன.

அன்றைய நாள்களில் எகிப்தின் நாணயங் களே பாலஸ்தீனிலும் புழக்கத்திலிருந்தன. அதனால் எகிப்தின் நாணயங்களாகவே இவை அனுப்பப்பட்டன. இதனை 'எகிப்தின் பவுண்டு' என Egyptian Pounds என்று அழைத்தார்கள்.

பிற்றைய நாள் நன்கொடைகள் ஆங்கிலோ எகிப்து வங்கி Anglo Egyptian Bank என்ற வங்கி வழியாகவும் இம்பீரியல் வங்கி Imperial Bank என்ற வங்கி வழியாகவும் அனுப்பப்பட்டன.

(ஆதாரம் : The Supreme Muslim Council Issue : No. 23/1924)

## 1927 - பாலஸ்தீன் நிலநடுக்கமும் இந்திய முஸ்லிம்களின் உதவிகளும்!

1927 இல் பாலஸ்தீனில் ஓர் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தில் ஏராளமான பாலஸ்தீன் கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகின.

நிலநடுக்கம் ஏற்பட்டது என்ற செய்தி இந்தியாவை வந்தடைந்தது. பாலஸ்தீன் மக்கள் கேட்காமலே நன்கொடைகள் பாய்ந்தன. தாஹிர் செய்ஃபுதீன் அவர்கள் ரூபாய் 1,10,000/-ஐ ஒரு லட்சத்து பத்தாயிரத்தை உடனேயே அனுப்பி வைத்தார்கள். நன்கொடைகள் வெள்ளமென பாய்ந்தன இந்தியாவிலிருந்து.

பாலஸ்தீன மக்களுக்குத் தீங்கொன்று வருகின்றது என்றால், உடனேயே உதவிகளைச் செய்தாக வேண்டும், பாலஸ்தீன் முஸ்லிம்கள் கேட்டால்தான் கொடுக்க வேண்டும் எனக் காத்திருக்கக் கூடாது என்றொரு மனநிலை இந்திய முஸ்லிம்களிடம் நிலவியது.

இந்தியாவில் அன்றைய நாள்களில் துடிப்போடு இயங்கிக் கொண்டிருந்த "கிலாபத் இயக்கம்" இந்த மனநிலையை மழுங்கவிடாமல் பார்த்துக் கொண்டது. அப்போது கிலாபத் இயக்கத்தை மௌலானா முஹம்மத் அலி (ரஹ்) அவர்கள் இந்தியாவிலிருந்து இயக்கிக் கொண்டி ருந்தார்கள். (Tasir Jbara: Indiana Mulsims and Palestine Question P:120)

அடுத்த இதழில் தொடரும்...



பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்...
முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

- தொடர்



# முஹம்மதியா மஸ்ஜித் - பர்பானி குண்டுவெடிப்பு வழக்கு 2003

## பிராமிணிஸ்ட் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட நீதிமன்றங்கள்

**செப்டம்பர் மாத தொடர்ச்சி....**

இதற்கு முந்தைய அத்தியாயங்களில் விவாதிக்கப்பட்ட குண்டுவெடிப்பு வழக்குகளில் இருந்து இந்த வழக்கு முற்றிலும் மாறுபட்டது. மற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சிமி என்கிற இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கத்தை சார்ந்தவர்கள். ஆனால் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள் அமைப்பை சார்ந்தவர்கள். வழக்கை கையாளும் விதமே மாறிப் போனது இந்த ஒற்றை காரணத்தால். குற்றவாளிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் குற்றத்தை மெய்ப்பிப்பதற்காக வேண்டி அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் இவையே முந்தைய வழக்குகளில் வழக்கின் முக்கிய சாட்சியமாக எடுத்துக்கொள்ளப் பட்டன. குற்றத்தை உறுதிப்படுத்தும் சுதந்திரமான சாட்சியங்கள் கூட இவற்றில் கிடையாது.

ஆனால் இந்த வழக்கில் அறிவியல் ஆதாரங்களும் மற்றும் இதர மறுக்கமுடியாத சாட்சியங்களும் இருந்தபோதும் கூட அவைகளை பதிவு செய்யவில்லை. பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களும் கண்டு கொள்ளப்படவில்லை. புலனாய்வு முகமைகள், வழக்காடு மன்றங்கள், நீதிபதிகளின் குழு என அனைவருமே ஒருதலை பட்சமாக செயல்பட்டதை இந்த வழக்கில் காணலாம்.

### I) நடந்த உண்மைகளின் சுருக்கம்

21 நவம்பர் 2003 மதியம் 1.45 மணி அளவில் பர்பானியா (மகாராஷ்டிரா) முஹம்மதியா பள்ளிவாசலில் இரண்டு குண்டுகள் வெடித்தன. புனித ரமலான் மாதத்தின் வெள்ளிக் கிழமை அன்று இது நடந்தது.

தொழுகைக்கான அழைப்பு மதியம் 12.30 மணிக்கு விடப் பட்டிருந்த நிலையில் மக்கள் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வந்து கொண்டிருந்தனர். தொழுகை ஆரம்பித்த வேளையில் 300–360 பேர் பள்ளிவாசலில் குழுமியிருந்தனர். 1.30 மணிக்கு தொழுகை ஆரம்பித்து 1.40 மணிக்கு நிறைவுற்றது. வெள்ளிக் கிழமை தொழுகையின் இறுதிப் பகுதியான பிரார்த்தனையை தொழுகையை தலைமை யேற்று நடத்திய இமாம் செய்து கொண்டிருந் தார். 1.45 மணி அளவில் ஒரு பயங்கர வெடி சத்தம் பள்ளிவாசலின் பின் புறத்திலிருந்து கேட்டது. என்ன நடந்தது என்று காண்பதற்காக


vaigarai velicham official

இமாமும் மற்றவர்களும் முற்பட்ட வேளையில் மற்றொரு குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பில் 35 பேர் காயமுற்றனர். காயமுற்ற வர்கள் ஜீப்பிலும் ஆட்டோவிலும் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பர்பானி நானல்பேத் காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் ரமேஷ் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்தார். பள்ளிவாசலின் பின்புறம் சேதமடைந்து இருந்ததையும் இரத்த மும் காலணிகளும் மின் விளக்குகளின் உடைந்த துண்டுகளும் சிதறிக் கிடந்ததையும் அவர் கண்டார். நானல்பேத் காவல் நிலையம் குற்ற எண் 161/2003 என்ற எண்ணின் கீழ் குற்றத்தை பதிவு செய்து விசாரணையைத் தொடங்கினார் அவர். சம்பவம் நடந்த இடத்திலேயே விசார ணையை தொடங்கி ஏழு பொருட்களை கைப் பற்றி ஒன்பது சாட்சியங்களின் கூற்றுக்களையும் பதிவு செய்தார் அவர்.

இரண்டு நாட்களுக்குப் பின் அதாவது 23 நவம்பர் 2003 அன்று, பர்பானி புலனாய்வு பிரிவின் காவல் ஆய்வாளர் குல்கர்னியிடம் இந்த விசாரணை ஒப்படைக்கப்பட்டது. ஒரு செய்தி இதழையும் ஐந்து துப்பாக்கி குண்டுகளையும் குல்கர்னியிடம் அதே நாளில் வழங்கினார் நந்தேத்தின் சிறப்பு IGP.

குண்டுவெடிப்பிற்கும் இந்த பொருட் களுக்கும் இடையே ஏதேனும் தொடர்பு உள்ளதா என்று விசாரணை செய்யும் படியும் அவர் கேட்டுக்கொண்டார். பின்னர் இந்தப் பொருட்களை மகாராஷ்டிராவின் உள்துறை அமைச்சரான கிரிபசங்கர் சிங்கிடம் வழங்கி னார் நகராட்சி மன்ற அதிகாரியான யூனுஸ் சர்வார். பின்னர் இவற்றை சிறப்பு IGP இடமே வழங்கினார் கிரிபசங்கர் சிங்.

குண்டுவெடிப்பில் பலத்த காயமுற்ற அப்துல் சமது என்பவர் ஹைதராபாத்தில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். ஆனால் சில நாட்களில் காயத்தின் காரணமாக அவர் மரணமடைந்தார்.

பின்னர் இந்த விசாரணை மாநில குற்றவியல் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டது. குற்றவியல் புலனாய்வு துறையின் துணை காவல் துறை கண்காணிப்பாளர் வெங்கட் சலுங்கே இந்த வழக்கை விசாரிக்க தொடங்கினார்.

பள்ளிவாசலின் அருகில் இருந்து கண்டெடுக் கப்பட்ட துப்பாக்கி குண்டுகள் புனேவில் அமைந்திருக்கும் கட்கி வெடிமருந்து தொழிற் சாலை கூடத்தில் தயாரிக்கப்பட்டவையா இல்லையா என்பதை உறுதி செய்ய அந்நிறு வனத்தின் தலைமை அதிகாரிக்கு கடிதம் ஒன்றை எழுதினார் துணை காவல் துறை கண்காணிப் பாளர் வெங்கட். எல்லாக் கோணத்திலும் வழக்கை விசாரித்தார் அவர். ஆனால் ஒரு உறுதியான முடிவிற்கு அவரால் வர இயல வில்லை. எனவே முதல்நிலை நீதித்துறை நடுவருக்கு ஒரு சுருக்கமான அறிக்கியை தந்தார். (உண்மை ஆனால் நிறுவப்படவில்லை).

## 2) திருப்பு முனையாக அமைந்த கண்டுபிடிப்பு

வழக்கை முடித்து வைப்பதற்கான எந்தவித முகாந்திரமும் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் 6 மே 2006 அன்று நந்தேத்தில் ஒரு குண்டு வெடித்தது. அதன்பின்பு திடீர் திருப்ப மாக இந்த வழக்கில் துப்பு துலங்கியது. லக்ஷ்மன் ராஜ்கோண்ட்வர் என்பவரது வீட்டில் ஆர்எஸ்எஸ், பஜ்ரங் தள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் வெடி குண்டை தயாரித்துக் கொண்டிருந்தபோது அது தற்செயலாக வெடித்தது. இந்த சம்பவத்தில் நரேஷ் கோண்ட்வர், ஹிமான்சு பான்ஸே ஆகிய இருவரும் இறந்தனர். யோகேஷ் தேஷ்பாண்டே என்கிற விதுல்கர், மாருதி வாக், குருராஜ் டுப்த்தேவர், ராகுல் பாண்டே ஆகியோர் காய முற்றனர். குற்ற எண் 99/2006 என்ற எண்ணின் கீழ் நந்தேத் பாக்கியா நகர் காவல் நிலையத்தில் குற்றம் பதிவு செய்யப்பட்டது. மும்பை தீவிரவாத எதிர்ப்புப்படையின் உதவி காவல்துறை ஆணையர் அணில் இந்த விசாரணைக்கு பொறுப்பு தாரியாக நியமிக்கப்பட்டார்.

ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்த 6 பேர் ஒரு சக்தி வாய்ந்த குண்டை தயாரித்துக் கொண்டிருந்தனர் என்றும் ரமலான் மாதத்தில் அவுரங்காபாத்தில் இருக்கும் ஒரு பெரிய பள்ளியில் அதை வெடிக்க செய்வதுமே அவர்களுடைய திட்டமாக இருந்தது என்றும் விசாரணையில் தெரியவந்தது. 2003ஆம் ஆண்டு பர்பானி முஹம்மதிய மஸ்ஜிதில் குண்டு வெடிப்பை நடத்தியதும் இந்த கூட்டம்தான்

என்ற உண்மையும் தெரிய வந்தது. எனவே பர்பானி குண்டுவெடிப்பு வழக்கையும் அணில் அவர்களே விசாரிக்க ஆரம்பித்தார். சஞ்சய் சவுத்ரி, மாருதி வாக்,யோகேஷ் தேஷ்பாண்டே, ஹிமான்சு பான்சே ஆகியோரே பர்பானி குண்டு வெடிப்பை நடத்தினார்கள் என்று ஒத்துக் கொண்டார் ஸ்ரீகர் சோனவேன். இவனுடைய கூற்றை பதிவுசெய்தார் ACP அணில். சஞ்சே சவுத்ரியை முதலில் கைது செய்து அவனை முழுமையாக விசாரித்தார் அவர். பெங்களூர் தடய அறிவியல் சோதனைக் கூடத்தில் சஞ்சய் சவுத்ரியிடம் உண்மை கண்டறியும் சோதனை, நார்கோ சோதனை பிரைன் மேப்பிங் சோதனை நடத்தப்பட்டது. போதுமான சாட்சியங்கள் இருந்ததினால் சஞ்சய் சவுத்ரி மீதும் இறந்த ஹிமான்சு பான்சே மீதும் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்தார் ACP அணில். தொடர்ந்து நடந்த விசாரணையில் வழக்கின் முக்கிய சாட்சியங்கள் ஆன யோகேஷ் தேஸ்பாண்டேவின் உறவினரான துர்கா குண்டிகரின் வாக்குமூலமும் புனேஅகான்ஷா ரிசார்டின் முதலாளி அஸ்வினி முஜூம்தரின் வாக்குமூலமும் பதிவு செய்யப் பட்டது. யோகேஷ் தேஷ் பாண்டே, மாருதி வாக் ஆகிய இருவரின் மீதும் துணை குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் இந்த வழக்கு அவரங்காபாத் தீவிரவாத எதிர்ப்புப் படையின் துணை காவல்துறை கண்காணிப்பாளர் விஸ்வநாத் இடம் 6 நவம்பர் 2008 அன்று மாற்றப்பட்டது. வழக்கைதொடர்ந்து விசாரணை செய்ய அவரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 2008 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட ராகேஷ் தவாதே என்பவனும் பர்பானி குண்டு வெடிப்பில் ஈடுபட்டுள்ளான் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே அவனையும் இந்த வழக்கு விசாரணையில் கொண்டு வந்து விசாரணை செய்யப்பட்டது. சுதன்வா தியோல், மிலிண்ட் நட்டு, ராஜேந்திர இண்டல்கர் ஆகியோர் அளித்த சாட்சியங்களின் படி புனே சின்ஹகட் குண்டுவெடிப்பு செயல்விளக்க நிகழ்வை ஏற்பாடு செய்தது ராகேஷ் தவாதே. எனவே ராகேஷ் தவாதேவிற்கு எதிராக துணை குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்தார் Dy. SP விஸ்வநாத்.

பர்பானி அமர்வு நீதிமன்றம் இந்த வழக்கிற்கான தீர்ப்பை 18 ஆகஸ்ட் 2016 அன்று வழங்கியது. குற்றவாளிகள் 4 பேரையும் அனைத்து குற்றச்சாட்டில் இருந்து விடுவித்தது இந்த தீர்ப்பு.

விசாரணை தரப்பு முக்கியமான பகுதிகளை கண்டுகொள்ளாமல் விட்டதை மட்டுமல்ல, நீதிமன்ற நடைமுறைகளில் எத்தனை பிழைகள் நடந்துள்ளன என்பதும் தீர்ப்பை கவனமாக ஆராயும் போது தெரிய வருகிறது.

## 3) நேரில் பார்த்த சாட்சியங்களை தவிர்த்தல்

சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் என்று ராஷிதபி ஷேக் (PW2), இஸ்மாயில் கான் சுஜாத் கான்(PW3)ஆகியஇரண்டுபேரையும்விசாரணை செய்தது விசாரணை தரப்பு. ஆனால் இவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் அல்ல. குற்றவாளி ஓடும்போது அப்பொழுது அவர்களை பார்த்தவர்கள். சம்பவத்தைப் பற்றியும் குற்றவாளிகளை பற்றியும் இவர்கள் கூறியது அவர்கள் மற்றவர்களிடமிருந்து கேட்டவை ஆகும். குண்டு வெடித்த பெரும் சப்தம் கேட்டதற்கு பின், முஹம்மதிய பள்ளிவாசலின் அருகில் இருந்து மூன்று பேர் தங்களின் முகத்தை பாதி மறைத்துக்கொண்டு ஒரு இருசக்கர வாகனத்தில் வந்ததைப் பார்த்தோம் என்றே அவர்கள் இருவரும் கூறியுள்ளனர்.

அதாவது, பள்ளிவாசலின் மீது குண்டு எறியும் சம்பவத்தை அவர்கள் பார்க்கவில்லை. இஸ்மாயில் கான் சுஜாத் கான் (PW3) வாக்குமூலத்தின் படி, இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் சந்த் மற்றும் சாய்தா என்ற பெண்ணும் ஆவார். இரண்டு குண்டு வெடிப்புகளின் சத்தம் கேட்ட பின்பு, அவர் முஹம்மதியா பள்ளிவாசலை நோக்கி சென்றதாகவும், அப்பொழுது அங்கிருந்து ஒரு இரு சக்கர வாகனம் வெளியே வந்தது என்றும் அதனை துரத்திக் கொண்டு சந்த் வந்தார் என்றும் அவர் கூறியுள்ளார். ஏன் அந்த வண்டியை துரத்திக்கொண்டு செல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அந்த வாகனத்தை நோக்கி கையை மட்டும் காட்டியுள்ளார் அந்த சந்த். சில அடி தூரம் முன் சென்று பார்த்தபொழுது அங்கே சாய்தா என்ற ஒரு பெண் நின்று கொண்டிருந்தார். இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் பள்ளிவாசலின் மீது குண்டை எறிந்து விட்டுச்


vaigarai velicham official

செல்கிறார்கள் என்றும் தன்னை நோக்கி துப்பாக்கியை காட்டிவிட்டு சென்றதாகவும் அந்தப் பெண் இஸ்மாயில்கானிடம் கூறியதாக அவர் கூறியுள்ளார்.

எனவே பள்ளிவாசலின் மீது குண்டு எறிந்ததை சந்தும், சாய்தாவும் பார்த்துள்ளனர் என்பது தெளிவு. மேலும், அந்தப் பெண்ணை நோக்கி குற்றவாளிகள் துப்பாக்கியை காட்டியுள்ளனர் என்பதிலிருந்து அந்தப்பெண் குற்றவாளிகளுக்கு மிக அருகில் நின்றுள்ளார் என்ற உண்மையும் தெரியவருகிறது.

எனவே குற்றவாளிகளின் முகங்கள் பாதி மறைக்கப்பட்டு இருந்தாலும் அந்த பெண்ணால் அவர்களை அடையாளம் காணமுடியும். இந்த சூழ்நிலையின்படி, இயல்பாகவே இந்த இரண்டுபேரும் முக்கிய சாட்சியங்களாக வழக்கில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவர்கள் இருவருமே விசாரணை செய்யப்படவில்லை.

குற்றவாளிகளிடம் இருந்து கீழே விழுந்த ஒரு செய்தி இதழையும் ஐந்து குண்டுகளையும் முதலில் கண்டெடுத்து கொடுத்தது ஒரு சிறுவன் ஆகும். அவன் நேரில் பார்த்த மற்றொரு முக்கிய சாட்சி ஆகும். இந்தப் பொருட்களை யார் யாரிடமிருந்து கொடுத்தார்கள், இறுதியாக இதனை மாநில உள்துறை அமைச்சர் கிருப சங்கர் சிங்கிடம் கொடுத்தது யார் என்றும் மொத்த குண்டுகளின் எண்ணிக்கை ஐந்தா அல்லது ஆறா என்றும் விசாரணை செய்வதில் நேரம் செலவழிக்கப்பட்டது. மொத்தமாக பார்த்தால் இதனை கண்டெடுத்து கொடுத்தது அந்த சிறுவன். இதனை அவன் அவனுடைய தந்தையிடம் ஒப்படைத்துள்ளான். அவர் இதனை செய்யது ஃபரூக் செய்யது பாஷாவிடம் (PW17) கொடுத்துள்ளார். இவர் உள்ளூர் நகர்மன்ற அதிகாரி யூனுஸ் சர்வாரிடம் கொடுத்துள்ளார்.

அதன்பின்பு இந்த பொருட்கள் ஒருவர் பின் ஒருவராக கைமாறி இறுதியாக கிரிபசங்கர் சிங்கிடம் வந்தடைந்துள்ளது. மொத்தமாக இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் இந்தப் பொருட்கள் குற்றவாளிகள் உடையது. இதனை கண்டெடுத்து கொடுத்தது அந்த சிறுவன். இந்த சிறுவன் குற்றவாளிகளை அடையாளம் காட்டும் வயதை எய்தியவன் என்பதால் அவனை ஒரு சாட்சியாக சேர்த்திருக்க வேண்டும். எனினும் இதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை. குற்ற வாளிகளை அடையாளம் காணுதல், வழக்கில் மேலும் துப்பு துலங்குதல், குற்றவாளிகளை தீர்மானித்தல் போன்ற அம்சங்களில் சந்த், சாய்தா மற்றும் அந்த சிறுவன் ஆகிய 3 பேரும் முக்கியமான சாட்சியங்கள் ஆகும். ஆனால் இவர்கள் விசாரணை செய்யப்படவே இல்லை.

முக்கியமான சாட்சியங்களை மறைத்து சில காரணங்களுக் காக குற்றவாளிகளை காப்பாற்ற விசாரணை தரப்பு செயல்பட்டிருந்தால், அது சம்பந்தமாக கேள்வி கேட்பது அமர்வு நீதி மன்றத்தின் பொறுப்பாகும். புகழ்பெற்ற பெஸ்ட் பேக்கரி வழக்கின் தீர்ப்பு அப்படித்தான் கூறுகின்றது.

(Best Bakery case of Gujarat (2004)4 Supreme Court Cases 158).

‘குற்ற வழக்கின் புலனாய்விலோ விசாரணையிலோ குறைபாடு இருப்பது கண்கூடாகவே தெரியுமானால் அல்லது நிஜங் களையும் வெளிப்படையான குறைபாடுகளையும் மறைத்திடும் திரைகளை விலக்குவதன் மூலம் குறைபாடுகள் தெரிந்திடும் என்றால், சட்டத்திற் குட்பட்டு இரும்புக்கரம் கொண்டு தேவையான நடவடிக்கைகளை நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும். அநீதி இழைப்பதை தவிர்த்திடும் பொருட்டு, முழுமையான முக்கியமான ஆதாரங்களை விசாரணை தரப்பு சமர்ப்பிப்பதை நீதிமன்றம் உறுதி செய்வது அதன் கடமையாகும்.’

உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பின்படி, நீதியை நிலைநாட்ட வேண்டி விசாரணை நீதிமன்றம் தானாகவே முன்வந்து முக்கியமான சாட்சியங்களை அழைத்து விசாரணை செய்து இருக்க வேண்டும். ஆனால் நீதிமன்றம் இதில் தவறு இழைத்துவிட்டது.

### 4) நார்கோ சோதனையின் மூலம் சஞ்சய் சவுத்ரியிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலம் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்படவில்லை:

நந்தேத் குண்டுவெடிப்பில் தொடர்புடைய சஞ்சய் சவுத்ரியிடம் நார்கோ சோதனை மேற் கொள்ளப்பட்டது. அந்த சோதனையில் அவன் அளித்த வாக்குமூலங்கள் மிகவும் முக்கியமான

சாட்சியங்கள் ஆகும். நீதிமன்ற அனுமதியுடன், அவனை முழுமையான உடல் பரிசோதனைக்கு உட்படுத்தி, உள்துறை அமைச்சகம் வெளியிட்ட குறிப்பேட்டில் கூறப்பட்டிருக்கும் செயல் முறையை பின்பற்றி இப்படி அனைத்து சட்ட, மருத்துவ ரீதியான வழிமுறைகளைப் பின்பற்றிய பின்னரே அவனிடம் வாக்குமூலம் பெறப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.

நார்கோ சோதனையில் அவன் அளித்த வாக்கு மூலங்களில் முக்கியமானவைகள் பின்வருமாறு:

*1)* சின்ஹகட், புனே அகான்சா ரிசார்ட்டில் வைத்து நடந்த குண்டுகளை எப்படி தயாரிப்பது என்ற பயிற்சி முறையில் சஞ்சய் சவுத்ரி, மாருதி வாக், ஹிமான்சு பான்சே, யோகேஷ் தேஷ் பாண்டே ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

*2)* இரண்டு மூன்று நாட்கள் இந்த பயிற்சி நடந்தது. மூன்று வகையான குண்டுகளை தயாரிக்க அவர்களுக்கு பயிற்சி வழங்கப் பட்டது. குண்டுகளை தயாரிக்க சிகப்பு வெள்ளை பொடிகள் பயன்படுத்தப்பட்டன.

*3)* பயிற்சி அளித்த நபரின் பெயர் மிதுன் சக்ரபோர்ட்டி. அவர் உயரமான தடித்த உருவம் கொண்டவர். தாடி வைத்திருந்தார். ஹினான்சு அவரை எப்பொழுதும் சார் என்றே அழைப்பான்.

*4)* பயிற்சியை முடித்து திரும்பும் வேளையில் ரயில்வே நிலையத்தில் வைத்து, குண்டுகளை தயாரிப்பதற்கான பொருட்கள் அடங்கிய பேக் ஒன்றை அவர்களிடம் கொடுத் துள்ளார் மிதுன் சக்ரபோர்ட்டி.

*5)* பர்பானி குண்டுவெடிப்பு நடப்பதற்கு முன், சஞ்சேயிடம் ஹிமான்சு இப்படி கூறியுள் ளான். தனது அத்தைக்கு உடம்பு சரியில்லாத காரணத்தால் தன்னால் புனே செல்லமுடியாது என்றும் நீ அங்கு போய் ஒரு நபரைச் சந்திக்க வேண்டும் என்றும் கூறியுள்ளான். அந்த நபரின் பெயரை அவன் கூறவில்லை. தனது பெயரை (ஹிமான்சு) பயன்படுத்தியே பயணம் மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று ஹோட்டலிலும் தனது பெயரையே பதிவு செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளான்.

*6)* சஞ்சேவும் அதேபோன்றே செய்துள் ளான். புனே சத்ரியா லாட்ஜில் அவனுக்கான தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டது. சஞ்சேவை புனே அனுப்பியது ஹிமான்சுவின் திட்டங்களில் ஒன்று.



*7)* பர்பானியில் குண்டுவெடிப்பை நடத்த ஹிமான்சு, நரேஷ், மாருதி வாக் ஆகிய மூவரும் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளனர். பள்ளிவாசலின் மீது குண்டு எறிந்துள்ளான் ஹிமான்சு.

*8)* ஜால்நா குண்டுவெடிப்பை நடத்த ஹிமான் சுவுடன் ராகுல் பாண்டே சென்றுள்ளான்.

*9)* மேற்சொன்ன குண்டுவெடிப்பை முன்னின்று நடத்தியவன் யோகேஷ் தேஷ் பாண்டே(விதுல்கர்). இவனுக்கு அடுத்த பொறுப் பில் இருந்து செயல்பட்டவன் ஹிமான்சு.

*10)* மூத்த தலைவரான பாலாஜி பாக்ரே மற்றும் மும்பை ஆர்எஸ்எஸ் தலைவர்களுக்கு அடிக்கடி போனில் பேசுவான்ஹிமான்சு.

*11)* மும்பை, புனே பகுதிகளில் செயல்படும் ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள் அமைப்புகளிடமிருந்து இந்த நடவடிக்கைகளுக்கான பணத்தை பெற்றுக் கொண்டிருந்தான் ஹிமான்சு.

*12)* சஞ்சய் பட்டியல் சாதியை சேர்ந்தவன். அவர்கள் இவனை தைரியசாலி என்று கூறுவார்கள்.

*13)* வைஷ்ணவ தேவி கோவிலில் நடந்த பண்டிதர்களின் கொலை, மும்பை இந்தியா கேட்டில் நடந்த குண்டுவெடிப்பு, அபு சலீம், தாவூத் இப்ராஹிம் இவர்களின் தீவிரவாத நடவடிக்கைகள் இவற்றிற்கு எதிராக முஸ்லி ம்களை பழிவாங்க வேண்டும் என்று சஞ்சேவை


vaigarai velicham official

தூண்டி விடுவார்கள் அவர்கள்.

14) குண்டுவெடிப்பை நடத்தி 300–400 முஸ்லிம்களை கொலை செய்ய வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டனர்.

15) நரேஷின் (நந்தேத்) வீட்டில் தயாரிக்கப்பட்டு கொண்டிருந்த குண்டை அவுரங்காபாத் ரயில் நிலையத்தின் அருகில் இருக்கும் பள்ளி வாசலின் மீது எறிவதே அவர்களின் திட்டம்.

16) ஒவ்வொரு செயலுக்கும் மூத்த தலைவர்களிடம் இருந்து அதற்கான கட்டளைகள் போன் வழியாக ஹிமான்சுவிடம் கூறப்படும். கட்டளைகள் வராத எந்தத் திட்டத்தையும் ஹிமான்சு செயல்படுத்த மாட்டான்.

17) இந்த கட்டளைகளுக்கென்றே அவன் தனியாக ஒரு சிம் கார்டை வைத்திருந்தான்.

18) இவனின் கைதுக்குப் பின், பஜ்ரங்தள் தலைவரான பாலாஜி பாக்ரேவிடம் இருந்து சஞ்சேவிற்கு அழைப்பு வந்தது. அவர் அவனிடம் கவலைப்பட வேண்டாம் விரைவில் அவன் வெளியே வருவான் என்று கூறியுள்ளார்.

சஞ்சய் சவுத்ரியிடம் நடத்தப்பட்ட நார்கோ சோதனையானது ஆர்எஸ்எஸ் பஜ்ரங்தள் அமைப்புகளின் கிரிமினல் நடவடிக்கை களை வெளிக்கொண்டு வந்தது. சஞ்சய் கூறியவற்றில் முக்கியமான பகுதிகளை விசாரணை செய்து அதிலிருந்து சதித் திட்டம் பற்றிய தகவல்களை விசாரணை அதிகாரிகள் வெளிக்கொண்டு வந்திருக்க வேண்டும். மேலும், அவனின் ஒவ்வொரு கூற்றை பற்றியும் தனித்தனியாக விசாரணை செய்து இருக்க வேண்டும். ஆனால் நார்கோ சோதனை அறிக்கையை சமர்ப்பிக்கவே இல்லை என்பது தீர்ப்பிலிருந்து தெரிகிறது. ஒரு முக்கிய சாட்சியத்தை விசாரணை முகமையும் வழக்கு தரப்பும் வீணடித்து விட்டன.


உண்மையைக் கூறின், நந்தேத் குண்டு வெடிப்பு நடப்பதற்கு முன்பு வரை பர்பானி குண்டுவெடிப்பு வழக்கை பற்றி எந்தவித நம்பிக்கையும் இல்லாமல் இருந்தது. நந்தேத் குண்டுவெடிப்பு நடந்த பின் சஞ்சய் சவுத்ரியிடம் மேற்கொண்ட நார்கோ சோதனை தான் இந்த வழக்கிற்கு உயிர் கொடுத்தது.

எனவே நார்கோ சோதனை அறிக்கை எந்த அளவிற்கு முக்கியமானது என்பதை இவ்வுண்மை எடுத்தியம்புகிறது. இப்படிப்பட்ட ஒரு முக்கியமான சாட்சியத்தை வழக்கு தரப்பு சமர்ப்பிக்கவில்லை என்றாலும்கூட அதனை சமர்ப்பிக்க சொல்லி அதன்மேல் விசாரணை மேற்கொள்ள ஆணை பிறப்பிக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமை. ஆனால் அதனை நீதிமன்றம் செய்யவில்லை. அதன் போக்கிலேயே விட்டுவிட்டது.

இங்கேயும்குஜராத்பெஸ்ட் பேக்கரிவழக்கின் தீர்ப்பை மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

(Best bakery case of Gujarat (2004) 4 supreme court cases 158).

அடுத்த இதழில் தொடரும்...





● மகளிர் மன்றம்

# அன்னை ஜுவைரிய்யா (ரலி)

**'தன்** சொந்த சமுதாயத்துக்கு மிகப்பெரும் அருளை, அபிவிருத்தியை அள்ளி வழங்கிய வராக (பர்ரா) திகழ்ந்தார்கள். இவர்போல் வேறு எந்தப் பெண்ணும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

அவருக்கு பெற்றோர் வைத்த பெயர் 'பர்ரா' நன்மை செய்பவர் என்பது இதன்பொருள். மதீனாவிலிருந்து தொலைவிலுள்ள முரீசிஃ எனும் ஊரில் வாழ்வாங்கு வாழ்ந்த பனூல் முஸ்தலிக் கூட்டத்தின் தலைவர் ஹாரிஸ் என்பாரின் அன்பு மகளாய் அவனியில் பிறந்தார் பர்ரா, ஹிஜ்ரத்துக்கு பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு கௌரவமான குடும் பத்தில் பிறந்து கண்ணியமான முறையில் வளர்ந்து வந்தார் பர்ரா. வனப்புமிகு வாலிபப் பருவத்தை எட்டிப் பிடித்தார். அனைத்துச் சிறப்புக்களையும் அட்டியின்றிப் பெற்றுயர்ந்து நிற்கும் அவர்களை வாழ்க்கைத் துணையாய்ப் பெற்றிட இளங்காளைகள் விரும்பினர். அந்த நல்வாய்ப்பைப் பெற்றவர் முஸாபிஃ பின் ஸப்வான்.

பர்ரா, முஸாபிஃ ஆகியோரின் திருமணம் நல்லோர் நெஞ்சங்கள் வாழ்த்திட இனிதே நடந்தேறியது. தம்பதிகள் அழகுற தம் வாழ்க்கையை எதிர் கொண்டனர்.

ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தலைமையில் அமைந்திருந்த இஸ்லாமிய அரசுக்கு சோதனைகள் அணி அணியாய் வந்து கொண்டிருந்த காலம். அல்லாஹ்வின் ஆட்சி நடைபெறுகின்ற நிலப் பரப்பையும் அதில் வாழும் ஓரிறை நம்பிக்கையாளர்களையும் பாதுகாத்திட, அல்லாஹ்வின் மார்க்கத்தை தொய்வின்றி தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றிட அண்ணலார் (ஸல்) அவர்கள் முழு கவனத்து டன் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். எதிரிகளின் நேரடியான மோதல்களையும் திரைமறைவு தில்லு முல்லுகளையும் உத்தம நபி (ஸல்) அவர்கள் உடைத்தெறிந்தார்கள் அல்லாஹ்வின் உதவியால்,

அஹ்ஸாப் யுத்தம், பனீ லஹ்யான் யுத்தம், நீகரத் யுத்தம் என்று யுத்தங்கள் அடுத்தடுத்து வந்தன. யுத்தங்களே வாழ்க் கையாகிப்போன காலம் அது.

பனீ லஹ்யான், தீகரத் ஆகிய யுத்தங்களை முடித்துவிட்டு மதீனாவுக்கு வந்த முஸ்லிம்களின் அணி ஒரு மாதம் கூட முழுமையாக தங்கி யிருந்திட இயலவில்லை. சூழ்ச்சிகள், மலிவான அவதூறுகள், கீழறுப்புச் செயல்கள் ஆகியவற்றை நித்தம் நித்தம் சந்திக்க வேண்டிய நிலையி லிருந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் உளவுத்துறையை எப்போதும் எச்சரிக்கை யுடனேயே வைத்திருந்தார்கள். தற்காலிக, நிரந்தரத்தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் இவற்றிலிருந்து முஸ்லிம்களையும் இஸ்லாமிய நிலத்தையும் காத்திட அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உளவுத்துறை ஆற்றிய பணி மகத்தானது.

ஒருநாள் அந்த உளவுத்துறை அதிர்ச்சியான தொரு தகவலோடு நபி (ஸல்) அவர்களை வந்தடைந்தது. மூரீசிஃ எனும் ஊரில் வசிக்கும் பனூ முஸ்தலிக் கூட்டம் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. முஸ்லிம்களுக்கு எதிராக மிகப்பெரிய அளவில் மக்களை அணி திரட்டிக் கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தின் தலைவர் ஹாரிஸ் என்பவரே போர்ப்படைக்கும் தலைமை ஏற்கப் போகிறார். உளவுத்துறை


vaigarai velicham official

தந்த இந்தத் தகவலை உறுதி செய்து கொண் டார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். திடீர்த் தாக்குதல் நடத்தி எதிரிகளை நிலை குலையச் செய்வது அண்ணலாரின் போர்த் தந்திரங்களில் ஒன்று. அன்றும் அப்படித்தான் முஸ்லிம்களைத் தாக்கிட அணி திரண்டு தக்கதோர் சந்தர்ப்பத்துக்காகக் காத்துக்கிடந்த பனூ முஸ்தலிக் கூட்டத்தினர் வாழ்கின்ற பகுதிக்குச் சென்று, அவர்களின் ஊருக்கே சென்று தாக்குதல் தொடுத்தனர் முஸ்லிம்கள். மோசமான தோல்வியை எதிரிகள் அடைய நேர்ந்தது. பெரும் இழப்புக்களை சந்தித்தனர். போராளிகள், குதிரைப்படை வீரர்கள், பெண்கள் என பனூ முஸ்தலிக் கூட்டத்தினர் ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.

எதிரணித் தலைவர் ஹாரிஸ் ஓடி ஒளிந்து கொண்டார். அவரின் அன்பு மகள் பர்ரா கைதிகளில் ஒருவராய் முஸ்லிம்களிடம் மாட்டிக் கொண்டார். கைதிகள் அனைவரும் மதீனாவுக்கு அழைத்து வரப்பட்டனர். அவர் களோடு 'பர்ரா'வும் ஒளிசிந்தும் மதீனாவில் வந்திறங்கினார்.

அதன்பிறகு நடந்தது என்ன? அறிவில் சிறந்த அன்னை ஆயிஷா (ரலி) அவர்களின் வார்த்தைகளால் அதை நாம் அறிவோம்.

இதோ அன்னை ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்:

“பனூ முஸ்தலிக் போரில் கைது செய்யப் பட்ட அடிமைகளை போரில் பங்கேற்ற தோழர் களுக்கு பங்கு வைத்துத் தந்தார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். ஸாபித் பின் கைஸ் (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்ட பங்கில் அவரின் அடிமையானார் பர்ரா.

தம் கருத்தை பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் பேசத்தெரிந்தவர் பர்ரா. அந்த இளம் வயதிலேயே அப்படி ஒரு ஆற்றல் அவர்களுக்கு. தம் எஜமான் ஸாபித் பின் கைஸ் (ரலி) அவர்களிடம் தனக்கு உரிமைப்பத்திரம் எழுதித் தரும்படியும் அதற்காக குறிப்பிட்ட ஒரு தொகையைத் தந்து விடுவதாகவும் பேசி ஒப்புக்கொள்ள வைத்துவிட்டார் பர்ரா. எஜமான் ஸாபித் (ரலி) அதற்கு ஒப்புக்கொண் டதும் குறிப்பிட்ட அந்த பணத்தைத் திரட்டிட வழி தேடினார்.

நேராக இறைத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தேடி வந்தார். தன்னுடைய நிலையை நயம்பட எடுத்துரைத்தார். "நான் பனூ முஸ்தலிக் கூட்டத்தின் தலைவர் ஹாரி ஸின் மகள். பெரும் சோதனையில் சிக்கித் தவிக்கிறேன் என்பதை நீங்களே அறிவீர்கள். தலைவர்களைத் தந்து கொண்டிருந்த குடும்பத்தில் பிறந்தநான் இன்று உங்கள் பூமியில் அடிமைகளில் ஒருத்தியாய் நின்று கொண்டிருக்கிறேன். என் எஜமான் ஸாபித் பின் கைஸ் (ரலி) அவரிடம் உரிமைப்பத்திரமும் எழுதி வாங்கிவிட்டேன். உங்களின் உதவிகளைப் பெற்றிடவே இங்கே வந்தேன். நீங்கள் உதவி செய்தால் நான் விடுதலை பெற்றிட இயலும்" என்றார் பர்ரா.

உதவி என்று கேட்டுவந்தோர் எவரையும் திருப்பி அனுப்பியதில்லை அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள். எதிர்பார்த்து வந்த உதவிகளைச் செய்வதோடு எதிர்பாராத அன்பளிப்புகளையும் கொடுத்து கேட்போரை அவர்கள் அசத்திவிடுவார்கள். பர்ராவிடம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள்:

"நீ கேட்பதைவிடச் சிறந்த வேறொன்றை உனக்கு நான் தரட்டுமா? "என்ன தரப் போகிறீர்கள்?" எனக் கேட்டார் பர்ரா. திருத்தூதர் (ஸல்) அவர்கள் தம் திருவாய் திறந்து சொன்னார்கள்:

"நீ உன் எஜமான் ஸாபித் (ரலி)யிடம் தருவதாக ஒப்புக்கொண்ட பணத்தை, உன் விடுதலைக்கான தொகையை நானே செலுத்தி விடுகிறேன். உன்னை என் வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ளவும் விரும்புகிறேன்."

அண்ணலாரின் இந்த வார்த்தைகள் தேனாய் வந்து பாய்ந்தன பர்ராவின் செவி களுக்குள். பொங்கி வழியும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். பரபரப்பான செய்தியானது இது. சந்திக்கும் தோறும் இதையே மக்கள் பேசிக்கொண்டனர். ஓர் அடிமைக்கு. சதிகாரக் கும்பலின் தலைவர் மகளுக்கு அண்ணலார் (ஸல்) அவர்கள் வாழ்வளித்ததை வியந்துரைத்துக் கொண்டனர் நபித்தோழர்கள். பனூ முஸ்தலிக் குடன் நடந்த போரில் ஏராளமானோர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்தனர். அந்தக் கைதிகளின் எஜமானர்களான நபித்தோழர் களெல்லாம் இப்படி பேசிக்கொண்டனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பர்ராவை மணமுடித்துக் கொண்டதால் பனூ முஸ்தலிக்

கூட்டத்தினர் அண்ணலாரின் சம்பந்தக்காரர் களாகிவிட்டனர். அண்ணல் நபி (ஸல்) அவர் களின் சம்பந்த வழிச்சொந்தங்களை நாம் அடிமைகளாக வைத்திருப்பது தகுமா? இழுக் கல்லவா அது? எனக் கூறியவர்களாக பனூ முஸ்தலிக் கூட்டத்தைச் சார்ந்த அத்தனை அடிமைகளையும் எவ்வித பிரதிபலனும் இன்றி உடனே விடுதலை செய்தனர்.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

"தன் சொந்த சமுதாயத்துக்கு மிகப்பெரும் அருளை, அபிவிருத்தியை அள்ளி வழங்கிய வராக (பர்ரா) திகழ்ந்தார்கள். இவர்போல் வேறு எந்தப் பெண்ணும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

இதனிடையே பர்ரா அவர்களின் அன்புத் தந்தையும் வாளாவிருந்திடவில்லை. முஸ்லிம் களிடமிருந்து தன் குலக்கொழுந்தை மீட்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டார். அதற்கு ஈடாக எதையும் அவர் தந்திடத் தயாராகவே இருந்தார். ஏராளமான ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு மதீனத்திரு நகர் நோக்கி வந்து கொண்டிருந்தார். வழியில் அகீக் என்றொரு இடத்தில் இளைப்பாறும் போதுதான் ஓட்டி வந்த ஒட்டகக் கூட்டத்தை நோட்டமிட்டார். அவற்றில் இரண்டு ஓட்டகங்கள் வசீகரமாய், வளப்பாய், வாகாய் நிற்பதைக் கண்ணுற்றார்.. அவற்றின் அழகில் மனதைப் பறி கொடுத்தார் பர்ராவின் தந்தை ஹாரிஸ். அவை தனக்கே வேண்டும் என விரும்பினார். முஸ்லிம்களிடம் அவற்றைத் தந்திட அவர் மனம் ஒப்பவில்லை. அந்தளவிற்கு அவ்விரண்டு ஒட்டகங்கள் மீது மட்டும் அவருக்கு அவ்வளவு லயிப்பு.

எனவே அவ்விடத்திலுள்ள கணவாய்களில் ஒன்றில் அந்த இரு ஒட்டகங்களை மட்டும் மறைவான இடத்தில் கட்டிப்போட்டுவிட்டு மற்ற ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு மதீனா வந்தடைந்தார். அண்ணலார் (ஸல்) அவர்களின் முன் நின்றார். "முஹம்மது அவர்களே... என் மகளை நீங்கள் கைது செய்துவிட்டீர்கள். உங்களிடம் இப்போது இருக்கிறார். என் மகளை விடுதலை செய்து விடுங்கள். அதற்கு ஈடாக இதோ இந்த ஒட்டகக் கூட்டத்தையே வைத்துக்கொள்ளுங்கள்" என்றார் ஹாரிஸ்.

உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள்:

"அகீக் என்ற இடத்திலுள்ள கணவாயில் மறைவான இடத்தில் நீர் கட்டிப்போட்டு வைத்துள்ள அந்த இரு ஒட்டகங்கள் இங்கே இல்லையே? அவை எங்கே என்று கேட்டார்கள் அவரிடம் இந்த அதிரடிக் கேள்வியால் ஆடிவிட்டார் ஹாரிஸ்.

மிக மிக ரகசியமான அந்தச் செயலை வல்ல இறைவனன்றி வேறு உங்களுக்கு அறிவித்திட வாய்ப்பே இல்லை" என்றார் உறுதியோடு இதன்பின்னர் ஏகத்துவத்தை ஆரத் தழுவிட அணுவத்தனை? நேரமும் தாமதிக்கவில்லை அவர் வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை எதுவுமில்லை. முஹம்மதே... நீங்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் திருத்தூதர் தான் என்ற பிசகற பிழையின்றிக் கூறினார்.

அவரைத் தொடர்ந்து அவரின் இருபுதல்வர் களும் பனூ முஸ்தலிக் கூட்டத்தினர் பலரும் இஸ்லாத்தை இதயம் குளிர ஏற்றுக் கொண்டனர்.

ஏக இறைவனின் வழிகாட்டுதல்களை ஏற்று வாழ்கின்ற, இறைவனின் திருப்தியை முழுமை யாக பெற்று இலங்கும் ரலியல்லாஹ் அன்ஹும் என்ற அணியில் ஹாரிஸ் அவர்களும் அவரின் மக்கள் கூட்டங்களும் தங்களை இணைத்துக் கொண்டனர். ஹாரிஸ் (ரலி) அவர்கள் உடனடி யாக ஒரு வேலையைச் செய்தார். அகிக் என்ற. இடத்திலுள்ள கணவாயின் மறைவிடத்தில் பதுக்கி வைத்திருந்த அவரின் மனங்கவர்ந்த அவ்விரு ஒட்டகங்களையும் கொண்டு வரச் செய்து எல்லா ஓட்டகங்களையும் அண்ணல் நபி (லை) அவர்களிடம் முறைப்படி ஒப் படைத்தார் பர்ராவும் ஹாரிஸ் (ரலி) அவரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

பர்ரா அவர்களும் இஸ்லாத்தைத் தழுவினார்கள். ஹாரிஸ் (ரலி)யிடம் முறைப்படி பாராவைப் பெண் கேட்டார்கள் அண்ணல் நபியவர்கள், இரட்டை மகிழ்ச்சியுடன் அவர் சம்மதித்தார். அண்ணலாருக்கு பர்ராவை திருமணம் செய்து வைத்தார் அகம்மகிழ் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மணக்கொடை மஹராக பர்ரா (ரலி)வுக்கு வழங்கியது நானூறு திர்ஹம்கள். அப்போது ஏறக்குறைய அன்னையின் வயது பத்தொன்பது.

பர்ரா என்ற அவர்களின் பெயரை அண்ணல் நபியவர்கள் மாற்றியமைத்தார்கள். ஜுவைரிய்யா


vaigarai velicham official

என்பது அன்னைக்கு அண்ணலார் தேர்ந்தெடுத்து சூட்டிய பெயர். ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். முஃமின்களின் அன்னையரில் ஒருவரான ஜுவைரிய்யா (ரலி)வின் பழைய பெயர் பர்ரா என்பதே. (அவர்களிடமிருந்து அண்ணல் நபி (ஸல்) வெளியே வரும்போது எங்கிருந்து வருகிறீர்கள் என யாரேனும் அவர்களிடம் கேட்டால்) பர்ரா நன்மை செய்பவரிடமிருந்து வெளியே வருகிறேன் எனக் (கூற வேண்டியதிருக்கும் அப்படிக்) கூறுவதை அண்ணல் நபி (ஸல்) வெறுத்ததால் ஜூவைரிய்யா என்று மாற்றி வைத்தார்கள்.

உலக முஸ்லிம்கள் அனைவரின் அன்னையாக ஏற்றம் பெற்ற ஜுவைரிய்யா (ரலி) அவர்கள் அல்லாஹ்வைத் துதிப்பதிலும் பிரார்த்தனைகளை வேண்டுவதிலும் அதிக நேரம் ஈடுபடுபவர்கள். அவர்களே கூறுகிறார்கள். "ஒருமுறை பஜ்ருக்குப்பின் காலை நேரத்தில் அண்ணலார் (ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். அப்போது நான் தஸ்பீஹ் (இறைத்துதி) செய்து கொண்டிருந்தேன். பின்னர் தங்களின் தேவைக்காக வெளியே சென்றார்கள். நெடுநேரம் கழித்து உச்சிப் பகல் நெருங்கிவரும் வேளையில் திரும்பி வந்தார்கள்.

நான் அப்போதும் தஸ்பீஹ் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து என்னிடம் காலை முதல் இங்குதான் உட்கார்ந்திருக்கிறாயா?" என்று கேட்டார்கள் "ஆம்" என்றேன் நான்.

உடனே நபியவர்கள் இப்படிச் சொன்னார்கள்:

"நான் உனக்கு சில சொற்றொடர்களை கற்றுத் தருகிறேன். அவற்றை நீ மூன்று தடவை கூறினால் காலை முதல் இதுவரை நீ கூறிவந்த தஸ்பீஹ்களுக்கு ஈடானதாக அவை அமைந்து விடும். இவை தான் அந்த வார்த்தைகள்.


“ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி, அதத ஹல்கிஹி வரிழா நப்ஸிஹி வஸினத்த அர்ஷிஹி வமிதாத கலிமாத்திஹி"

(பொருள்: அல்லாஹ் மிகத்தூய்மையானவன். அவனுடைய படைப்புக்களின் எண்ணிக்கை அளவுக்கு அவனை நான் புகழ்கிறேன். அவன் திருப்தி அடையும் அளவுக்கு அவனுடைய அர்ஷின் எடை அளவுக்கு அவனுடைய வார்த்தைகளின் அளவுக்கு அவனை நான் புகழ்கிறேன்) வாழும் காலமெல்லாம் இறைத் துதியில் இன்பம் கண்ட ஆன்மீகப் பழமாய் சிறந்துவிளங்கினார் அன்னை ஜுவைரிய்யா (ரலி) அவர்கள். தம் அறுபத்து நான்காம் அகவையில் ஹிஜ்ரி ஐம்பதாம் ஆண்டில் அல்லாஹ்வின் அழைப்பை ஏற்று இறுதிப் பயணத்தை மேற்கொண்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அடக்கம், அன்பு, நாவன்மை ஆகிய பண்புகளில் மிளிர்ந்து சிறந்த அன்னை ஜுவைரிய்யா (ரலி) வணக்க வழிபாடுகளிலும் முன்மாதிரியாய்த் திகழ்ந்தார்கள். வரலாற்றின் ஒளி சிந்தும் பக்கங்களில் 34 என்றென்றும் வாழ்கின்ற இவர் போன்ற பெருமாட்டிகளை முன் மாதிரிகளாக ஏற்றுக்கொண்டால் மட்டுமே பெண்ணுலகம் உண்மையான விடுதலையை சுவைத்திட இயலும்,

உதவிய நூல்கள்:

புஹாரீ, முஸ்லிம், அஹ்மது, இப்னு ஹிஷாம், இப்னு சஅத், சியரு அஃலாமின் நுபலா

நூலைப்பெற
போன்:
7401213394
7358278146
8148129887
விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து

# மின்னணு ஊடகங்களும் குழந்தைகளும்

**பள்ளிகளும்** கல்லூரிகளும் திறந்து ஒரு புதுப்பொலிவோடும். புது உத்வேகத்தோடும் புது உற்சாகத்தோடும் புது ஆடைகளோடும் கல்விக் கூடங்களை நோக்கி விரைந்துகொண்டிருப்பார்கள் மழலைகள்.

அவர்களின் மனமும் அறிவும் வளர்ந்திட அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்.

இந்த ஓட்டத்தில் விறுவிறுப்பாக வாழ்க்கையில் அவர்கள் நேரத்தை, காலத்தை கண்போல் காத்திட வேண்டும். தங்களுக்குக் கிடைக்கும் நேரத்தை கணக்குப் பார்த்து செலவு செய்திட வேண்டும்.

எதை வேண்டுமானாலும் விரயம் செய்யலாம். ஆனால் அவர் நேரத்தை மட்டும் விரயம் செய்திடக்கூடாது.

இப்படி அவர்கள் நேரத்தை காலத்தை கணக்குப்பார்தது செலவு செய்வதில் குறுக்கே நிற்பது தொலைக்காட்சிகள். அதுபோல் மலிவாகக் குவிந்துக் கொண்டிருக்கும் சி.டி. என்ற குறுந்தட்டுகள் என்பவைதாம்.

"உண்மையான தொலைக்காட்சி" என்ற நிறுவனம் நடத்திய ஆய்வு ஒன்றில் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. இந்த உண்மைகள் பெற்றோர்கள் - அறிவார்ந்த மாணவர்கள் இவர்களின் கண்களைத் திறக்கும் என்பதால் அவற்றை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்.

1. மாணவர்கள் - இளைஞர்கள் இவர்கள் தொலைக்காட்சியில் செலவு செய்யும் நேரம்தான் மிகவும் அதிகம்.

மழலைகள் - மாணவர்கள் மாணவிகள் ஒரு நாளைக்கு நான்கு வேளை தொலைக்காட்சியில் நேரத்தை தொலைக்கின்றார்கள்.

அ) காலையில் ஆ) மதிய உணவு இடைவேளையில் இ) மாலையில் வீடு திரும்பியவுடன் ஈ) இரவில், சில நாள்களில் இரவின் பிந்தியப் பகுதி தொலைக்காட்சியில் செலவு செய்யும் நேரம் தொடருகின்றது.

இஃதல்லாமல் தங்களுக்கு விருப்பமானவை என எண்ணிடும் வேடிக்கைகளின் சினிமாக்களின் குறுந்தட்டுகள் இதர நிகழ்ச்சிகளின் குறுந்தட்டுகள் என இன்னும் காலம் கரைகிறது. அதேபோல் வாரவிடுமுறைகளில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் என தொலைக்காட்சியோடு





vaigarai velicham official

போகும் நேரங்கள் மிகவும் அதிகம்.

2) ஆறாம் வகுப்புக்குள் நுழையும் ஒரு மாணவன் அல்லது மாணவி இன்றைய காலங்களில் 2000 (இரண்டாயிரம்) மணி நேரங்கள் வரை தொலைக்காட்சியைப் பார்ப்பதில் செலவு செய்திருப்பார். அவர்கள் உயர்நிலை (பள்ளிக்கூட) கல்வியை முடித்திடும் போது 20,000 (இருபதாயிரம்) மணி நேரங்களைத் தொலைக்காட்சியில் தொலைத்திருப்பார்கள்.

3) ஒரு மாணவன் அல்லது மாணவி தொலைக்காட்சியில் விரயம் செய்யும் இந்தக் காலம் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி தன் வகுப்பறைகளில் செலவு செய்யும் காலத்தைவிட அதிகமானது.

4) குழந்தைகள் வேறு எந்த தனிச் செயலுக்கும் (Single Activity) அல்லது வேறு எந்த குறிப்பிட்ட பணியிலும் இவ்வளவு நேரத்தைச் செலவு செய்ததில்லை. செய்வதுமில்லை.

(நன்றி: Youth, Aug 2004)

மேலே நாம் குறிப்பிட்டுக் காட்டியவை பல உண்மைகளை நமக்கு உணர்த்தும்,

1. பள்ளிக் கூடங்களில் கற்றுக் கொடுக்கும் பாடங்களைவிட அதிகமான பாடங்களை இந்தத் தொலைக்காட்சிகள் கற்றுக்கொடுக்கின்றன.

2. ஆசிரியர்களும் அவர்கள் சுற்றுக் கொடுக்கும் பாடங்களும் மாணவர்களின் மனதில் ஏற்படுத்தும் தாக்கங்களைவிட அதிகமான தாக்கங்களை இந்தப் பாடங்கள் (தொலைக் காட்சிகள்) ஏற்படுத்தும்.

3. பெற்றவர்களை குழந்தைகள் பின்பற்ற நினைப்பதைவிட இந்தத் தொலைக்காட்சியில் வரும் கதாப்பாத்திரங்களையே அதிகமாகப் பின் பற்றத் துடிப்பார்கள்.

4. நாம் (விடியல் வெள்ளியில்) அடிக்கடிச் சுட்டிக்காட்டுவதைப்போல் Seceing is Believing தொலைக்காட்சியில் வருகின்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பது என்பது அவற்றை அப்படியே நம்புவது என்றாகிவிடும். ஆகவே மழலைகளிடம் - மாணவிகளிடம் - மாணவர்களிடம் அதிகமாக ஆதிக்கம் செலுத்துபவை, தாக்கங்களை உருவாக்குபவை தொலைக்காட்சிகள்தாம்.

5. குழந்தைகளைப் பேணி வளர்க்க விரும்பும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒன்றை நன்றாக மனதில் பதிக்க வேண்டும். இவர்கள் இருவரையும் வலுவில் விஞ்சும் ஊடகமொன்று மாணவர்கள் மனதில் ஆதிக்கம் செலுத்துகின்றது. அதில் தமது கண்காணிப்பு அவசியம்.

6. குழந்தைகளின் மன நிலையை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன இந்த ஊடகங்கள் குறிப்பாக தொலைக்காட்சி, தற்காலங்களில் ஏற்படுத்திவரும் நாகரீகங்களைக் குறித்த ஆய்வு ஒன்றை நடத்தி இருக்கின்றது பிரான்ஸ் நாடு. அதேபோலவே ஷக்கில் வேஷம் என்ற சமுதாயவியல் வல்லுநர் ஒருவரும் ஓர் ஆய்வை நடத்தி இருக்கின்றார். இந்த ஆய்வுகளை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்.

அ) தொலைக்காட்சியை குழந்தைகள் தொடர்ந்து பார்ப்பதால் மூர்க்கத்தனமும் முரட்டுத்தனமும் அதிகமாக அவர்களிடம் வளருகின்றன. இதனை ஆராய்ச்சியாளர்கள் (B.,Violence) மூர்க்கத்தனமான தாக்குதல் மனப்பான்மை என்று குறிப்பிடுகின்றார்கள்.

அமெரிக்காவில் பள்ளிக் குழந்தைகள் அடிக்கடி கொலை செய்வதையும் இன்னும் முரட்டுத்தனமான செயல்களில் ஈடுபடுவதையும் இங்கே நாம் நினைவுகூர வேண்டும்.

வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் குழந்தைகளையும் சகமாணவர்களையும் கொலை செய்யும் செய்தி நித்திய நிகழ்ச்சிகளாகிவிட்டன.

ஆ) ஒரு சாராரிடம் கொலை பாதகங்களைச் செய்யத் தூண்டும் இந்த ஊடகங்கள் இன்னொரு சாராரை ஒரு மந்த நிலைக்கே கொண்டு சென்றுவிட்டன. ஆமாம்! குழந்தைகள் வெகுநேரம் தொலைக்காட்சிகள் முன்பே அமர்ந்திருப்பதால் அவர்கள் சுறுசுறுப்பை இழந்து விடுகின்றார்கள். ஒருவித மந்த நிலையை அடைந்து விடுகின்றார்கள். எல்லாம் அவர்கள் முன்வந்து நிற்க வேண்டும் என விரும்புகின்றார்கள். இதை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அதாவது உற்சாகமில்லாத வாழ்க்கை முறை என்கின்றார்கள்.

இ) இதில் ஏற்படும் மிகப்பெரிய இழப்புகள் என்னவெனில் மாணவ, மாணவிகள் தங்களது தன்னார்வத்தை இழந்துவிடுகின்றார்கள். அதாவது தங்களுக்குள் ஓர் ஆர்வத்தை

வளர்த்துக்கொண்டு அறிவைத் தேடுவதை விடுத்து தளங்கள் ஓரிடத்தில் அமர்ந்து வருவதை (தொலைக்காட்சியில் தெரிவதை எதிர்பார்த்திருக்கும் ஒரு மனநிலையை ஒரு சாராரிடம் வளர்ந்துள்ளது.

ஈ) அதிகநேரம் தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களின் மனவளமும் சிந்தனை திறனும் பல நேரங்களில் உடல் வளமும் பாதிக்கப்படுகின்றது.

உ) ஆன்மீக ஈடுபாடுகளும் வளர்ச்சிகளும் அற்றுப் போகின்றன. இதனால் ஒழுக்கக்கேடுகள் பிஞ்சு நெஞ்சங்களை ஆக்கிரமித்துவிடுகின்றன,

ஊ) ஒரு ஆபாசக் கலாச்சாரம் அணல் போல் பரவுகின்றது.

அமெரிக்காவிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சிகள்தாம் இளைஞர்களை அதிகமாகப் பாதிக்கின்றது என்கின்றனர் பிரான்ஸ் நாட்டு ஆராய்ச்சியாளர்கள்.

இதனால் அமெரிக்காவின் தொலைக் காட்சிகளும் அவற்றின்மூலம் பரவும் காட்சி களையும் காட்டுமிராண்டித்தனமானது. அநாகரீகம் என்கின்றார்கள்.

இவற்றிற்கு என்னதான் தீர்வு

சமூகவியலாளர் ஷக்கில் செய்யத் அவர்கள் பின்வரும் ஆலோசனைகளை வழங்குகின்றார்கள்.

குழந்தைகளின் மனநிலையை வளர்ப்பதில் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கும் பங்கை அவர்கள் எந்த நிலையிலும் விட்டுக் கொடுத்துவிடக்கூடாது.

குழந்தைகளின் தொலைக்காட்சியைப் பார்க்கும் நேரத்தை கண்டிப்பாகக் குறைக்க வேண்டும். முற்றாக தொலைக்காட்சியைப் பார்ப்பதைத் தடுப்பது இயலாது தேவையுமில்லை. ஆனால் அதிகமாகப் பார்ப்பதைத் தடுத்தேயாக வேண்டும்.

திருக்குர்ஆன் பாடங்கள், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய பாடங்கள் அதிகமாகப் புகட்டப்பட வேண்டும். இஸ்லாமிய வரலாற்றிலிருந்து கிடைக்கும் பாடங்களையும் மாணவர்களுக்குப் புகட்டிட வேண்டும். அவற்றில் விறுவிறுப்பும் ஆழிய ஞானமும் கிடைக்கும்.

தொலைக்காட்சிக்குப் பதிலாக வீட்டுக்கு உள்ளேயும் வீட்டுக்கு வெளியேயும் விளையாட்டுக்கள், சுற்றிப்பார்ப்பது, குடும்பத்தோடு வெளியே செல்லுதல் போன்றவற்றை அறிமுகப் படுத்தலாம். விளையாட்டுக்களை ஊக்குவிக்கலாம். இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம் தொலைக்காட்சியை தேவையான நேரத்திற்குப் பயன்படும் கருவியாக ஆக்கிட வேண்டும்.

குழந்தைகளோடு பேசுவது மிகவும் பயணப்பட்டதாகும். அவர்களிடம் பேசுவதை விடுத்து அவர்களோடு பேசிட வேண்டும். அதாவது அவர்களோடு அவர்களாக நாம் பழகிட வேண்டும், பேசிட வேண்டும்.

அவர்களுடைய எண்ணங்களை சிந்தனை களை இவற்றில் நாம் பங்கெடுத்திட வேண்டும். அவர்களின் எண்ணங்களையும் சிந்தனை களையும் பகிர்ந்துகொள்ளவும் வேண்டும்.

அறிவார்ந்த கண்டுபிடிப்புகள் வளமும் வனப்பும் மிகுந்த ஆக்கப்பூர்வமான சிந்தனை களை, எண்ணங்கள் இவை ஆயிரம் மணிநேர தொலைக்காட்சிகளைப் பார்ப்பதைவிட உற்சாகம் தருபவை. உன்னதமானவை. இதை அவர்கள் மனதில் வேரூன்றிடச் செய்திட வேண்டும்.

வளரும் குழந்தைகளின் நலனில் உண்மையிலேயே அக்கரையுள்ள பெற்றோர்கள் பின்னரும் நபிமொழியைத் தவறாமல் அந்தக் குழந்தைகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திட வேண்டும்.

'நீர் ஐந்து விஷயங்களை, ஐந்து விஷயங்களுக்கு முன் அரியவாய்ப்புக்களாய்க் கருதுவீராக! முதுமையடைவதற்கு முன்னால் உம்மையும், நோயுறுவதற்கு முன்னால் உம் ஆரோக்கியத்தையும், ஏழையாகிவிடுவதற்கு முன்னால் உம் செல்வ நிலையையும், பணிகளில் ஈடுபடுவதற்கு முன்னால் கிடைக்கும் ஓய்வையும், மரணமடைவதற்கு முன்னால் வாழ்நாளையும் நீவீர் அரிய வாய்ப்புக்களாகப் பயன்படுத்திக் கொள்வீராக (நூல்: மிஸ்காத்)

Source: 1. Beware of Pied Piper : Shakeel Shaik in Youth

2. நபி மொழி தொகுப்பு.

MGM



vaigarai velicham official

# நோய் தீர்க்கும் காய்கறிகள்




**முட்டைகோஸ்** (கேபேஜ்) கீரை வகையைச் சேர்ந்த ஒரு ஊட்டச்சத்து நிறைந்த காய்கறி ஆகும். 'பிரசிகா ஒலேரேசியா' என்ற தாவர வியல் பெயர் கொண்ட இது, சிலுவை மலர் குடும்பத்தைச் சேர்ந்தது. உலகெங்கும் பரவலாகப் பயிரிடப்படும் இந்தக் காய்கறி, பச்சை, சிவப்பு, ஊதா போன்ற பல வண்ணங்களில் கிடைக் கிறது. குறைந்த கலோரி மற்றும் அதிக ஊட்டச் சத்துகளைக் கொண்ட முட்டைகோஸ், ஆரோக்கிய உணவு முறையில் முக்கிய இடம் வகிக்கிறது.

இதில் வைட்டமின் சி, கே மற்றும் பி6, நார்ச்சத்து, மாங்கனீசு, கால்சியம், இரும்புச் சத்து மற்றும் மக்னீசியம் போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளன. மேலும், ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் மற்றும் பைட்டோநியூட்ரியன்ட்கள் என அழைக்கப்படும் தாவர ஊட்டச்சத்துகளும் அடங்கியுள்ளன. இந்த சத்துகளின் கலவை, முட்டைகோசை ஒரு சக்திவாய்ந்த ஆரோக்கிய உணவாக மாற்றுகிறது.

முட்டைகோஸ் பல்வேறு உடல்நலப் பயன்களைக் கொண்டுள்ளது. இதுநோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. செரிமானத்தை மேம்படுத்துகிறது, இதய ஆரோக்கியத்தை ஊக்குவிக்கிறது மற்றும் எடை இழப்பிற்கும் உதவக்கூடியது.

சமைக்காமல் சாலட்களிலும், சமைத்துக் கறிகளிலும் பயன்படுத்தப்படும் இந்தக் காய்கறி, உணவு முறையில் எளிதில் சேர்த்துக் கொள்ளக்கூடியது.

**ஊட்டச்சத்துகள்**

- வைட்டமின் ஏ,சி
- தாது உப்புக்கள்: சோடியம், இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ்
- புரதம்

**உடல் ஆரோக்கியத்துக்கான பயன்கள்**

**1. பொது ஆரோக்கியம் :**

- உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது
- தாது பலத்தை அதிகரிக்கிறது சர்க்கரை நோயாளிகளுக்கு நல்லது

**2. கண் ஆரோக்கியம் :**

- பார்வைக் கோளாறுகளைப் போக்குகிறது
- கண் நரம்புகளைச் சீராக இயங்கச் செய்கிறது
- வைட்டமின் ஏ சத்து கண் பார்வைக்குச் சிறந்தது

**3. சரும ஆரோக்கியம் :**

- சரும வறட்சியை நீக்குகிறது.
- சருமத்துக்குப் பொலிவைக் கொடுக்கிறது

4. எலும்பு ஆரோக்கியம்

- எலும்புகளுக்கு வலிமை கொடுக்கிறது.
- அதிக சுண்ணாம்புச் சத்து காரணமாக எலும்பும் பல்லும் உறுதியாகிறது.
- 'மெனோபாஸ்' காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் கால்சியம், பாஸ்பரஸ் இழப்பை ஈடு செய்கிறது.

**5. நரம்பு மண்டல ஆரோக்கியம்**

- நரம்புகளுக்கு வலிமை கொடுக்கிறது
- நரம்புத் தளர்ச்சியைப் போக்குகிறது

**6. நோய் எதிர்ப்பு சக்தி**

- உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது
- தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்கிறது.

**7. செரிமான மண்டல ஆரோக்கியம்:**

- நாட்பட்ட மலச்சிக்கலைப் போக்குகிறது
- குடல் சளியைப் போக்குகிறது

**8. பிற பயன்கள்**

- வியர்வையை அதிகரிக்கிறது
- சிறுநீரை நன்கு பிரித்து வெளியேற்றுகிறது
- உடல் உஷ்ணத்தைத் தணிக்கிறது
- ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது

# 3-10-2024 அன்று கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் தாஃவா



**இஸ்லாத்தை** வாழ்வியலாக ஏற்ற சகோதரிக்கு பண்ருட்டி AKS மஹாலில் *3-10-2024* அன்று திருமணம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் ஆரம்பமாக இஸ்லாம் ஓர் அறிமுகம், இஸ்லாத்தின் பிற சமய கண்ணோட்டம் என்ற தலைப்புகளில் உரைகள் நிகழ்த்தப் பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக "அன்பகம் மதரஸாவின்" ஆசிரியை ம.ஷாஹின் ஜைனப் அவர்கள் நான் பெற்ற இஸ்லாம் என்ற தலைப்பிலும், இஸ்லாமிய அழைப்பாளர் அப்துல்லாஹ் ஃபிர்தவ்ஸி அவர்கள் இஸ்லாம் சொல்லும் திருமணம், திருமணத்தின் பந்தம் எப்படி இருக்க வேண்டும் என்று அல்லாஹ் திருமணத்தை பற்றி அல் குர்ஆனின் கூறியுள்ள வசனங்களை ஓதிகாட்டி விளக்கம் கொடுத் தார்கள்.

இத்திருமண நிகழ்வில் சுமார் *150*க்கும் மேற்பட்ட சகோதர, சகோதரிகள் கலந்துக் கொண்டார்கள்.

தாருல் இஸ்லாம் சார்பாக சகோதர சமுதாயத்தவர்களுக்கு தீண்டாமையைக் கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், முஹம்மத் (ஸல்) ஓர் சகாப்தம், செந்தமிழ் நாட்டு சேரிகள் போன்ற புத்தகங்கள் மற்றும் உங்கள் இறைவன் யார்? என்ற தலைப்பின் பிரசுரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.





நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களான IPK இஸ்லாமிய பெண்கள் குழுவினால் அல்குர்ஆன் தமிழாக்கம், இஸ்லாம் ஓர் அழகிய அறிமுகம், இறை மார்க்கம் & இறை வேதம் ஓர் அறிமுகம் போன்ற புத்தகங்களும் அன்பளிப்பாக வழங்கப் பட்டது. இந்நிகழ்ச்சியை IPK இஸ்லாமிய பெண்கள் குழு சிறப்பாக ஏற்பாடு செய்திருந் தார்கள்.

செய்தி: அன்பகம் தாஃவா குழு - பண்ருட்டி



vaigarai velicham official

# கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் மக்கள் அதிகாரம் நடத்திய பாசிச மோடி அரசே 3 குற்றவியல் சட்டங்களை திரும்ப பெற விழிப்புணர்வு நிகழ்ச்சி










22-09-2024 கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் மக்கள் அதிகாரம் பாசிச மோடி அரசே 3 குற்றவியல் சட்டங்களை திரும்ப பெறு என்ற தலைப்பில் நடத்திய நிகழ்ச்சியில் நமது நீதி மற்றும் அமைதிகான மக்கள் இயக்கத்தை சார்ந்த வழக்கறிஞர் முஹம்மது சுலைமான் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார் மற்றும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் உமர் ஃபாரூக் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

# பாவ மன்னிப்பு

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள் :

ஆதமுடைய மக்கள் ஒவ்வொருவரும் பாவம் செய்பவர்களே. பாவம் செய்பவரில் சிறந்தவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுபவர்தான்.

"நம்பிக்கையாளர்களே! நீங்கள் அனைவரும் வெற்றி பெறுவதற்காக தவ்பாச் செய்து அல்லாஹ்வின் பால் மீளுங்கள்" (அந்நூர்:31)

சர்வ சாதாரணமாக பாவங்களை செய்து வாழ்ந்து வருகிறோம். தவ்பா தேடுவதை தாமதப்படுத்துகிறோம். இத்தகையாளர்களுக்குக் கேடுதான். உயிர் தொண்டை குழியை அடையும்போது மனிதன் துனியாவை மறக்கிறேன், மறுமையை பார்க்கிறேன். அப்போதுதான் விழிக்கிறான் பாவத்திலிருந்து விடுபட வேண்டும். ஆனால் அவனால் முடியாது. அல்லாஹ் அவனுடைய பாவமன்னிப்பை அப்போது ஏற்றுக்கொள்ளமாட்டான்.

"அல்லாஹ்விடம் தவ்பா அங்கீகரிக்கப்படுவதெல்லாம் அறியாமையினால் தீமை செய்து விட்டு பின்னர் (அதிலிருந்து) விரைவில் (பாவமன்னிப்புத் தேடி) தவ்பாச் செய்கிறார்களே அத்தகையவர்களுக்குத்தான். ஆகவே அத்தகையோரின் தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். மேலும் அல்லாஹ் அறிந்தவனாக தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கிறான். (அண்ணிஸா:17)

முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நபியவர்கள் ஒரு நாளைக்கு நூறு தடவை தவ்பாச் செய்வார்கள் என்றால், நாம் எத்தனை தடவைகள் செய்ய வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

நாம் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் நமது பாவங்களை மன்னிப்பதற்கு அல்லாஹ் தயாராக உள்ளான்.

"தங்கள் மீது (தாங்களே) அளவு கடந்து (பாவங்கள் செய்து) விட்டோராகிய என் அடியார்களே அல்லாஹ்வின் அருளிலிருந்து (அவன் மன்னிப்பை விட்டும்) நிராசையுற்றோராக நீங்கள் ஆகிவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் (உங்களுடைய) பாவங்கள் யாவையும் (நீங்கள் பிழை பொறுக்கத் தேடினால்) அவன் மன்னித்து விடுவான். ஏனென்றால் நிச்சயமாக அவன்தான் மிக்க மன்னிக்கிறவன். மிக்க கிருபையுடையவன் என்று (நபியே) நீர் கூறுவீராக..

இன்னும் (மனிதர்களே) உங்களுக்கு வேதனை வருவதற்கு முன்னதாக உங்கள் இரட்சகன் பால் (தவ்பாச் செய்து) நீங்கள் திரும்பி விடுங்கள். அவனுக்கு (முற்றிலும்) நீங்கள் கீழ்ப்படிந்தும் விடுங்கள். (வேதனை விட்டாலோ) பின்னர் (எவராலும்) உதவி செய்யப்பட மாட்டீர்கள். (அல்ஜுமர் : 53-54)

நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை மீறுவதால் ஏற்படும் பாவங்களிலிருந்து மீட்சிப் பெறுவதற்கு பாவ மன்னிப்பு தேடுவது போன்று நம்முடைய வாழ்வில் நம்மோடு பயனிக் கின்ற சக மனிதர்கள். ஆக நம் தாய்-தந்தை, சகோதர, சகோதரி, உறவினர்கள், நண்பர்கள், அண்டைவீட்டார், ஏன் நம்மைச் சுற்றி இருப்பவர்களிடம் நாம் ஏதேனும் அநீதம் இழைத்திருந்தால் சொல்லாலோ, செயலாலோ, துன்புறுத்தி இருந்தால் நாம் உடனே அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையென்றால் நாம் கைசேதப் பட்டுவிடுவோம்.

ஏனென்றால் நம்மால் பாதிக்கப்பட்டவர்கள் நமக்கு எதிராக பிரார்த்தனை செய்தால் அல்லாஹ் அதை ஏற்றுக்கொள்வான். நாளை மறுமையில் அவர்கள் நம்மை மன்னிக்காதவரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். இன்னும் அவர்களிடத்தில் நாம் செய்த அநீதத்திற்காக நம்முடைய நன்மைகள் பறிக்கப்படும். அல்லது அவர்களுடைய பாவங்களை நாம் சுமக்க நேரிடம். ஆகையால் பாவமன்னிப்பு கேட்கும் விஷயத்தில் நாம் ஒரு நிமிடம்கூட தாமதம் செய்யக்கூடாது.

"பாவங்களை விட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான். இன்னும் தூய்மையாக இருப்பவர்களையும் நேசிக்கிறான்." (அல்பகரா:222)

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்



# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |

| | | |
|---|---|---|
| 46. | **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**<br>எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 47. | **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி | - ரூ.150.00 |
| 48. | **இஸ்லாம் ஒன்றே வழி!**<br>அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.120.00 |
| 49. | **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு**<br>ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 50. | **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?**<br>ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ | - ரூ.300.00 |
| 51. | **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** | - ரூ.20.00 |
| 52. | **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** | - ரூ.100.00 |
| 53. | **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி**<br>கரன் ஆம்ஸ்ட்ராங் | - ரூ.20.00 |
| 54. | **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** | - ரூ.50.00 |
| 55. | **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** | - ரூ.50.00 |
| 56. | **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** | - ரூ.40.00 |
| 57. | **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** | - ரூ.60.00 |
| 58. | **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** | - ரூ.60.00 |
| 59. | **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** | - ரூ.25.00 |
| 60. | **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** | - ரூ.20.00 |
| 61. | **அயா சோபியா உருவான வரலாறு** | - ரூ.50.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 01. | **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்**<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | - ரூ.100.00 |
| 02. | **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்**<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | - ரூ.100.00 |
| 03. | **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்**<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, | - ரூ.170.00 |
| 04. | **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?**<br>தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.140.00 |
| 05. | **பலி கடாக்கள்** | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

1. **END OF CASTEISM** - T.M. Umar Farooq, - **Rs.50.00**
   English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam
2. **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media - **Rs.695.00**
3. **MUHAMMED THE PROPHET FOR OUR TIME** - **Rs.325.00**
   Karen Armstrong
4. **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi - **Rs.350.00**
5. **WHO KILLED KARKARE** - **Rs.300.00**
   The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS,
6. **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif - **Rs.275.00**
7. **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION** - **Rs.60.00**
   Kamaluddin Ahamed
8. **MUSLIMS AGAINST PARTITION OF INDIA** - **Rs.280.00**
   Shamsul Islam, Pharos Media
9. **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN** - **Rs.25.00**
   (EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed
10. **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE** - **Rs.150.00**
    Nilofar Suhrawardy
11. **Innocent Prisoners** - **Rs.495.00**
12. **Brahminists Bombed Muslims Hanged** - **Rs.350.00**
13. **Kodikkal- TheLiving Witness of Social Justice** - **Rs.300.00**

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் - ரூ.60.00
02. **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி** - ரூ.30.00
    கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002